




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:246 | 22-03-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

22.03.2026 பங்குனி 8
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.18

திதி:
இன்று அதிகாலை 2.27 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 2.55 வரை அசுவினி பின்பு பரணி

யோகம் :
இன்று மாலை 6.05 வரை வைதிருதி பின்பு விஷ்கம்பம்.

கரணம்
இன்று அதிகாலை 2.27 வரை கரசை பின்பு மாலை 5.06 வரை வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 2.55 வரை உத்திரம் பின்பு அஸ்தம்

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30.

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று ரம்ஜான் பண்டிகை

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## வாட்ஸ் அப்பில் வரும் வேற லெவல் அப்டேட்: இனி ஆடியோ கால்கள் தெளிவாக பேசலாம்


செய்தி உள்ளே


# நடன்ஸ் அணுசக்தி நிலையத்தை அமெரிக்க, இஸ்ரேல் படைகள் தாக்கியதாக ஈரான் தகவல்

**தெஹ்ரான், மார்ச் 22:**

ஈரானின் அணுசக்தி அமைப்பு வெளியிட்ட அறிக்கை குறித்து தஸ்னிம் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், ஈரானின் நடன்ஸ் அணுசக்தி நிலையம் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்தியதாக ஈரானின் அணுசக்தி அமைப்பு தெரிவித்துள்ளது. இன்று காலை இந்த தாக்குதல் நடந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், கதிரியக்கக் கசிவு குறித்து எந்த தகவலும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது நாட்டின் எதிரிகளுக்கு தலைசுற்ற வகைக்கும் அடியை கொடுத்ததாக ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி கூறிய நிலையில், சவுதி அரேபியா மற்றும் இஸ்ரேல் மீது ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களின் புதிய அலையை ஈரான் தொடங்கியுள்ளது.



இஸ்ரேலின் பென் குரியன் விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் விமானங்களை ஆளில்லா விமானங்கள் மூலம் குறிவைத்ததாக ஈரானிய ராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும், அமெரிக்காவுக்கு ஆதரவாக உள்ள வளைகுடா நாடுகள் மிதும் ஈரான் தாக்குதலை தொடங்கியுள்ளது. குறிப்பாக, வளைகுடா நாடுகளின் எண்ணெய் வளங்களை குறிவைத்து இந்த தொடர் தாக்குதல்களை ஈரான் நடத்தி வருகிறது. இது ஈரானின் 70-வது தொடர் தாக்குதல் என அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

**ஐக்கிய அரபு அமீரகத்துக்கு அச்சுறுத்தல்:** ஈரானுக்கு எதிராக ஐக்கிய அரபு அமீரகத்தின் நிலப்பரப்பில் இருந்து மேலும் ஏதேனும் தாக்குதல் நடத்தப்பட்டால் ராஸ் அல் கைமா துறைமுக நகரை நொறுக்குவோம் என்று ஈரான் ராணுவம் எச்சரித்துள்ளது.

**பஹ்ரைன் மீது தாக்குதல்:** ஈரானில் இருந்து ஏவப்பட்ட மேலும் இரண்டு ஏவுகணைகளை பஹ்ரைனின் பாதுகாப்புப் படைகள் இடைமறித்து அழித்துள்ளன. பிப்.28 முதல் இதுவரை மொத்தம் 143 ஏவுகணைகளையும், 242 ஆளில்லா விமானங்களையும் அழித்துள்ளதாக பஹ்ரைன் தெரிவித்துள்ளது.

**சவுதி அரேபியா:** தங்கள் நாட்டின் கிழக்குப் பகுதியில் ஏவப்பட்ட அதிக அளவிலான ஆளில்லா விமானத் தாக்குதல்களை சவுதி அரேபியா இடைமறித்து அழித்ததாக அதன் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

மூன்று மணி நேரத்துக்குள் 38 ஆளில்லா விமானங்களைக் கொண்ட ஒரு வலுவான தாக்குதல் உட்பட 47 விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக சவுதி அரேபிய படைகள் தெரிவித்துள்ளன.

**குவைத் ஆலை மீது தாக்குதல்:** குவைத்தின் மினா அல்-அஹ்மதி சுத்திகரிப்பு ஆலை மீது ஈரான் நேற்று தாக்குதல் நடத்தியது. இதில், நாள் ஒன்றுக்கு சுமார் 7,30,000 பீப்பாய் எண்ணெயை சுத்திகரிக்கும் திறன் கெண்ட மிகப் பெரிய ஆலையில் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தப் போர் இன்று 4-வது வாரத்தை எட்டியுள்ள நிலையில், இந்த போர் காரணமாக ஈரானில் இதுவரை 1,400-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 204 குழந்தைகள் உட்பட 1,444 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஈரான் கூறியுள்ளது.

# ஈரான் அதிபருடன் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடல்

**புதுடெல்லி, மார்ச் 22:**

ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடிவிட்டது. இதனால் அந்த வழியாக எண்ணெய் சரக்கு கப்பல்கள் போக்குவரத்து தடைபட்டுள்ளது. இதன் விளைவாக சர்வதே சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில், இந்தியா உள்பட பல்வேறு நாடுகளில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகி உள்ளது.

இந்த நிலையில், ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியானுடன் பிரதமர் மோடி தொலைபேசியில் இன்று உரையாடியுள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;-

"ஈரான் அதிபர் டாக்டர் மசூத் பெசெஷ்கியானுடன் தொலைபேசியில் பேசி ரம்ஜான் ற்றும் நவ்ரூஸ் வாழ்த்துகளைத் தெரிவித்தேன். இந்த பண்டிகைக் காலம் மேற்கு ஆசியாவிற்கு அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பைக் கொண்டுவரும் என நம்பிக்கை தெரிவித்தேன்.



பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாகவும், உலகளாவிய விநியோக சங்கிலிகளை சீர்குலைக்கும் வகையிலும் மேற்காசிய பிராந்தியத்தின் முக்கிய உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்தேன்.

கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும், கப்பல் வழித்தடங்கள் திறந்தும், பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதிசெய்வதன் அவசியத்தையும் மீண்டும் வலியுறுத்தினேன். ஈரானில் உள்ள இந்திய குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கான ஈரானின் தொடர்ச்சியான ஆதரவுக்கு பாராட்டு தெரிவித்தேன்."

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# 100 கோடி டன் நிலக்கரி உற்பத்தி; தொடர்ந்து 2-வது ஆண்டாக சாதனை

**சென்னை, மார்ச் 22:**

நாட்டில் தொடர்ந்து 2-வது ஆண்டாக 100 கோடி டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டு உள்ளது என மத்திய நிலக்கரி அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

இதனால், எரிசக்தி துறையில் சுய சார்புடன் இருப்பதில் நாடு வளர்ச்சி கண்டு வருவதுடன், முக்கிய ஆலைகளுக்கு தேவையான எரிபொருள் வினியோகம் தடைபடாமல் இருப்பதும் உறுதி செய்யப்படுவதில், அரசு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருவது தெரிய வந்துள்ளது. இது முக்கிய மைல்கல்லாகும். இதன் தொடர்ச்சியாக நிலக்கரி சார்ந்த அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு, அபரிமித அளவிலான நிலக்கரி இருப்பை பராமரித்து மின் துறைக்கு ஆதரவான செயல்பாட்டை அரசு எடுத்து வருகிறது. இதனை மத்திய நிலக்கரி அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

# தமிழ்நாட்டின் வளர்ச்சி முழுமையடைய திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, மார்ச் 22:**

தமிழ்நாட்டின் வளர்ச்சி முழுமையடைய, அடுத்த 5 ஆண்டுகளும் திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும் என்றும் அதற்கு மக்கள் திமுகவுக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமீபத்தில் கனவு மெய்ப்படும் நிகழ்ச்சியில் 'ஸ்டாலின் வாக்குறுதிகள்' என்ற 14 முக்கிய வாக்குறுதிகளை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

இதனைக் குறிப்பிட்டு முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில்,

"தமிழ்நாட்டின் வளர்ச்சி முழுமையடைய, அடுத்த 5 ஆண்டுகளும் திராவிட மாடல் தொடர வேண்டும்! அடுத்த 5 ஆண்டுகளில், துறைவாரியாக நான் நிர்ணயித்துள்ள வளர்ச்சி இலக்குகளை ஸ்டாலின் வாக்குறுதிகள் என்ற பெயரில் வெளியிட்டிருந்தேன்.

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் உத்தமர் காந்தி மாதிரி கிராமங்கள் திட்டம்

தொழில் துறை சார்பில் 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

கால்நடை - பால்வளம் மற்றும் மீன்வளத்துறை சார்பில் பால் உற்பத்தி உயர்வு - மீனவர்கள் வாழ்வு மேம்பாடு

நகராட்சி நிருவாகத் துறை சார்பில் உட்கட்டமைப்பில் உலகளவில் உயரும் நம் நகரங்கள்

சிறு - குறு நடுத்தரத் தொழில் துறை சார்பில், 5 சிறப்புத் தொழில் குழுமங்கள் அமைக்கப்படும்

நெடுஞ்சாலைத் துறை சார்பில் பாதுகாப்பான நவீன சாலை தொழில்நுட்பம்



கைத்தறி மற்றும் ஜவுளித்துறை சார்பில் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைமேம்படுத்தும் சிறப்பான திட்டங்கள்

வீட்டு வசதித் துறையின் சார்பில் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் சேர்த்து 7 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தேவைப்படும் அனைவருக்கும் போதிய மருத்துவக் காப்பீடு

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் சாகுபடி பரப்பு அதிகரிக்கப்படும்

பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஸ்மார்ட் கிளாஸ் ரூம், லைப்ரரி 5.0, வெற்றிப்பள்ளிகள் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள்

உயர்கல்வித்துறை சார்பில் நான் முதல்வன் 2.0 திட்டம் உள்ளிட்ட திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பொருளாதார முன்னேற்றம்

ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் ஒவ்வொருவருக்கும் வீட்டுமனைப் பட்டா

இவற்றை அடையவும், தமிழ்நாடு வெல்லவும் திமுகவுக்கு வாக்களியுங்கள்" என்று பதிவிட்டுள்ளார்.

# போர் அச்சுறுத்தல்! பேச்சுவார்த்தை ஒன்றே வழி

**புதுச்சேரி, மார்ச் 22:**

உலகளாவிய போர் அச்சுறுத்தல்களுக்கு தீர்வு காண்பதற்கான ஒரே வழி பேச்சுவார்த்தைதான் என குடியரசுத் துணைத்தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்திய இளைஞர் நாடாளுமன்றத்தின் 29 வது தேசிய அமர்வின் கூட்டம் நாக்பூரில் உள்ள ஆர்.எஸ்.எஸ். அரங்கில் நடைபெற்றது.

நான்கு நாள்கள் நடைபெறும் இந்த நிகழ்வின் கருப்பொருள் 'இந்திய மொழிகள் மற்றும் வளர்ந்த இந்தியா - 2047' என்பதாகும்.

அங்கு உரையாற்றிய அவர், "தாய்மொழியில் பேசுவது என்பது பிராந்தியத்தைக் குறிப்பதல்ல; மாறாகத் தனித்துவத்தைக் குறிப்பதாகும்.

உலகம் முழுவதும் போரின் அச்சுறுத்தலில் இருக்கும்போது, பேச்சுவார்த்தை மட்டுமே தீர்வுகளுக்கு வழிவகுக்கும். ஆரோக்கியமான விவாதம், மாறுபட்டகண்ணோட்டங்களைக்



கேட்டறிதல் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகளைக் கண்டறிதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இந்நிகழ்வு நமக்குக் கற்றுத் தருகிறது.

மொழிகள் குறித்த இந்தத் தலைப்பு காலத்தின் தேவையாகும். நாட்டில் எண்ணற்ற மொழிகள் உள்ளன. ஒவ்வொருவரும் தங்கள் தாயை நேசிக்கிறார்கள். அதேபோல, ஒவ்வொருவரும் தங்கள் தாய்மொழியை நேசிக்கிறார்கள்.

ஆனால் அதற்காக நாம் மற்றொருவரின் தாயை மதிக்கக் கூடாது என்று அர்த்தமல்ல. நாம் நமது தாய்மொழியில் பேசும்போது, வட்டார வழக்கில் பேசுவதில்லை. வட்டார வழக்கில் பேசுவதுதான் நமது தனித்துவம்" என்று வலியுறுத்தினார்.

# நிலுவையில் உள்ள வழக்கு விவரங்களை ஊடகங்களில் விளம்பரம் செய்ய வேண்டும்

**சென்னை, மார்ச் 22:**

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நிலுவையில் உள்ள வழக்குகள் விவரங்களை விளம்பரம் செய்ய வேண்டும் என தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகள் அல்லது தண்டனை விவரங்களை உரிய படிவங்களில் செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்ய வேண்டும்.



அதேபோல், அத்தகைய வேட்பாளர்களை நிறுத்தும் அரசியல் கட்சிகளும் அந்த விவரங்களை ஊடகங்கள் மற்றும் கட்சியின் அதிகாரப்பூர்வ வலைதளங்களில் வெளியிட வேண்டும்.

தேர்தல் ஆணையம் இதற்கென பிரத்யேக படிவங்களை வரையறுத்துள்ளது. வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளுக்கு அடுத்த நாள் முதல், வாக்குப்பதிவு முடிவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பு வரை 3 முறை வெவ்வேறு நாட்களில் இந்த விளம்பரங்களை வெளியிட வேண்டும்.

வேட்பாளர் தேர்வு செய்யப்பட்ட 48 மணி நேரத்துக்குள் அல்லது வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு 2 வாரங்களுக்கு முன்பாகவே (இதில் எது முந்தையதோ அதன்படி) விவரங்களை வெளியிட வேண்டும்.

இது தொடர்பான அறிக்கையை அடுத்த 72 மணி நேரத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பான முழுமையான அறிவுரைகள், அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பட்டியலை அறிந்து கொள்ள பொதுமக்கள் மற்றும் வேட்பாளர்கள் www.elections.tn.gov.in என்ற இணையதளத்தை பார்வையிடலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.







# திருக்குறள் குறள்-566

**கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின்
நெடுஞ்செல்வம் நீடின்றி ஆங்கே கெடும்**



கடுஞ்சொல் உடையவனாய்க் கண்ணோட்டம் இல்லாதவனாய் உள்ளவனுடைய பெரிய செல்வம் நீடித்தல் இல்லாமல் அப்பொழுதே கெடும்.

## சிந்திக்க ஒரு நொடி



பலம் என்பது நம்மிடம் இருக்கும்
உடலில் இருந்து பிறப்பதல்ல...
நம் ஆழ் மனதில் இருந்து பிறப்பதே
என்பதை உணர்ந்தால் வெற்றி நிச்சயம்

**உஷாமுத்துராமன்**

## ஸ்ரீராமநவமி உத்ஸவம்



ஸ்ரீராமநவமி உத்ஸவம் நாள்-3 ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸ்ரீராமர் கருட வாகனம் பெரியமாடவீதி புறப்பாடு @ Triplicane partha sarathi perumal Kovil Chennai

## விஸ்வாவசு வருட பிரம்மோற்சவம்



வேதசார விமானம் - ஸ்ரீ யதோக்தகாரி ஸ்வாமி விஸ்வாவசு வருட பிரம்மோற்சவம் ஒன்பதாம் திருநாள் இரவு நாள் பங்குனி 6 (20/3/26) திருவெஃகா திவ்யதேசம். காஞ்சிபுரம்.

## வாணியம்பாடி ஈத்கா மைதானத்தில் தொழுகை



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி ஈத்கா மைதானத்தில் முஸ்லிம்களின் புனித ரமலான் திருநாள் முன்னிட்டு ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி தொழுகை நடத்தினர்

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சீர்காழி கிளை சார்பில் ரமலான் பண்டிகை சிறப்பு தொழுகை

**சீர்காழி , மார்ச் , 22:**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கிளை தமிழ் நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பாக விளந்திடசமுத்திரத்தில் உள்ள டிஎன்டிஜெ மர்கஸ் அருகில் உள்ள திடலில் ரமலான் பண்டிகை சிறப்பு தொழுகை நடைபெற்றது,

இந்த சிறப்பு தொழுகையில் நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும் கலந்து கொண்டனர்.

தொழுகைக்கு பிறகு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாவட்ட பேச்சாளர் எம். நைஜர் அலி தொழுகையில் ஒரு அங்கமான குத்பா எனப்படும் உரை நிகழ்த்தினார்.



தன் உரையில் 30 நாட்கள் நோன்பிருந்தது இறையச்சத்தை அதிகரிப்பதற்கான ஒரு அழகிய பயிற்சி, வெறும் பசியோடும் தாகத்தோடும் இருந்ததோடு மட்டும் அல்லாமல் தவறான பேச்சுகளையும் நடவடிக்கைகளையும் விட்டு விலகி இருந்து நாம் எடுத்த பயிற்சி நம் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும் என்றார்.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை குறித்து கவலைப்படாமல் தங்களின் பொருளாதார , பிராந்திய நலனுக்காக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஈரான் மீது நடத்தி வரும் போர் கண்டனத்திற்குரியது, உலக நலன் கருதி மற்ற நாடுகள் தலையிட்டு இப்போரை உடனடியாக நிறுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும், வளைகுடா நாட்டில் பெருநாளை நிம்மதியாக கொண்டாட முடியாமல் சிக்கி தவிக்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்காக நாங்கள் உளமாற பிரார்த்திக்கின்றோம் என்று கூறினார்.

அதே போல் பல மாநிலங்களில் தேர்தல் நடைபெற உள்ள நேரத்தில் பாசிச, பிரிவினைவாத சக்திகளை மக்கள் புறக்கணித்து இந்தியாவினுடைய நீண்ட கால நலனை உறுதி செய்ய வேண்டும் என்றும் தன் உரையில் அறிவுறுத்தினார்.

ஏழை எளிய மக்களும் இப்பெருநாளை சந்தோஷமாக கொண்டாட வேண்டும் எனும் நோக்கில் தொழுகைக்கு முன்னரே கட்டாயமாக கொடுக்க வேண்டிய பித்ரா எனும் தருமத்தை ஏழை எளிய மக்களுக்கு வழங்கியவர்களாக ஆயிரக்கணக்கான மக்கள் இத்தொழுகையிலும் , அதன் பிறகான குத்பா உரையிலும் கலந்து கொண்டார்கள், தொழுகை மற்றும் குத்பா உரைக்கு பிறகு பொதுமக்களுக்கு எந்த வித இடையூறும் இல்லாத வகையில் அழகிய முறையில் மக்கள் கலைந்து சென்றனர்.

# செய்யாறு அடுத்த அனக்காவூர் அ.தி.மு.க., மேற்கு ஒன்றியத்தில் 15 வாக்குறுதிகள் குறித்து துண்டு பிரசுரங்கள் கிராம மக்களுக்கு வழங்கல்!

**செய்யாறு, மார்ச் 22:**

செய்யாறு அருகே சட்டமன்ற தேர்தலையொட்டி அ.தி.மு.க., பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்த முதற்கட்ட 15 தேர்தல் வாக்குறுதிகள் குறித்த துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு அதிமுகவினர் வழங்கினர்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்த அனக்காவூர் மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட அனக்காவூர், அத்திகுளம், விநாயகபுரம் உள்ளிட்ட கிராம பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி அனக்காவூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செய்யாற்றை வென்றான் துரை ஏற்பாட்டில் நடந்தது.



நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தூசி மோகன் மற்றும் முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டு வீடு வீடாகச் சென்று அ.தி.மு.க., ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் குறித்து விளக்கி பிரச்சாரம் மேற்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் அ.தி.மு.க., நிர்வாகிகளான அரங்கநாதன், சேகர், நகர செயலாளர் வெங்கடேசன், ஜனார்த்தனன், பூக்கடை கோபால், கோவிந்தராஜ், சுரேஷ், கன்னியப்பன், பொன்னுரங்கம், வெங்கடேஷ், சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீபாண்டுரங்கன் ராஜ அலங்காரம்.



தென்னாங்கூர் ஸ்ரீபாண்டுரங்கன் ராஜ அலங்காரம்.

## தேர்தல் குறித்து விழிப்புணர்வு




**திருவண்ணாமலை மார்ச் 22:**

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுய புகைப்பட மையத்தில் (selfie point ) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# உலக நீர் தினம் – 2026

உலக தண்ணீர் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. 1993-ஆம் ஆண்டு முதல் மார்ச் மாதம் 22-ஆம் தேதியை உலக தண்ணீர் தினமாக கொண்டாடி வருகிறோம். ஆனால் நீர் சிக்கனம் என்பது ஒவ்வொரு மனிதனிடமும் இன்றுவரை காணப்படவில்லை என்பது தான் உண்மை. நீர்வளத்தைக் காப்பதும், அதனை பெருக்குவது குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் உலக தண்ணீர் தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

நீர் இன்றி அமையாது உலகு என்பதற்கு ஏற்ப, நீரின்றி நாம் வாழ இயலாது என்பதும் நன்கு அறிந்ததே. பூமியில் 30 விழுக்காடு மட்டுமே நிலப்பரப்பாகும். மீதமிருக்கும் 70 விழுக்காடும் நீர்பரப்புதான். ஆனால், இன்று அந்த 30 விழுக்காட்டில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான நீரை அளிக்கும் போதிய வசதியை பூமி இழந்து வருகிறது.

உலக நாடுகளில் 40 சதவீத மக்கள் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள்.ஆனால் உரிய முறையில் நீரை மறுசுழற்சி செய்தால் அந்த தட்டுப்பாடு குறையும் என்கின்றனர் நீரியல்




ஆய்வாளர்கள்.

இதுமட்டுமின்றி அன்றாடம் செய்யும் சிறுசிறு வேலைகளும் தண்ணீர் சேமிப்புக்கு வழிவகுக்கும். பல் துலக்கும் போது குழாயை அடைத்துவிட்டு பல் துலக்கலாம் இதன்மூலம் நிமிடத்திற்கு 6 லிட்டர் தண்ணீரை சேமிக்க முடியும், தண்ணீர் குழாயை பயன்படுத்தி முடித்த பிறகு மறக்காமல் குழாயை அடைப்பதும் வீணாக திறந்திருக்கும் குழாய்களை பார்த்தால் அதை அடைப்பதும் தண்ணீர் சேமிப்பிற்கு வழிவகுக்கும்.

தண்ணீர் தொட்டிக்கு மோட்டார் மூலம் தண்ணீர் ஏற்றும்போது தண்ணீர் நிரம்பி வீணாகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். புதியதாக வீடு மழைநீர் சேகரிப்பு தொட்டியையும் சேர்த்து கட்டுவதன் மூலம் நீர் வீணாகாமல் பார்த்து கொள்வதோடு சேமிக்கவும் முடியும். உலக தண்ணீர் தினத்தை ஒரு நாளாக மட்டும் கடைபிடிக்காமல் ஒவ்வொரு நாளும் தண்ணீரின் தேவையையும், சிக்கனத்தையும் மனதில் வைத்தே செயல்பட வேண்டும். தண்ணீர் குடிக்காமல் உங்களால் எத்தனை நாட்கள் அதிகபட்சமாக வாழ்ந்திட வாழ முடியும்?. ஒரு வாரம் கூட என வைத்துக்கொள்வோம். ஆனால் அதற்கு மேல் நம்மால் வாழ முடியாது. எனவே தண்ணீரின் அவசியத்தை உணர்ந்து ஒவ்வொரு துளி தண்ணீரையும் காப்பது நம் தலையாய கடமை.



**தொகுப்பு: பா.சீனிவாசன், துணைத் தலைவர், எக்ஸ்னோரா இன்டர்நேஷனல், வந்தவாசி கிளை.**

## திருநாங்கூர் திவ்ய தேசம்

ஸ்ரீராஜகோபால ஸ்வாமி திருக்கோயில் பங்குனி ரோஹிணி ப்ரம்மோற்சவம் ஐந்தாம் நாள் இரவு ஹனுமந்த வாகனம் புறப்பாடு



# மனவளக்கலை மன்ற காயகல்ப பயிற்சியின் நன்மைகள்

**ஈரோடு, மார்ச் 22:**

20.03.2026 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஈரோடு மாவட்டம், மொடக் குறிச்சி வட்டாரத்தில் செங்கரைப் பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் காயகல்ப பயிற்சியில் கலந்து கொண்டோர்.

பயிற்றுனர் பேராசிரியர் R.பாலமுருகன். வசீகரமான முகப்பொலிவு பெறவும், இளமையோடு வாழவும், உடலில் உயிர் சக்தியை பெருக்கி கொள்ளவும், வாழும் நாளை தள்ளிப் போடவும் மிகவும் அவசியமானது இந்த காயகல்ப பயிற்சி ஆகும்.



தினமும் மூன்று வேளையும் ஐந்து ஐந்து நிமிடமே பயிற்சி காலம். செங்கரைப்பாளையம் அறிவுத்திருக்கோவிலில் ஆண் பெண் இரு பால் அன்பர்களுக்கும் இலவசமாக பயிற்சி கொடுத்து வருகிறார்கள். வாருங்கள், காயகல்பம் பயிலுங்கள், நீண்டநாள் இளமையோடு வாழுங்கள் என்று அன்புடன் அழைக்கிறோம். நன்றி! வணக்கம்!

வாழ்க வளமுடன்

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### விருப்பப் பட்டியலிலும் வில்லங்கம் - தவறான பட்டியல் வெளியானதாக காங். கதறல்



திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள், தேமுதிக, மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட 26 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இந்தக் கட்சிகளுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையானது பிப்ரவரி 22-ம் தேதி தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இதில் காங்கிரஸுக்கு 28, இந்திய கம்யூ. 5, மதிமுக 4, முஸ்லிம் லீக், மமக கட்சிகளுக்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதர கட்சிகளுடன் திமுக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இந்நிலையில் காங்கிரஸ், மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் தாங்கள் போட்டியிட விரும்பும் தொகுதிகள் அடங்கிய விருப்பப் பட்டியலை திமுக தலைமையிடம் வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது. அதன்படி மதிமுக சார்பில் மதுரை தெற்கு, திருச்சி கிழக்கு, கோவில்பட்டி, மணப்பாறை, சாத்தூர், பல்லடம், வேளச்சேரி, கிணத்துக்கடவு, பாளையங்கோட்டை, புவனகிரி ஆகிய 10 தொகுதிகள் அடங்கிய பட்டியல் தரப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதிலிருந்து 4 தொகுதிகளை திமுக தங்களுக்கு ஒதுக்கும் என எதிர்பார்க்கிறது மதிமுக. இதில் ஒரு தொகுதியில் மட்டும் தனிச் சின்னத்தில் போட்டியிட முடிவெடுத்திருக்கும் அந்தக் கட்சி அந்தத் தொகுதியில் வைகோவை நிறுத்தலாம் என்றும் தெரிகிறது.

இதேபோல், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தங்கள் பங்குக்கு தளி, பவானிசாகர், திருப்பூர் தெற்கு உள்ளிட்ட 15 தொகுதிகள் அடங்கிய விருப்பப்பட்டியலை வழங்கியுள்ளதாக சொல்லப்படுகிறது. காங்கிரஸ் தரப்பிலும் கிள்ளியூர், நாங்குநேரி, விளவங்கோடு, கோவை தெற்கு, காரைக்குடி, அறந்தாங்கி, தென்காசி, வேளச்சேரி, உதகை என 39 தொகுதிகள் கொண்ட விருப்பப் பட்டியலை திமுக-விடம் அளித்துள்ளதாக தகவல்கள் வெளியாகின. ஆனால், அந்தப் பட்டியல் தவறானது என்றும், அதிகாரபூர்வ அறிவிப்புகளை மட்டுமே பின்பற்ற வேண்டும் எனவும் காங்கிரஸ் விளக்கம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### "எங்கள் கூட்டணியால் பலருக்கு நடுக்கம் ஏற்பட்டுள்ளது" - ராமதாஸ் - சசிகலா கூட்டாக அறிவிப்பு



முன்னொரு காலத்தில் தேர்தலுக்குத் தேர்தல் வெற்றிக் கூட்டணியில் அங்கம் வகித்து சாணக்கியராகச் செயல்பட்ட பாமக நிறுனவர் ராமதாஸ் இந்தத் தேர்தலுக்கு சசிகலாவுடன் கூட்டணி சேர்ந்திருக்கிறார்.

அண்மையில் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்தில் இணைந்து அதன் பொதுச்செயலாளராக தன்னை அறிவித்துக் கொண்ட சசிகலா, கடந்த 10-ம் தேதி ராமதாஸை சந்தித்துப் பேசினார். மீண்டும் நேற்று மாலை தைலாபுரத்தில் நடைபெற்ற ராமதாஸ் - சசிகலா சந்திப்புக்குப் பிறகு, பாமக-வும் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகமும் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கவிருப்பதாக ராமதாஸ் மகிழ்வுடன் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து ராமதாஸும் சசிகலாவும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது "ராமதாஸுடன் இணைந்து தேர்தலைச் சந்திக்கிறோம்" என்று சசிகலா ஒற்றை வரியில் முடித்துக் கொண்டார். தொடர்ந்து பேசிய ராமதாஸ், "அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து தேர்தலைச் சந்திப்பது என முடிவு செய்து ஒப்பந்தம் செய்துள்ளோம். இக்கூட்டணி வெற்றிக் கூட்டணி. இது மிகப்பெரிய வெற்றியை பெற்று, தமிழகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். இதனால் பலருக்கு நடுக்கம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் 234 தொகுதிகளிலும், புதுச்சேரியிலும் போட்டியிட உள்ளோம். கொள்கை அளவில் உறுதியாக இருக்கும் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறோம். விருப்பம் தெரிவிப்பவர்களை இணைப்பது குறித்து அம்மையார் சசிகலாவுடன் இணைந்து முடிவு செய்யப்படும். தமிழக மக்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. கூட்டணி அமைப்பதில் தாமதம் ஏற்படுவது, சில நேரங்களில் நடக்கும்" என்றார்.

## "4 நாட்களில் தொகுதி பங்கீடு இறுதி செய்யப்படும்" - அமித் ஷா சந்திப்புக்குப் பின் இபிஎஸ் உறுதி



தேசிய ஜனநாயக கூட்டணியில் இன்னும் 4 நாட்களில் தொகுதி பங்கீடு இறுதியாகும் என்று, மத்திய அமைச்சர் அமித் ஷாவை சந்தித்த பின், டெல்லியில் நேற்று அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இன்னும் தொகுதி பங்கீடு இறுதிசெய்யப்படவில்லை. இந்நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று முன்தினம் டெல்லி சென்று அமித் ஷாவை சந்தித்தார்.

அப்போது, கூட்டணி கட்சிகள் கேட்கும் தொகுதிகள் எண்ணிக்கை, உதிரிக் கட்சிகள் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து அமித் ஷாவிடம் பழனிசாமி விளக்கியதாகவும், பாமக, அமமுக போன்ற கட்சிகளுக்கு ஒதுக்க உள்ள தொகுதிகள் எண்ணிக்கை தொடர்பாக கொஞ்சம் விட்டுக்கொடுத்துச் செல்ல அறிவுறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த சந்திப்புக்குப் பின் நேற்று காலை சென்னை புறப்படுவதற்காக டெல்லி விமான நிலையம் வந்த பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது: அமித் ஷாவுடனான சந்திப்பில் தமிழக அரசியல் குறித்து கலந்தாலோசித்தேன். நான்கைந்து மாநிலங்களில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், உள்துறை அமைச்சருக்கு பணிச்சுமை அதிகம்.

அதனால் நான் வந்து அவரைப் பார்த்துவிட்டுப் போகிறேன். நாளை (மார்ச் 21) மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் சென்னை வருகிறார். இன்னும் 4 நாட்களில் தொகுதி பங்கீடு எல்லாம் இறுதி செய்யப்படும். 234 தொகுதிகளும் வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள் தான். அவரவருக்கு எங்கு வெற்றி வாய்ப்பு உள்ளதோ, அதையெல்லாம் அமர்ந்து பேசி முடிவு செய்வோம். இன்னும் ஒரு வாரத்தில் தேர்தல் அறிக்கை வெளியிடப்படும்.

தவெக-வுடன் நாங்களும் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை. பேச்சுவார்த்தை நடத்தவில்லை என விஜய்யும் தெரிவித்துவிட்டார். இந்த கூட்டணிக்கு தலைமை அதிமுக. எங்களைப் பொறுத்தவரை எங்கள் கூட்டணி கட்சித் தலைவர்கள் யாரும் அவர்களை சந்தித்துப் பேசவில்லை. அவர்களும் எங்களை சந்தித்துப் பேசவில்லை. எல்லா கட்சிகளும் அந்தந்த கூட்டணியில் சேர்ந்துவிட்டன. இனி தேர்தலை நோக்கி பயணம் செய்ய வேண்டும். அன்புமணியும், டிடிவி. தினகரனும் தமிழக அரசியல் சூழல் குறித்து கலந்து பேச டெல்லி வருகின்றனர்.

திமுக அமைக்கும் கூட்டணி மாதிரி எங்கள் கூட்டணி இல்லை. அமைதியாக, அழகாக, அற்புதமாக கூட்டணி பேசுவார்த்தையை முடித்து தொகுதி பங்கீடு பட்டியல் வெளியிடப்படும். எங்கள் கூட்டணியில் எந்தச் சிக்கலும் கிடையாது. எங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து, யார் யாருக்கு எந்தெந்த இடத்தில் வெற்றி வாய்ப்பு இருக்கிறதோ, அந்தந்த தொகுதியை அவர்கள் பெறுவதுதான் எங்கள் நோக்கம். அதிமுக தலைமையில் 234 தொகுதியிலும் போட்டியிடுகிறோம். 234 தொகுதியிலும் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கத்தில்தான் தேர்தலைச் சந்திக்கிறோம்.

நாங்கள் 31 ஆண்டு காலம் தமிழகத்தில் ஆட்சியில் இருந்த கட்சி. பல தேர்தல்களை சந்தித்த கட்சி. எங்களுக்கு வெற்றிவாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. 2011 முதல் 2021 வரை அதிமுக ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களைக்கொடுத்துள்ளோம். மத்திய அரசிடம் இருந்தும் பல திட்டங்களைப் பெற்று நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். மாநில அரசிலும் நிறைய திட்டங்களை கொடுத்திருக்கிறோம்.

ஆனால் திமுக ஆட்சியில், இந்த 5 ஆண்டுகளில் எந்த புதிய, பெரிய திட்டமும் வரவில்லை. சட்டம் - ஒழுங்கு அடியோடு சீர்குலைந்துள்ளது. கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி, பாலியல் வன்கொடுமை நடக்காத நாளே இல்லை. இவர்களின் ஒரே சாதனை ஊழல் செய்ததுதான். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஏற்கெனவே பிரச்சாரம் தொடங்கப்பட்டு, எக்ஸ்பிரஸ் வேகத்தில் போகிறது.

ஏற்கெனவே பிரதமர் 3 முறை தமிழகத்துக்கு வந்து மதுராந்தகம், மதுரை, திருச்சியில் பிரம்மாண்ட தேர்தல் பிரச்சார கூட்டம் நடைபெற்றுள்ளது. இப்போது பல மாநிலங்களில் தேர்தல் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு ஏற்ப தமிழகத்துக்கு தேசிய ஜனநாயக கூட்டணி முதல்வர்கள் வருவார்கள். இவ்வாறு அவர் கூறினார். இந்த சந்திப்பின்போது, அதிமுக எம்பி-க்கள் தம்பிதுரை, தனபால் ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழக சட்டமன்ற தேர்தலை நிறுத்தி வைக்க கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு



தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் 23-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. வேட்புமனு தாக்கல் வரும் 30 ஆம் தேதி தொடங்குகிறது. வேட்பு மனு தாக்கல் செய்ய 30 ஆம்தேதி கடைசிநாளாகும். மாநிலத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட உள்ளது. வாக்குப்பதிவுக்கான முன்னேற்பாடுகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வரும் நிலையில், தமிழக சட்டமன்ற தேர்தலை நிறுத்தி வைக்க கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் கே.கே. ரமேஷ் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை மோசமாக இருப்பதால் தேர்தலை நிறுத்தி வைக்க வேண்டும் என்று அவர் தனது மனுவில் கூறியுள்ளார்.

## புதுவை முதல்வர் ரங்கசாமியின் சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா?



புதுவை சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் (ஏப்ரல்) 9-ந் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 16-ந் தேதி தொடங்கியது. என்.ஆர். காங்கிரஸ், பா.ஜனதாவின் தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் தி.மு.க., காங்கிரஸ் அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணியில் தொகுதி பங்கீட்டில் இழுபறி நீடித்ததால், கட்சிகள் சார்பில் வேட்புமனு தாக்கல் அதிக அளவில் நடைபெறவில்லை.

இதற்கிடையே, தேசிய ஜனநாயக கூட்டணியில் லட்சிய ஜனநாயக கட்சியை இணைக்கக் கூடாது, புதுவைக்கு மாநில அந்தஸ்து கண்டிப்பாக வழங்க வேண்டும் என்று முதல்-அமைச்சர் ரங்கசாமி வலியுறுத்தினார். இதனால் கூட்டணி முடிவில் இழுபறி நீடித்து வந்தது.இந்த நிலையில், முதல்-அமைச்சர் ரங்கசாமி திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு சென்று, நேற்று காலை புதுச்சேரி திரும்பினார்.

இதனைத் தொடர்ந்து, மங்கலம் மற்றும் தட்டாஞ்சாவடி தொகுதிகளுக்கான வேட்புமனுக்களை தயார் நிலையில் வைத்திருந்தார். பின்னர் கதிர்காமம் முருகன் கோவிலுக்கு சென்ற அவர், அங்கு வேட்புமனுவை வைத்து சாமி கும்பிட்டு கையெழுத்திட்டார். பின்னர் தட்டாஞ்சாவடி தொகுதிக்கான வேட்புமனுவை கோரிமேடு ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்திலும், மங்கலம் தொகுதிக்கான வேட்புமனுவை சாரம் நில அளவை பதிவேடுகள் துறை இயக்குநர் அலுவலகத்திலும் தாக்கல் செய்தார். அவருடன் அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொண்டனர். வேட்புமனுவில் ரங்கசாமியின் சொத்து மதிப்பு விவரங்களும் இடம்பெற்றுள்ளன. அதன்படி, அவரது பெயரில் அசையும் சொத்து ரூ.21 கோடியே 25 லட்சமும், அசையா சொத்து ரூ.27 கோடியே 78 லட்சமும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தி.மு.க. கூட்டணியில் இருந்து தமிழக வாழ்வுரிமை கட்சி வெளியேறுகிறதா? - விரைவில் முடிவு அறிவிப்பு



கடந்த (2021) சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த தமிழக வாழ்வுரிமை கட்சிக்கு பண்ருட்டி தொகுதி ஒதுக்கப்பட்டது. அதில், கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலிலும் தி.மு.க. கூட்டணியில் தொடரும் தமிழக வாழ்வுரிமை கட்சி, இந்த முறை 2 தொகுதிகளை எதிர்பார்ப்பதாக தி.மு.க. தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை குழுவிடம் வலியுறுத்தியது. ஆனால், கடந்த முறையை போலவே ஒரு தொகுதி மட்டும்தான் தர முடியும் என்று தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, தி.மு.க. கூட்டணியில் 6 கட்சிகளுடன் தொகுதி பங்கீடு முடிந்துள்ள நிலையில், ஏனைய கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. ஆனால், தமிழக வாழ்வுரிமைக் கட்சியை இன்னும் பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால், விரக்தி அடைந்த அக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன், கட்சியின் உயர்மட்ட தலைவர்களை அழைத்து ஆலோசனை நடத்தினார். ஆலோசனையில், "இன்று (சனிக்கிழமை) ஒருநாள் பொறுத்திருந்து பார்ப்போம். தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை என்றால், தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறுவோம்" என்று நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

தி.மு.க. தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை குழுவுக்கு விடுக்கப்பட்ட இந்த ஒரு நாள் கெடு காலத்தில், தமிழக வாழ்வுரிமை கட்சியை அழைக்காவிட்டால், (ஞாயிற்றுக்கிழமை) கூட்டணியை விட்டு வெளியேறும் அறிவிப்பை அக்கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் வெளியிட இருக்கிறார். தேர்தலில், தமிழக வாழ்வுரிமை கட்சி தனித்தே போட்டியிடும் என்று தெரிகிறது.

## திமுக கூட்டணியில் பெரிய அளவில் தொகுதிகளை பெற முடியாத சூழல் உள்ளது- திருமாவளவன்



திமுக கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பது இன்னும் முடிவாகவில்லை. இந்த நிலையில், பேஸ்புக் நேரலையில் திருமாவளவன் தொண்டர்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:- "திமுக கூட்டணியில் 10 தொகுதிகளுக்கும் குறைவாகவே கிடைக்கும். கட்சியில் பல ஆண்டுகளாக காத்திருப்பவர்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. விசிக மட்டும் வளர நினைக்கவில்லை; ஒத்த கருத்துகளுடைய கட்சிகளுடன் சேர்ந்து வளர்கிறது.

தற்காலிக பின்னடைவாக இருந்தாலும், எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொகுதிகள் பெறுகிறோம். தொகுதி பங்கீடு உள்ளிட்ட விவகாரங்களில் பெருந்தன்மையோடு நடக்கிறோம். தமிழ்நாட்டு அரசியலின் மையம் நம்மை சுற்றியே இருக்கும் என்பதை வருங்காலம் உணர்த்தும்.

சீட் கேட்டு என்னை நெருக்கடிக்கு உள்ளாக்கும் நிலை தொடர்கிறது. தலைமைக்கு நெருக்கடி இல்லாமல் முடிவெடுக்க கட்சியினர் வாய்ப்பு வழங்க வேண்டும். குறைந்த தொகுதிகள் கிடைப்பதால் வேட்பாளர்களை தேர்வு செய்வதில் சிரமம் உள்ளது. மக்கள் நல கூட்டணியில் 25 தொகுதிகள் கிடைத்தபோது, சுதந்திரமாக வேட்பாளர்களை தேர்வு செய்தோம்" என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:-

"தற்போது வரை திமுக கூட்டணி வலுவாக உள்ளது. விசிகவுக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பது இன்னும் சில நாட்களில் தெரியும். திமுகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்று வருகிறது.

கூட்டணி நலனுக்கு எதிராக மார்க்சிஸ்ட் கட்சி செல்லாது. கட்சி நலன் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் கூட்டணி நலனும் முக்கியம். தொகுதி பங்கீட்டில் இழுபறி இல்லை; இன்னும் கையெழுத்தாகவில்லை என்பது உண்மை.புதிய கூட்டணிக்கு வாழ்த்துகள். அவர்களின் இலக்குகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன். போயஸ் கார்டனை நோக்கிச் செல்லும் நிலை மாறி, தற்போது டெல்லியை தேடி செல்லும் நிலையில் அதிமுக உள்ளது" என்றார்.

## பங்குனி உத்திர திருவிழா: சபரிமலை கோவில் நடை திறப்பு

**சபரிமலை, மார்ச் 22:**

சபரிமலை ஐயப்பன் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா மற்றும் ஆராட்டு விழாவை முன்னிட்டு, மார்ச் 22-ம் தேதி மாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட உள்ளது. மறுநாள் (மார்ச் 23) கொடியேற்றத்துடன் தொடங்கி, தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும்.

ஏப்ரல் 1ஆம் தேதி வரை நடைபெறும் பங்குனி உத்திர திருவிழாவில் பம்பையில் ஐயப்பனுக்கு ஆராட்டு நடத்தப்படும். பக்தர்கள் தரிசனத்திற்கு SABARIMALA.ORG.IN, தங்கும் அறைகள் முன்பதிவுக்கு WWW.ONLINETDB.COM அணுகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெனகை நாராயணபெருமாள் கோவில் திருவிழா கொடியேற்றம்

**மதுரை, மார்ச் 22:**

சோழவந்தானில் பிரசித்தி பெற்ற ஜெனகை நாராயண பெருமாள் கோவில் உள்ளது. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவிலின் 50-வது ஆண்டு பிரம்மோற்சவம் திருவிழா 11 நாட்கள் நடைபெறுகிறது.

திருவிழாவை முன்னிட்டு நேற்று காலை கேடயத்தில் திருவிழா கொடி அலங்கரிக்கப்பட்டு வலம் வந்தது. தொடர்ந்து கோவில் வளாகத்தில் உள்ள கொடிமரத்தில் திருவிழா கொடி ஏற்றப்பட்டது. மாலை அன்ன வாகனத்தில் சுவாமி புறப்பாடு நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். (வெள்ளிக்கிழமை) மாலை சிம்ம வாகனத்தில் சுவாமி பவனி வருகிறார். 6-ம் நாள் பட்டு பல்லக்கில் சுவாமி பவனி வருதல், 7-ம் நாள் திருக்கல்யாணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதுதவிர ராமநவமி நாளில் (27.3.2026) சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. 28-ம் தேதி புஷ்ப யாகம், 29-ம் தேதி விடையாற்றி உற்சவத்துடன் திருவிழா நிறைவுபெறுகிறது.

## திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் கோயிலில் பங்குனி தேரோட்டம்

திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலில் பங்குனி தேரோட்டம் கோலாகலமாக நடைபெற்றது. சிறப்புப் பூஜைகளுக்குப் பிறகு காலை சரியாக 8.05 மணிக்கு சுவாமியும் அம்மனும் தனித்தனி தேரில் எழுந்தருளினர். அப்போது அங்கு குழுமியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி முழக்கத்துடன் அதிர்வேட்டுடன் மேள தாளங்கள் முழங்கத் தேரை வடம் பிடித்து இழுத்தனர். முன்னதாக இரு சிறிய தேர்களில் முருகனும், விநாயகரும், சண்டிகேசுவரருடன் எழுந்தருளினர். ஆயிரக்கணக்கான பக்தர்கள் “நமச்சிவாயா “ முழக்கத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்து வருகின்றனர்.

நான்கு வீதிகளில் வலம் வரும் தேரோட்டம் மாலையில் நிறைவடையும். இக்கோயில் பங்குனித் திருவிழா ஏப்ரல் 5 வரை நடைபெறவுள்ளது.

# திருவட்டார் கோவிலில் பெருமாளின் திருமேனியை தழுவிய சூரியக் கதிர்கள்.. பக்தர்கள் பரவசம்

**கன்னியாகுமரி, மார்ச் 22:**

குமரி மாவட்டத்தில் மிகவும் பிரசித்த பெற்ற கோவில்களில் முக்கியமானது திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவிலாகும். 108 வைணவ தலங்களில் ஒன்றாகவும், நம்மாழ்வாரால் பாடல் இயற்றப்பெற்றதுமான திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவிலில் பெருமாள் அனந்த சயன கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.



புரட்டாசி மற்றும் பங்குனி மாதத்தின் தொடக்கத்தில் மாலை நேரம் சூரியனின் மயக்கும் பொன்னிற கதிர்கள் அனந்த சயனத்தில் பள்ளி கொண்டு அருள்பாலிக்கும் பெருமாளின் உடலில் விழும் வகையில் கோவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதாவது, பங்குனி மற்றும் புரட்டாசி மாதத்தில் 3-ம் தேதி முதல் 6-ம் தேதி வரை மாலையில் மறையும் சூரிய ஒளி கதிர்கள் கோவில் கருவறை வரை பாய்ந்து, உற்ச மூர்த்தி மற்றும் சயனகோலத்தில் காட்சி தரும் ஆதிகேசவப்பெருமாளின் திருமேனியைதழுவிச்செல்லும் அதிசயம் நடைபெறும்.

அவ்வகையில் பங்குனி மாதம் 5ஆம் நாளான நேற்று மாலை மறைய தொடங்கிய சூரியனின் மஞ்சள் நிறக்கதிர்கள் கண்களை கூசச்செய்யும் விதத்தில் பாய்ந்து சபா மண்டபம், உதயமார்த்தாண்ட மண்டப பகுதியைத் தாண்டி கருவறையில் பள்ளிகொண்ட பெருமாளின் திருமேனியில் விழுந்தது. இதை பார்த்து பக்தர்கள் பரவசமடைந்தனர்.

# முட்டப்பதி அய்யா வைகுண்டசாமி கோவிலில் பங்குனி திருவிழா: 27-ந்தேதி கொடியேற்றம்

**கன்னியாகுமரி, மார்ச் 22:**

கன்னியாகுமரி அருகே உள்ள முட்டப்பதியில் அய்யா வைகுண்டசாமி கோவில் உள்ளது. இது அய்யா வைகுண்டசாமியின் பஞ்சபதிகளில் ஒன்றாகும். இந்த கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் 11 நாட்கள் திருவிழா நடைபெறுவது வழக்கம். அதே போல இந்த ஆண்டுக்கான பங்குனி திருவிழா வருகிற 27-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

27-ந்தேதி அதிகாலை 5.30 மணிக்கு திருக்கொடியேற்றம் நிகழ்ச்சி நடக்கிறது. பகல் 12 மணிக்கு முட்டப்பதி திருப்பாற் கடலில் அய்யாவழி பக்தர்கள் தீர்த்தமாடிபதமிடும் நிகழ்ச்சி நடக்கிறது. பின்னர் உச்சிப்படிப்பு, அன்னதர்மம் போன்ற நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

இரவு 7.30 மணிக்கு அய்யா கருட வாகனத்தில் எழுந்தருளி கோவிலை சுற்றி மேளதாளங்கள் முழங்க வலம் வரும் நிகழ்ச்சி நடக்கிறது. 2-ம் திருவிழாவான 28-ந்தேதி முதல் 7-ம் திருவிழாவான 2-ந் தேதி வரை தினமும் பணிவிடைகள், உச்சிப்படிப்பு, தர்மங்கள் மற்றும் இரவு வாகன பவனி போன்றவை நடக்கின்றன.

2 மற்றும் 3-ம் திருவிழா அன்று இரவு 7.30 மணிக்கு அய்யா கருட வாகனத்தில் பவனி வரும் நிகழ்ச்சியும், 4 மற்றும் 5-ம் திருவிழா அன்று இரவு 7.30 மணிக்கு அன்ன வாகனத்தில் அய்யா பவனி வரும் நிகழ்ச்சியும், 6-ம் திருவிழா அன்று இரவு 7.30 மணிக்கு சர்ப்ப வாகனத்தில் அய்யா பவனி வரும் நிகழ்ச்சியும், 7-ம் திருவிழா (ஏப்ரல் 2) இரவு 7.30 மணிக்கு அய்யா கருட வாகனத்தில் பவனி வரும் நிகழ்ச்சி நடக்கிறது.

8-ம் திருவிழாவான அடுத்த மாதம் (ஏப்ரல்) 3-ந்தேதி இரவு அய்யா வைகுண்டசாமி முட்டப்பதி கடலில் கலி வேட்டையாடும் நிகழ்ச்சி நடக்கிறது.

இதையொட்டி அன்று அதிகாலை 4 மணிக்கு அய்யாவுக்கு பணிவிடையும் அதைத்தொடர்ந்து உகப்படிப்பும் நடக்கிறது. பகல் 12 மணிக்கு உச்சிப்படிப்பு, பால் அன்னதர்மம் நடக்கிறது. இரவு 7 மணிக்கு அய்யா வைகுண்டசாமி பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட குதிரை வாகனத்தில் எழுந்தருளி கோவிலில் இருந்து மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக புறப்பட்டு ஒற்றையால்விளை, மாதவபுரம் வழியாக முட்டப்பதி வரை பவனி வந்து வடக்கு வாசலுக்கு எதிரே அமைந்து உள்ள கடலில் கலி வேட்டையாடும் நிகழ்ச்சி நடக்கிறது. இரவு 11 மணிக்கு அன்னதர்மம் நிகழ்ச்சி நடக்கிறது.

9 மற்றும்10-ம் திருவிழா நாட்களில் (ஏப்ரல் 4 மற்றும் 5) இரவு7.30 மணிக்கு சப்பர வாகனத்தில் அய்யா எழுந்தருளி கோவிலை சுற்றி பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். 11-ம் திருவிழாவான 6-ந்தேதி பகல் 12 மணிக்கு அய்யா தேரில் எழுந்தருளி பதியை சுற்றி வலம் வரும் தேரோட்ட நிகழ்ச்சி நடக்கிறது.

மறுநாள் (7-ந்தேதி) அதிகாலை 4 மணிக்கு திருக்கொடி இறக்க நிகழ்ச்சியும் தான தர்மங்களும் நடக்கின்றன.

இத்துடன் திருவிழா நிறைவுபெறும். திருவிழாவுக்கான ஏற்பாடுகளை முட்டப்பதி மூத்த தர்மகர்த்தா கே.மனோகரச் செல்வன், தர்மகர்த்தா கே.எம். கைலாஷ் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

# தென்திருப்பேரை மகர நெடுங்குழைக்காதர் கோவில் பங்குனி திருவிழா கால் நாட்டு விழா

**தூத்துக்குடி, மார்ச் 22:**

தூத்துக்குடி மாவட்டம் தென்திருப்பேரையில், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 திவ்ய தேசங்களில் 53வது திருத்தலமாகவும், நம்மாழ்வாரால் பாடப்பட்ட நவதிருப்பதி தலங்களில் 7வது தலமாகவும், சுக்கிரன் தலமாகவும் அமையப் பெற்ற ஸ்ரீ மகர நெடுங்குழைக்காதர் கோவில் அமைந்துள்ளது.

தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள இக்கோவிலில் மீன் வடிவ காதணி அணிந்த மூலவர் ஸ்ரீ மகர நெடுங்குழைக்காதர், குழைக்காதர் நாச்சியார், திருப்பேரை நாச்சியார், நிகரில் முகில் வண்ணன் என்ற திருநாமத்துடன் உற்சவர் சேவை சாதிக்கிறார்கள். இக்கோவிலில் ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதல் 10ஆம் தேதி வரை பங்குனி பெருந்திருவிழா நடைபெறுகிறது.

பங்குனி பெருந்திருவிழாவை முன்னிட்டு கால் நாட்டு விழா நடைபெற்றது. இதையொட்டி அதிகாலையில் கோவில் நடை திறக்கப்பட்டு நித்திய கால பூஜைகள் நடைபெற்றன. அதன் பின்பு கோவில் முன்பு மஞ்சள், குங்குமம், சந்தனம், மாவிலை, புஷ்ப அலங்காரத்துடன் சிறப்பு பூஜை, தீபாராதனையுடன் காலை 7.40 மணி முதல் 8.15 மணிக்குள் கால் நாட்டப்பட்டது. விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். கால் நாட்டப்பட்டதைத் தொடர்ந்து தென்திருப்பேரை சுற்று வட்டார 15 கிராம உழவர்களுக்கும் மரியாதை செய்து கோவிலுக்கு அழைத்து வந்தனர்.






## நலம் தரும் மருத்துவம்

### வீட்டுமுறை ஆரோக்கியக் குறிப்புகள்

*பச்சை நெல்லிக்காயை பற்களால் கடித்து சாப்பிட, பற்களிலுள்ள கறைகள் நீங்கிவிடும்.

*ஜாதிக்காயை பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட, வயிற்றுவலி குணமாகும்.

*நாள்தோறும் ஒரு துண்டு இஞ்சியை அரைத்து ஒரு தம்ளர் மோரில் கலந்து குடிக்க இடுப்பு பகுதியில் கொழுப்பு சேராது.

*பூண்டு சாற்றில் உப்பு கலந்து சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் தடவி விட சுளுக்கு மறையும்.

*வெற்றிலை, ஓமம் இடித்து பிழிந்து தேன் கலந்து அருந்த குடற்புண், வயிற்று பிரச்னைகள் சரியாகும்.

*உலர் திராட்சைப் பழத்தை வெதுவெதுப்பான தண்ணீரில் அரைமணி நேரம் ஊறவைத்து காலையில் சாப்பிட்டு வந்தால் இதயநோய் குணமாகும். மாதவிடாய் கோளாறுகள் தீரும்.

*புடலங்காயின் இலைச்சாற்றை சிறிதளவு வெறும் வயிற்றில் குழந்தைகளுக்கு காலையில் கொடுத்து வர, கக்குவான் இருமல் போன்ற நோய்கள் குணமாகும். மேலும், புடலங்காயை சமைத்து உண்டு வந்தால் உடல்எடை குறையும் மற்றும் மலச்சிக்கல் தீரும்.

*அருகம்புல் சாற்றுடன் மோர் கலந்து குடித்து வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

*கொத்துமல்லி விதையை தண்ணீரில் கொதிக்க வைத்து ஆறியபின் அந்த தண்ணீரில் கண்களை கழுவி வந்தால் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும். கணினியில் அதிக நேரம் வேலை பார்ப்பவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

*சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் இவை அனைத்தையும் சேர்த்து தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் குடித்து வந்தால் மாரடைப்பு வராமல் தடுக்கலாம்.

*வெங்காயத்தை நெருப்பில் சுட்டு சாப்பிட்டு வந்தால் பித்த நோய்கள் தீரும்.

*முள்ளங்கியை சமைத்து தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் எப்படிப்பட்ட மூல நோயும் குணமாகும். *பூசணிக்காயை சமைத்து சாப்பிட்டு வந்தால் ரத்தக் கொதிப்பு, தலைசுற்றல் போன்ற நோய்கள் வராமல் கட்டுப்படுத்தலாம்.

*பீட்ரூட்டில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் அதிகமாகவும், வைட்டமின் ஏ, சி, மக்னீசியம், இரும்புச்சத்து, ஃபோலேட் மற்றும் நார்ச்சத்து போன்றவைகளும் அடங்கியுள்ளது. இதில் உள்ள நிறமி, கல்லீரல் செயல்பாட்டை ஊக்குவிக்க உதவுவதோடு, ரத்தத்தை சுத்தம் செய்கிறது. மேலும் இதில் இரும்புச்சத்து அதிகம் உள்ளதால், ரத்த சிவப்பணுக்களின் உற்பத்தியும் அதிகரிக்கவும் உதவுகிறது.

# தண்ணீரில் எரியும் அடுப்பு... இது கற்பனை அல்ல, நிஜம்! இதோ புதிய தொழில்நுட்பம்!

பெட்ரோலிய வாயு (LPG) போன்ற புதைபடிவ எரிபொருட்களின் கையிருப்பு குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு ஒரு சிறந்த மாற்றாக, பூமியில் அதிக அளவில் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்தி சமையல் எரிவாயுவைத் தயாரிக்கும் “ஹைட்ரஜன் அடுப்பு” தொழில்நுட்பம் உருவெடுத்துள்ளது. இது ஒரு சுத்தமான மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலமாகும். இந்த அடுப்பு உண்மையில் தண்ணீரில் உள்ள ஹைட்ரஜன் வாயுவைப் பிரித்தெடுத்து எரிக்கும் தொழில் நுட்பமாகும். இது எதிர்காலத்தின் சுத்தமான எரிசக்தித் தேவைகளுக்கு ஒரு சிறந்த தீர்வாகக் கருதப்படுகிறது.

இது செயல்படும் விதம்: மின்னாற்பகுப்பு (ELECTROLYSIS): தண்ணீர் ($H_2O$) என்பது ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் அணுக்களால் ஆனது. ஒரு கொள்கலனில் உள்ள தண்ணீரில் மின்சாரத்தைச் செலுத்தும்போது, அது ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜனாகப் பிரிகிறது. இந்த ஹைட்ரஜன் வாயுவைச் சேகரித்து அடுப்பு எரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

ஹைட்ரஜன் அடுப்பின் முக்கிய பயன்பாடுகள்:

சுற்றுச்சூழல் பாதுகாப்பு: சாதாரண சமையல் எரிவாயு (LPG) எரியும்போது கார்பன்-டை-ஆக்சைடு போன்ற பசுமை இல்லா வாயுக்களை வெளியிடுகிறது. ஆனால், ஹைட்ரஜன் எரியும்போது கழிவாக வெறும் நீராவியை (WATER VAPOR) மட்டுமே வெளியிடுகிறது. இது காற்று மாசுபாட்டை முற்றிலும் குறைக்கிறது.

உயர் வெப்ப ஆற்றல்: மற்ற எரிபொருட்களை விட ஹைட்ரஜன் அதிகவெப்பத்தை



(HIGH CALORIFIC VALUE) உருவாக்கும் திறன் கொண்டது. இதனால் சமையல் மிக விரைவாக முடியும். உள்நாட்டு உற்பத்தி: பெட்ரோலிய வாயுக்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக, சூரியசக்தி அல்லது காற்றாலை மின்சாரத்தைக் கொண்டு நீரிலிருந்து ஹைட்ரஜனை உற்பத்தி செய்து பயன்படுத்தலாம். இது எரிபொருள் தட்டுப்பாட்டைப் போக்கும்.

தொழில்துறை பயன்பாடு: பெரிய உணவகங்கள் மற்றும் தொழிற் சாலைகளில் அதிகப்படியான வெப்பம் தேவைப்படும் இடங்களில் பாதுகாப்பான முறையில் ஹைட்ரஜன் அடுப்புகளைப் பயன்படுத்த முடியும்.

இதில் உள்ள சவால்கள்

தண்ணீரைப் பிரிக்கத் தேவைப்படும் மின்சாரத்தின் செலவு அதிகமாக உள்ளது. (சூரிய ஒளி மின்சாரத்தைப் பயன்படுத்தினால் இதைச் சரி செய்யலாம்). ஹைட்ரஜன் மிகவும் எளிதாகத் தீப்பற்றக்கூடிய வாயு என்பதால், அதைச் சேமித்து வைப்பதில் கூடுதல் கவனம் தேவை. 1.பசுமை ஹைட்ரஜன் (GREEN HYDROGEN) ஒரு அறிமுகம்

தண்ணீரிலிருந்து ஹைட்ரஜனைப் பிரிக்கும்போது, அதற்குத் தேவையான மின்சாரத்தை சூரியசக்தி (SOLAR) அல்லது காற்றாலை (WIND) மூலம் பெற்றால், அதை “பசுமை ஹைட்ரஜன்” என்கிறோம். இது முற்றிலும் கார்பன் வெளியேற்றம் இல்லாத ஆற்றல் மூலமாகும்.

2.ஹைட்ரஜன் அடுப்பின் தொழில்நுட்ப சிறப்பம்சங்கள்

சாதாரண LPG அடுப்புகளுக்கும் ஹைட்ரஜன் அடுப்புகளுக்கும் உள்ள வேறுபாடுகள்:

LPG அடுப்பு: எரிபொருள் புதைபடிவ வாயு, மிதமான வெப்பம், சுற்றுச்சூழல் பாதிப்பு உண்டு, $CO_2$ மற்றும் கார்பன் மோனாக்சைடை வெளியிடும். ஹைட்ரஜன் அடுப்பு: தண்ணீரிலிருந்து பெறப்படும் ஹைட்ரஜன், நீராவியாக மாறும் $H_2O$, அதிக வெப்பம், 100% தூய்மையானது

3.நீர் மின்னாற்பகுப்பு கருவி (WATER ELECTROLYZER): அடுப்புடன் இணைக்கப்படும் ஒரு சிறிய கருவிதான் ‘எலக்ட்ரோலைசர்’. இது தண்ணீரை ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜனாகப் பிரிக்கிறது.

ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து ஹைட்ரஜன் மூலம் இயங்கும் வீடுகளைப் பரிசோதனை முறையில் உருவாக்கி வருகின்றன. இந்தியாவில் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் (NATIONAL GREEN HYDROGEN MISSION) மூலம் இத்தகைய தொழில்நுட்பங்களுக்கு அரசு ஊக்கமளித்து வருகிறது.

“தண்ணீரில் எரியும் அடுப்பு” என்பது வெறும் கற்பனை அல்ல; அது தொழில்நுட்ப ரீதியாகச் சாத்தியமான ஒன்று. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (RENEWABLE ENERGY) மூலம் ஹைட்ரஜனைத் தயாரிக்கும்போது, அது பூமியின் வெப்பமயமாதலைக் குறைக்க உதவும் ஒரு உன்னத எரிபொருளாக மாறும்.

## தும்பை விட்டு வாலைப் பிடித்தால்...!




ஏ.டி.எம்.மில் பணம் எடுக்க நண்பனுடன் போயி ருந்தேன். அன்று கூட்டம் அதிகமாக இருந்தது. எனது அட்டையை , தானியங்கி இயந்திரத்தில் உள்ளீடு செய்ததும் , "மொழியை தேர்வு செய்யவும்"- என்ற வாசகங்கள் தொடு திரையில் தெரிந்தன.நண்பன் ஆங்கிலத்தைப்போடு... போடு...என்று சொன்னான். நான் அவன் கூறியதைக் காதில் வாங்காமல் தமிழையே தேர்வு செய்தேன்.

"நீ என்ன படிக்காதவனா! தமிழைப் போட்டு இருக்கிறாய். நம்மை எல்லாரும் ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்கள் பார் " என்றான் நண்பன். தானியங்கி இயந்திரம் படிப்படியாகக் கேட்ட விவரங்களின் படிகள் வழியாகப் படிப்படியாகப் பயணம் செய்ததும் "பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்" என்று கூறியது இயந்திரம். பணத்தை எடுத்துக் கொண்டு இருவரும் வெளியே வந்தோம். "தமிழ் நாட்டில் இருந்து கொண்டே, தமிழை நாம் பயன்படுத்தா விட்டால், அதனால் இழப்பு நமக்குத்தானே ஒழிய இயந்திரத்திற் கல்ல. படிக்காத பாமர மக்கள் தான் தமிழை பயன் படுத்த வேண்டும். படித்தவர்கள் ஆங்கிலத்தை தான் பயன்படுத்த வேண்டும் என்ற போலி கௌரவத்திலிருந்து, முதலில் நாம் வெளியே வரவேண்டும்.. தமிழைப் பயன் படுத்துவது கௌரவம் அல்ல அது படிக்காதவர்களுக்கான மொழி. என்ற மாயையை முதலில் நாம் விட்டொழிக்க வேண்டும்.

'தமிழ் நாட்டில், தமிழைப் பயன்படுத்து கிறவர்கள் எத்தனை சதவீதம் பேர் ' என்று மத்திய அரசு அதிகாரிகள் ஒரு ஆய்வுக்குப் புள்ளி விவரத்தை எடுக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் மிகக் குறைவான எண்ணிக்கையே வருமானால் தமிழ் பயன்பாட்டு "வழிகாட்டு தலை" அவர்கள் இயந்திரத்தில் இருந்து எடுத்து விடக் கூடத் தயங்க மாட்டார்கள் இல்லையா. தமிழை ஒழிக்கத் துடித்துக் கொண்டிருப் பவர்களுக்கு, நாமே வழி காட்டியாக இருக்கலாமா. பிறகு தமிழ் நாட்டில் தமிழுக்கு இடமில்லை என்று இங்கே போராட்டம் என்று நடத்த வேண்டியது புத்திசாலித்தனமான செயலா. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடித்தால் வளர்ப்பு விலங்குகளிடம் இருந்து நமக்கு உதைதான் கிடைக்கும், இது தான் தமிழ்ப் பற்று என்று காண்பித்துக் கொள்வதில், நாம் வேண்டுமானால் பெருமைப் பட்டுக் கொள்ள லாமே ஒழிய அதனால் பலன் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. நமக்குக் கிடைக்கும் இது போன்ற நல்ல வாய்ப்புகளை நாம் பயன்படுத்தி தமிழ் அழியாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும் அல்லவா" என்று எடுத்துக் கூறினேன்.

"இனிமேல் ஏ.டி.எம். பண பரிவர்தனை களின் போது இயந்திரத்தில் நானும் தமிழைப் பயன் படுத்துவதோடு, மற்றவர்களை யும் அவ்வாறு செய்யும் படிக் கூறுவேன்" என்ற நண்பனின் மன உறுதி என்னை மகிழ்வுறச் செய்தது.



-குடந்தை பரிபூரணன்

## மழையில் பூத்த மனிதாபிமானம்



அன்று மாலை அலுவலகத்திலிருந்து கிளம்பும்போதே வானம் இருட்டித் தீர்ந்திருந்தது. கையில் முக்கியமான ஆவணங்கள் இருந்ததால், மழையில் நனைந்துவிடக் கூடாது என்ற பதற்றத்தில் ஒரு ஆட்டோவை மறித்தேன்.

"ஐயா, அம்பத்தூர் போகணும்... எவ்வளவு ஆகும்?" என்று கேட்டேன். அந்த ஆட்டோ ஓட்டுநர் பெரியவர், நரைத்த முடி. "முந்நூறு ரூபாய் ஆகும் தம்பி, மழை வர்ற மாதிரி இருக்கு, சீக்கிரம் ஏறுங்க," என்றார். வழக்கமாக இருநூற்று ஐம்பது ரூபாய்க்குச் செல்லும் இடம்தான். ஆனால், வானத்தின் கோலத்தைப் பார்த்துவிட்டுப் பேரம் பேசாமல் ஏறிக்கொண்டேன்.

வண்டி பாதி தூரம் சென்றிருக்கும்போது, பெருமழை கொட்டத் தொடங்கியது. சாலைகள் எல்லாம் ஏரிகளாக மாறின. ஆட்டோவின் ஓரங்களில் திரைச் சீலைகளை இழுத்துவிட்டபடி பெரியவர் வண்டியை நிதானமாக ஓட்டினார்.

"என்னப்பா, மழை வந்தா உங்களுக்குச் சவாரி நல்லா கிடைக்குமே?" என்று பேச்சுக் கொடுத்தேன்.

பெரியவர் மெலிதாகச் சிரித்தார். "சவாரி கிடைக்கும் தம்பி, ஆனா வண்டி பழுதாகி நின்னுட்டா அன்னைக்குச் சம்பாத்தியம் முழுக்க மெக்கானிக் கடைக்குப் போயிடும். வீட்ல பேரப் பிள்ளைக்கு உடம்பு சரியில்லை, மருந்து வாங்கிட்டுப் போகணும். அதான் பயந்து பயந்து ஓட்டுறேன்," என்றார். அவர் குரலில் ஒரு முதிர்ந்த கவலை தெரிந்தது.

அம்பத்தூர் சிக்னல் அருகே ஒரு இளம்பெண் குழந்தையுடன் மழையில் நனைந்தபடி பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். பெரியவர் வண்டியைச் சட்டென நிறுத்தினார்.

"தம்பி, தப்பா எடுத்துக்காதீங்க... அந்தப் பொண்ணு குழந்தையோட நனையுது, அவங்களையும் கொஞ்சம் தூரம் முன்னாடி இறக்கி விட்டுடலாமா? உங்ககிட்ட காசு வாங்க மாட்டேன்," என்றார் தயக்கத்துடன்.

அவர் கேட்ட விதத்தில் இருந்த நேர்மை என்னை நெகிழ வைத்தது. "கண்டிப்பா ஏத்திக்கோங்க ஐயா, எனக்கும் ஒன்னும் அவசரமில்லை," என்றேன்.

அந்தப் பெண்ணை ஏற்றிக்கொண்டு, அவளது இருப்பிடம் வரை சென்று இறக்கிவிட்டோம். அந்தப் பெண் பணம் கொடுக்க முன்வந்தபோது, "வேண்டாம்மா, தம்பி தான் அனுமதி கொடுத்தாரு, பத்திரமா போயிட்டு வா," என்று மறுத்துவிட்டார் பெரியவர்.

என் வீடு வந்தடைந்தது. நான் பர்ஸை எடுத்து நானூறு ரூபாயை அவரிடம் நீட்டினேன். "ஐயா, இதுல முன்னூறு ரூபாய் வாடகை, மீதி நூறு ரூபாய் உங்க பேரப் பிள்ளைக்குப் பழங்கள் வாங்கிக்கோங்க," என்றேன்.

பெரியவர் அதிர்ந்து போனார். "இல்லை தம்பி, பேசுன முன்னூறு ரூபாயே அதிகம். இது வேண்டாம்," என்று பிடிவாதமாக மறுத்தார்.

நான் அவர் கைகளைப் பிடித்துச் சொன்னேன், "ஐயா, அந்தப் பொண்ணுக்கிட்ட காசு வாங்காம உதவி செஞ்சீங்களே, அந்த மனசுக்கு நான் கொடுக்கிற சின்ன அன்பளிப்பு இது. உழைக்கிறவங்ககிட்ட பேரம் பேசுறதுக்கு ஆயிரம் பேர் இருக்கலாம், ஆனா உங்க மாதிரி மனிதாபிமானம் உள்ளவங்களுக்குத் தோள் கொடுக்க ஒருத்தர் வேண்டாமா?"



-லால்குடி வெ.நாராயணன்

# விக்கிரமாதித்தன் கதைகள் 2

. A.S.GOVINDA RAJAN

### பிராமணன் அக்னி ஸ்வாமியின் கதை

யமுனை நதிக்கரையில் பிரம்மஸ்தலத்தில், அக்னிஸ்வாமி வேதங்கள் அறிந்த பிராமனன் ஆவான். அவருக்கு மந்தாரவதி என்னும் அழகிய மகள் இருந்தாள். பிரம்மனே பார்த்து வியக்கும், அழகான பெண், பார்ப்பவர்கள் எல்லாம் காதல் கொள்வார்கள். அத்தனை அழகு.

அவள் இளம் பருவத்தை அடைந்தாள். அவளுக்கு எல்லா அம்சங்களும் நிறைந்த மூன்று பிராமன இளைஞர்கள் வந்து சேர்ந்தார்கள். அந்த மூன்று பேரும் அந்தப் பெண்ணைத் தனக்கே மணம் செய்து கொடுக்குமாறு அவளது தந்தையை கேட்டனர்.

அவளை வேறு யாருக்காவது கொடுத்தால் தன் உயிரையே விட்டுவிடுவதாக கூறியதால், அவளது தந்தை யாருக்கும் அவளை மணமுடிக்காமல் இருந்தான். இந்நிலையில் அந்தப் பெண்ணுக்கு



திடீரென நோய் தாக்கி முடியாமல் இறந்தும் போனாள்.

இந்நிலையில் அந்த மூன்று இளைஞர்களும் மிகவும் துக்கமும் அடைந்தனர். அவள் உடல் சுடுகாட்டில் தகணம் செய்யப்பட்டது. அம்மூவருள் ஒருவன் சுடுகாட்டிலேயே தங்கிவிட்டான். மற்றொருவன் அவள் மீதுள்ள பாசத்தால் அவளது அஸ்திகளை எடுத்துக் கொண்டு கங்கையில் கரைக்க போனான்.

மூன்றாமவனோ துக்கத்தால் துறவியாக போகத்துவங்கினான்.

இப்படி இருந்த மூன்றாமவன் ஒருநாள் ஒரு ரிஷியின் வீட்டில் சாப்பிடச் சென்றான். அங்கு அவனுக்கு உபசரித்து வயிறார உணவளித்தனர். அந்த நேரத்தில் அந்த ரிஷியின் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை நெருப்புக்குள் விழுந்து உடல் கருகி சாம்பலானது.

குழந்தையின் தாய் கதறி அழத்தொடங்கினாள். அப்போது ரிஷி இருவரையும் சமாதானப்படுத்தினார். நான் அவனை பிழைக்கவைத்து விடுவேன் கவலை வேண்டாம் என்றார், அப்போது அவர் சஞ்சீவி மந்திரங்கள் சொன்னவாறே ஒரு பிடி மண் எடுத்து குழந்தை எரிந்த சாம்பல் மீது வீசினார். குழந்தை முன் போல் உயிர் பிழைத்து எழுந்தது.

இதனை பார்த்து துறவியாக இருக்கும் இளைஞன் தனக்கும் இந்த மந்திரத்தைக் கற்றுத்தரும்படி ரிஷியிடம் கேட்டுக்கொண்டான். அந்த ரிஷியும் அந்த மந்திரங்களைக் கற்றுக் கொடுத்தார்.

மந்திரங்களைக் கற்றுக்கொண்டவன், மந்திரவதியை தகணம் செய்த இடத்திற்கு வந்தான். அங்கே இன்னொருவன் சாம்பல் மீதே படுத்துக் கொண்டு அவளையே நினைத்துக் கொண்டிருந்தான். மற்றொருவன் அவளது அஸ்தியைக் கரைத்து விட்டு அப்போது தான் மயானத்திற்கு வந்திருந்தான்.

மந்திரங்களைக் கற்றுக்கொண்ட இளைஞன் மந்திரவதியை உயிர்பிக்கும் மந்திரம் வைத்திருக்கிறேன் என்றான். அவளை உயிருடன் வரவழைக்கிறேன் என்று கூறினான். பின் சாம்பல் மீது இருந்தவனை விலகச் சொன்னான். இருவரும் அவனுக்கு விலகி வழிவிட்டனர்.

பிறகு சில மந்திரங்களைச் சொல்லி ஒரு பிடி மண் எடுத்து மந்தாரவதியின் சாம்பலில் போட்டான். எல்லோரும் வியக்கும் வண்ணம் மந்தாரவதி உயிருடன் எழுந்து நின்றாள். அவளது அழகைக் கண்ட மூவரும்

தாள முடியாத மையல் கொண்டனர். பின் மூவரும் தன்னைத்தான் இவள் மணக்க வேண்டும் என்றனர்.என் மந்திரத்தால் தானே இவள் பிழைத்தாள் அதனால் இவள் எனக்குத்தான் சொந்தம் என்றான். மற்றவனோ அவளது அஸ்தியை கங்கையில் கரைத்தவன் நான், அதனால் அவள் எனக்குத் தான் சொந்தம் என்றான். இன்னொருவன் அவளது சாம்பலிலேயே படுத்துறங்கி பத்திரமாக பாதுகாத்ததால், அவள் எனக்கே சொந்தம் என்றான்.

இப்போது வேதாளம் கேள்வி கேட்டது, விக்கிரமாதித்தா! சரியான பதிலைச் சொல் விக்கிரமாதித்தன் பதில் சொன்னான். மந்திர வலிமையால் உயிர் கொடுத்தவன் அவளுக்கு தந்தையாவான். எலும்புகளைக் கங்கையில் கரைத்தவன் ஈமக்கடன் செய்த மகனாவான். அவள் மீது உள்ள ஆசையால் சாம்பலை விட்டுப் பிரியாமல் மயானத்திலேயே தங்கித் தழுவிக் கிடந்தவனே அவள் புருஷனாவான்! என்றான்.



# முருகனுக்கு காவடி எடுக்கும் பழக்கத்தை முதலில் கொண்டு வந்தவன் இடும்பன்

முருகனுக்கு காவடி எடுக்கும் பழக்கத்தை முதலில் கொண்டு வந்தவன் இடும்பன் ஆவான்

முருகனை வணங்கும் முன்பு இடும்பனை வணங்கிச் செல்ல வேண்டும் முதல் வணக்கம் இடும்பனுக்கே முருகனான என்னை வணங்குவதற்கு முன் இவனை வணங்கியே என் மலையேற வேண்டும் என முருகனே கூறியுள்ளார் என்பது பழனிமலை வரலாற்றில் உண்டு



அசுரர்களுக்கு வித்தைகளைக் கற்றுக் கொடுப்பதுதான் இடும் பாசுரனின் வேலை சூரபதுமன் பானுகோபன் கஜமுகன் சிங்கமுகன் போன்ற அசுரர்கள் அழிந்தபின் அவர்களுக்கு வில் வித்தை கற்றுக் கொடுத்த இடும்பன் சிவனை நோக்கித் தவம் இருந்தார் சிவபெருமானிடம் பெற்ற சிவ மலையையும் சக்தி மலையையும் அகத்தியர் பூசவனம் என்னும் இடத்தில் விட்டுவிட்டுப் பொதிகை மலைக்குச் சென்றார்

அகத்தியரைச் சந்தித்த இடும்பன் முருகப் பெருமானைத் தரிசிக்க ஆசைப்படுவதாகச் சொன்னான் ண அதனைப் புரிந்து கொண்ட அகத்தியரும் பூசவனத்தில் தான் இறக்கிவைத்த இரு மலைகளையும் பொதிகை மலைக்குக் கொண்டு வந்தால் முருகன் தரிசனம் உனக்குக் கிடைக்கும் என்றார் சிவனை நினைத்துத் தவம் புரிய இரு மலைகளையும் தூக்குவதற்கு ஒரு நீண்ட கம்பு தண்டம் தோன்றியது அதனில் நாகங்களைத் தராசு போல் கட்டி இரு மலைகளையும் இருபுறமும் கட்டித் தனது தோளில் சுமந்து சென்றான் அவனுடன் அவன் மனைவி இடும்பியும் சென்றாள் திருஆவினன்குடியில் இரு மலைகளையும் இறக்கி வைத்து இளைப்பாற நினைத்து கீழே இறக்கி வைக்க மீண்டும் தூங்கும்பொழுது தூக்க முடியாமல் போகவே ஏன் இப்படி என்று பார்க்க மலையின் மீது ஒரு சிறுவன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான் இடும்பன்

இறங்கி விடு என்று கூற அவனும் இது என் மலை எனக்கான மலை நீ விட்டு விட்டு போ என்றான் முருகனைத் தரிசிக்க முடியாமல் போகுமே இதனைப் பொதிகைமலைக்குக் கொண்டு செல்லாவிட்டால் என்ற எண்ணமே இடும்பனை அவனிடம் வாக்குவாதம் செய்யத் தூண்டியது

அச்சிறுவனும் தன் கை ஆயுதத்தால் இடும்பனை லேசாக தட்ட கீழே விழுந்து உயிர் விட்டான் இதனைக்கண்டஇடும்பி அழ ஆரம்பித்து இவனை வெல்பவன் முருகனைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது என உணர்ந்து அச்சிறுவனின் காலில் விழுந்து வணங்கினாள் முருகனும் இடும்பனுக்கு முக்தி கொடுத்தருளினார் இதனாலேயே முருகனுக்குக் காவடியும் இடும்பனுக்கு முதல் வணக்கமும் ஏற்பட்டது

BHANUMATI NACHIYAR

# தினம் ஒரு தலைவர்கள் கோபால கிருஷ்ண கோகலே வரலாறு

கோபால கிருஷ்ண கோகலே (மே 9, 1866 - பிப்ரவரி 19, 1915) இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு எதிராக இந்திய சுதந்திர போராட்டத்தின்போது உருவான சமூக மற்றும் அரசியல் தலைவர்களில் ஒருவராவார். கோகலே இந்திய தேசிய காங்கிரசின் மூத்த தலைவரும் இந்திய சேவகர்கள் அமைப்புபின் உருவாக்குநரும் ஆவார். இந்த அமைப்பின் மூலம் மட்டுமல்லாது காங்கிரசு மற்றும் இதர அரசியலமைப்புகளில் பணிபுரிந்ததன் மூலம், கோகலே ஆங்கிலேய அரசிடமிருந்து சுதந்திரத்தைப் பெறுவதற்கான போராட்டத்தை வழிநடத்தியதோடு மட்டுமல்லாமல் சமூக மாற்றத்தையும் முன்னெடுத்தார். கோகலே தன்னுடைய குறிக்கோள்களை அடைவதற்காக இரு முக்கிய கொள்கைகளைப் பின்பற்றினார்: வன்முறையைத் தவிர்த்தல் மற்றும் இருக்கும் அரசு நிறுவனங்களுக்குள்ளேயே மாற்றத்தைக் கொண்டுவருதல்.

கோபால கிருஷ்ண கோகலே, 1866 ஆம் ஆண்டு மே 9 அன்று மகாராட்டிராவின் கோதாலுக்கில் பிறந்தார், அப்போது இந்த மாநிலம் இந்தியாவின் மேற்கு கடற்கரையோரம் இருந்த பாம்பே பிரெசிடென்சியின் ஒரு அங்கமாக இருந்தது. அவர்கள் சித்பாவன் பிராமணர்களாக இருந்தபோதிலும் கோகலேவின் குடும்பம் ஒப்பீட்டளவில் ஏழ்மையில் இருந்தது. இருந்தபோதிலும் அவர்கள் கோகலேவுக்கு ஆங்கிலக் கல்வி கிடைப்பதை உறுதிசெய்தனர், இதன் மூலம் ஆங்கிலேய அரசில் ஒரு எழுத்தராகவோ சிறு அதிகாரியாகவோ வேலை கிடைக்கும் நிலையில் கோகலே இருப்பார் என நம்பினர். பல்கலைக்கழகக் கல்வியைப் பெறும் முதல் தலைமுறை இந்தியர்களில் ஒருவராக இருந்த கோகலே 1884 ஆம் ஆண்டில் எல்பின்ஸ்டோன் கல்லூரியில் தன் பட்டப்படிப்பை முடித்தார். கோகலேவின் கல்வி அவருடைய எதிர்கால வாழ்க்கைத் தொழிலின் போக்கை மிகப் பெரிய அளவில் தூண்டுவதாக அமைந்தது ஆங்கிலம் கற்றதோடல்லாமல் அவர் மேற்கத்திய அரசியல் கோட்பாடுகளுக்கு உள்ளாகி ஜான் ஸ்டுவார்ட் மில் மற்றும் எட்முண்ட் புர்கே போன்ற தத்துவ அறிஞர்களின் பெரும் ஆர்வலராக ஆனார். ஆங்கிலக் காலனிய ஆட்சிமுறையின் பல அம்சங்களைத் தயக்கமின்றி விமர்சித்து வந்தபோதிலும், கோகலே தன்னுடைய கல்லூரி ஆண்டுகளில் பெற்ற ஆங்கிலேய அரசியல் கோட்பாடுகள் மற்றும் நிறுவனங்கள் மீதான மரியாதை அவருடைய வாழ்நாள் முழுவதற்கும் அவருடனேயே இருந்தது.

இந்திய தேசிய காங்கிரஸ், பால கங்காதர் திலகருடனான பகை சமூக மறுமலர்ச்சியாளர் மகாதேவ் கோவிந்த் ரனதேவின் ஆதரவாளராக கோகலே 1889 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசின் உறுப்பினரானார். பால கங்காதர திலகர், தாதாபாய் நௌரோஜி, பிபின் சந்திர பால், லாலா லஜபதி ராய் மற்றும் அன்னி பெசன்ட் போன்ற இதர சமகாலத்திய தலைவர்களுடன் கோகலே, சாதாரண இந்தியர்களுக்குப் பொதுத் துறை விடயங்களில் அதிகமான அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்காகப் பல ஆண்டுகளாகப் போராடினார். அவர் தன்னுடைய எண்ணங்களில் மற்றும் மனப்பான்மையில் மிதவாதியாக இருந்தார். இந்தியர்களின் உரிமைகளுக்கு ஆங்கிலேயர்களின் பெருமளவு மரியாதையைப் பெற்றுத்தரக்கூடிய பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல் செயல்முறையை வளர்த்தெடுப்பதன் மூலம் ஆங்கில அதிகாரிகளிடத்தில் கோரிக்கைகளை நிறைவேற்ற எண்ணினார். கோகலே அயர்லாந்து சென்றுவந்தார், அங்கு அவர் 1894 ஆம் ஆண்டில் ஐரிஷ் தேசியவாதியான ஆல்பிரெட் வெப்பை இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகப் பணிபுரிய ஏற்பாடு செய்தார். அதற்கு அடுத்த ஆண்டு, கோகலே திலகருடன் இணைந்து காங்கிரசின் இணைச் செயலாளர் ஆனார். திலகர் மற்றும் கோகலேவின் ஆரம்ப கால தொழில்வாழ்க்கை பல விதங்களில் இணையானதாகவே இருந்து வந்தது இருவருமே சித்பவான் பிராமணர்கள் (இருந்தாலும் கோகலே போலல்லாமல், திலகர் பெரும் வளமிக்கவராக இருந்தார்), இருவருமே எல்பின்ஸ்டோன் கல்லூரியில் படித்தனர், இருவருமே கணித பேராசிரியர்களானார்கள் மற்றும் இருவருமே டெக்கன் கல்வி அமைப்பின் முக்கிய உறுப்பினர்களாக இருந்தனர். எனினும், இருவருமே காங்கிரசில் ஈடுபட ஆரம்பித்தவுடனே, இந்தியர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான சிறப்பான வழிமுறை தொடர்பான அவர்களின் வேறுபட்ட எண்ணங்கள் தெளிவாக வெட்டவெளிச்சமாகியது.

கோகலே தன்னுடைய வாழ்நாள் இறுதிவரையிலும் தொடர்ந்து அரசியல் ரீதியாக இயங்கிக்கொண்டே இருந்தார். இதில் வெளிநாட்டுப் பயணங்களும் அடங்கும். 1908 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு பயணம் மேற்கொண்டதோடு அல்லாது அவர் 1912 ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவுக்கும் சென்றுள்ளார். அவருடைய ஆதரவாளரான காந்தி அங்கு வசித்துக்கொண்டிருந்த சிறுபான்மை இந்தியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக பணி புரிந்துகொண்டிருந்தார். இந்தியக் கல்வியை மேம்படுத்துவதற்காக முனைந்துகொண்டிருந்த அதே நேரத்தில், அவர் தொடர்ந்து இந்திய சேவகர்கள் அமைப்பு, காங்கிரசு இயக்கம் மற்றும் சட்டப் பேரவைப் பணி ஆகியவற்றிலும் ஈடுபட்டு வந்தார். எனினும் இத்தகைய மன அழுத்தங்கள் இவரின் உயிர் பலியை வாங்கிக்கொண்டது, 1915 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 ஆம் நாள் கோகலே தம்முடைய நாற்பத்து ஒன்பதாவது வயதில் இறந்துவிட்டார்.



இந்திய தேசிய இயக்கத்தின் மீது பாதிப்பு

இந்திய தேசிய இயக்கத்தின் வளர்ச்சிப்போக்கில் கோகலேவின் பாதிப்பு பெருமளவில் இருந்தது. ஆங்கிலேயப் பேரரசின் அரசாங்கத்தில் உயர்ந்த பதவிநிலையில் இருப்பவர்களுடன் கோகலே கொண்டிருந்த நெருக்கமான உறவுகள் மூலம், இந்தியாவின் காலனியாதிக்க தலைமையாளர்களை வற்புறுத்தி கல்விபெற்ற புதிய தலைமுறை இந்தியர்களின் திறன்களை அங்கீகரிக்கும்படியும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அவர்களை ஆட்சிமுறை செயல்பாடுகளில் சேர்த்துக்கொள்ளும்படியும் அவர் கட்டாயப்படுத்தினார். அரசியலை ஆன்மீகமாக்கல், சமூக மேம்பாடு மற்றும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய கல்வி ஆகியவற்றின் தேவை மீது கோகலே கொண்டிருந்த திடமான நம்பிக்கை, இந்திய அரசியல் அரங்கில் இருந்த அடுத்த தலைமுறை மனிதரான மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை வெகுவாகக் கவர்ந்தது; மேற்கத்திய அரசியல் நிறுவனங்கள் மற்றும் பழமையிலிருந்து விடுபடுதல் போன்றவற்றில் கோகலேவுக்கு இருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையை காந்தி நிராகரித்த போதிலும், 1950 ஆம் ஆண்டில் சுதந்திரமடைந்த இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெஸ்மினிஸ்டர் மாதிரியான அரசாங்கம் உருவாக்கத்தில் இது பலனளிக்கக்கூடியதாக இருந்தது.

# ஜாலியா இருந்த ஒருத்தன் படப்பிடிப்பு நிறைவு: வீடியோ வெளியிட்ட படக்குழு



நடிகை ஸ்ருதி ஹாசன் சமீப காலமாக தெலுங்கு படங்களில் தான் அதிகம் நடித்து வருகிறார். தமிழில் அவர் கடைசியாக ரஜினியின் கூலி படத்தில் முக்கிய ரோலில் நடித்து இருந்தார்.
ஸ்ருதி ஹாசன் தற்போது உச்சகட்ட ஹாட் உடையில் போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் புகைபடங்களை வெளியிட்டு இருக்கிறார்.
அவை ரசிகர்களை கவர்ந்து இணையத்தில் வைரல் ஆகி வருகின்றன. சில மணி நேரங்களிலே இந்த போட்டோக்களுக்கு 1.5 லட்சம் லைக்குகள் குவிந்து இருக்கிறது.



கடந்த 2009-ம் ஆண்டு ராஜேஷ் இயக்கத்தில் ஜீவா நடிப்பில் வெளியான 'சிவா மனசுல சக்தி' திரைப்படம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இதனைத் தொடர்ந்து இக்கூட்டணி மீண்டும் "ஜாலியா இருந்த ஒருத்தன்" படம் மூலம் இணைந்துள்ளது.

இப்படத்தில் ஜீவாவிற்கு ஜோடியாக இவானா நடிக்கிறார். யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். Malik Streams Corporation தயாரிக்கும் இப்படம் பொழுது போக்கு அம்சம் கொண்ட படமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இப்படத்தின் படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்துள்ளது என்று படக்குழு அறிவித்துள்ளது. இது தொடர்பாக வீடியோ ஒன்றையும் வெளியிட்டுள்ளது. இப்படம் கோடை விடுமுறையில் ரிலீஸ் ஆகலாம் எனத் தெரிகிறது.

ராஜேஷ் பாஸ் என்கிற பாஸ்கரன் என்ற படத்தையும் இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் சினிமாவில் தெய்வத்திருமகள், சைவம் போன்ற பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் சாரா அர்ஜுன். அவர் தற்போது ஹிந்தி சினிமாவில் ஹீரோயினாக துரந்தர் படத்தின் மூலமாக அறிமுகம் ஆகி இருக்கிறார். அதன் இரண்டாம் பாகம் தற்போது ரிலீஸ் ஆகி இருக்கிறது.
இந்நிலையில் சாரா கிளாமர் லுக்கில் எடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார். இதோ பாருங்க.



# முடிவுக்கு வந்த சகாப்தம்.. ஆக்ஷன் ஜாம்பவான் சக் நோரிஸ் மறைவு



ஒரு காலத்தில் ஹாலிவுட்டின் ஆக்ஷன் ஹீரோவாக வலம் வந்த நடிகர் சக் நோரிஸ் (86).

அசாதாரண ஸ்டண்ட் காட்சிகள் மூலம் ஒரு தலைமுறையை திரையில் கட்டிப்போட்டவர் இவர்.

காலம் கடந்து இன்றளவும் சக் நோரிஸ் மீம்ஸ் என்று அவரின் அசாத்திய ஸ்டண்ட்களை பலர் உயிர்ப்புடன் வைத்துள்ளனர்.

அவருடைய 'மிஸ்ஸிங் இன் ஆக்ஷன்', 'தி டெல்டா ஃபோர்ஸ்' போன்ற படங்கள் உலகப் பிரசித்தம்.

அமெரிக்க விமானப்படையில் பணியாற்றியபோது கொரியாவில் மார்ஷியல் ஆர்ட்ஸ் கற்றுக் கொண்ட அவர், ஆறு முறை உலக கராத்தே சாம்பியனாக விளங்கி சாதனை படைத்தார்.

'தி வே ஆப் டிராகன்' படத்தில் புரூஸ் லீயுடன் சக் நோரிஸ் சண்டை போட்ட ஆக்சன் காட்சியை பலர் மறந்திருக்க மாட்டார்கள்.

# விஜயின் திடீர் மும்பை பயணம் எதற்காக தெரியுமா?



தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் நேற்று திடீரென சென்னை விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் மும்பை புறப்பட்டு சென்றார். அவரது மும்பை பயணம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், விஜயின் மும்பை பயணம் குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

# நடிப்பு, கார் பந்தயத்தை தொடர்ந்து புதிய அவதாரம் எடுக்கும் Ajith



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான அஜித்குமார், கார் பந்தய வீரரும் கூட. சர்வதேச அளவில் பல விருதுகளை குவித்துள்ள அஜித்குமார் தற்போது தொடர் கார் பந்தயங்களில் பிசியாக இருக்கிறார்.

'குட் பேட் அக்லி' படத்தை தொடர்ந்து அவர் மீண்டும் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் புதிய படத்தில் நடிப்பார் என்று தெரிகிறது.

இதற்கிடையில் நடிகர் தாண்டி அஜித்குமார் புதிய அவதாரம் எடுத்திருக்கிறார். ஆம், இனி தயாரிப்பாளராகவும் அஜித்குமார் மாறவுள்ளார்.

அஜித்குமார் ஸ்போர்ட்ஸ் சர்வீஸ் எல்.எல்.சி. என்ற பெயரில் அவர் புதிய நிறுவனத்தை தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையில் (பிலிம் சேம்பர்) பதிவு செய்திருக்கிறார். மேலும் ரூ.2.56 லட்சம் செலுத்தி ஆயுட்கால உறுப்பினராகவும் தனது பெயரை பதிவு செய்துள்ளார்.

அஜித்குமாரின் இந்த புதிய முடிவு அவரது ரசிகர்களுக்கு ஆச்சரியத்தை தந்துள்ளது. அதேவேளை தயாரிப்பாளராகிவிட்டால் இனி படங்கள் நடிப்பாரா, மாட்டாரா? என்ற கேள்வியையும் எழச் செய்துள்ளது.


அஜித்குமாரின் சமீபகால போக்கு புரியாத புதிராகவே இருப்பதாக திரையுலகினரும், ரசிகர்களும் பேசிக் கொள்கிறார்கள்.

# கோபமான நடிகை Anushka

நடிகை அனுஷ்கா திருமணம் குறித்து அடிக்கடி வதந்திகள் வருவது வாடிக்கையாகி வருகிறது. அந்த வகையில் 44 வயதான அனுஷ்கா தொழில் அதிபர் ஒருவரை திருமணம் செய்து கொள்கிறார் என்று தகவல் வெளியானது.

இதுவரை வெளியான திருமண வதந்திகளுக்கு அனுஷ்கா பெரிதாக செவி சாய்க்கவில்லை. ஆனால் இப்போது கோபம் அடைந்து விட்டார். அவரது கோபம் திருமண செய்தியால் அல்ல. வயதை குறிப்பிட்டு விமர்சனம் எழுந்தது தான் அவரை கோபத்துக்குள்ளாக்கி இருக்கிறது.

இது குறித்து அனுஷ்கா தரப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'வயதுக்கு கொடுக்கப்படும் தேவையற்ற கவனமும் ஒவ்வொரு பதிவிலும் '44' என்ற எண்ணை ஏதோ ஒரு சர்ச்சைக்குரிய விஷயம் போல முன்னிலைப்படுத்துவதும் வருத்தமளிக்கிறது. வயது இவ்வளவு பெரிய பிரச்சனையாக இருந்தால் ஹீரோக்கள் மீது மட்டும் வயது விஷயத்தில் ஆர்வம் காட்டுவதில்லை. பெண்களுக்கு மட்டும் வயது விஷயத்தை பெரிதாக்குகிறீர்கள்? கதாநாயகர்களுக்கு இணையாக கதாநாயகிகளையும் மதியுங்கள்.



இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## திருமணத்திற்கு அழைக்கவில்லை என்று Reels வெளியிட்ட சிறுமி... Virosh தம்பதி செய்த நெகிழ்ச்சி சம்பவம்

நடிகர் விஜய் தேவரகொண்டா-ராஷ்மிகா ஜோடி தங்களது திருமணத்திற்கு அழைக்கவில்லை என்று வருத்தத்துடன் 'லக்கி' என்ற சிறுமி பகிர்ந்த ரீல்ஸ் சமீபத்தில் வைரலானது. அந்த வீடியோவில், "நாமும் ரசிகர்கள் தானே, எங்களை அழைத்திருக்கலாம்" என்று மழலை மொழியில் அவள் கூறியது பலரையும் கவர்ந்தது.

இந்த ரீல்ஸ் குறித்து விஜய் தேவரகொண்டா கவனத்திற்கு சென்றதும், அவர் உடனடியாக பதிலளித்து, "உனக்கு என்ன பிடிக்கும் என்று சொல், உனக்குப் பிடித்ததை எல்லாம் வீட்டிலேயே ஏற்பாடு செய்கிறோம்" என்று கூறினார். மேலும், அந்த சிறுமியை நேரில் சந்திக்க தனது வீட்டிற்கே அழைத்தார்.

அதன்படி, ஐதராபாத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று சிறுமி லக்கி, விஜய் தேவரகொண்டா-ராஷ்மிகா ஜோடியை சந்தித்தார். இருவரும் சிறுமிக்கு பிரத்தியேகமாக விருந்து அளித்து, அன்புடன் பேசியும் மகிழ்ந்தனர். மேலும், சிறுமியுடன் சேர்ந்து ரீல்ஸ் ஒன்றும் பதிவு செய்தனர்.

இந்த மனதை கவரும் சந்திப்பு வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி, ரசிகர்களிடையே பாராட்டுகளை பெற்றுள்ளது.



## மக்களின் வாழ்க்கை போராட்டங்களை பிரதிபலிக்கும் கதாபாத்திரங்களில் தொடர்ந்து நடிப்பேன் - யோகி பாபு




நடிகர் யோகி பாபு நடித்த 'கெணத்த காணோம்' திரைப்படம், சமீபத்தில் திரையரங்குகளில் வெளியாகி, வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆர்.பி. டாக்கீஸ் சார்பில் ரமேஷ் பாபு தயாரித்துள்ள இந்தப் படத்தை, 'ஒரு கிடாயின் கருணை மனு' படத்தின் மூலம் புகழ்பெற்ற இயக்குநர் சுரேஷ் சங்கையா இயக்கியுள்ளார்.

துரதிர்ஷ்டவசமாக, இந்தப் படம் வெளியாவதற்கு முன்பே அவர் காலமானார். இந்தப் படத்தில் லவ்லின் சந்திரசேகர் கதாநாயகியாக நடித்துள்ளார். இந்தப் படத்தின் வெற்றி கொண்டாட்ட நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நடிகர் யோகி பாபு பேசும் போது, "இந்தப் படம் பரவலான ரசிகர்களை சென்றடைய வேண்டும் என்று இயக்குநர் சுரேஷ் சங்கையா கனவு கண்டார்; அந்தக் கனவு இன்று நனவாகியுள்ளது. திரையரங்குகளில் இந்தப் படம் ஓடிக்கொண்டிருக்கும் வேளையில், ரசிகர்களிடம் இருந்து மிகச் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்தப் படத்தை தயாரித்து வெளியிட்ட தயாரிப்பாளருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவரை போன்ற தரமான தயாரிப்பாளர்கள் இந்த துறைக்கு கிடைத்த வரப்பிரசாதம்; இவர் தொடர்ந்து இன்னும் பல நல்ல படங்களை தயாரிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சாமானிய மக்களின் வாழ்க்கை மற்றும் போராட்டங்களை பிரதிபலிக்கும் வகையிலான கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து, நான் தொடர்ந்து நடிப்பேன்," என்று கூறினார்.

தென்னிந்திய அளவில் பிரபலமான நடிகைகளில் ஒருவர் ஐஸ்வர்யா ராஜேஷ். காக்கா முட்டை படத்தின் மூலம் ரசிகர்களின் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற இவர், அதன்பின் வடசென்னை, கனா, தி கிரேட் இந்தியன் கிட்சன், சங்கராந்திகி வஸ்துனம் என தொடர்ந்து பல ஹிட் படங்களில் நடித்தார். இந்த நிலையில், இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது Stunning லுக்கில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.



தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர் துஷாரா விஜயன். சார்ப்பட்டா பரம்பரை, ராயன், வேட்டையன் என பல குறிப்பிடத்தக்க படங்களில் அவர் நடித்துள்ளார்.

அடுத்து சில படங்களை கைவசம் வைத்து இருக்கும் அவர் அவ்வப்போது இன்ஸ்டாக்ராமில் வெளியிடும் போட்டோக்கள் ரசிகர்களை கவர்ந்து வருகின்றன. கிளாமர் லுக்கில் அவர் சமீபத்தில் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை தற்போது வெளியிட்டுள்ளார். அதற்கு லைக்குகள் குவிந்து வருகிறது.

## காளிதாஸ் 2 பார்த்து விட்டேன் மேடையிலேயே ரிவ்யூ சொன்ன இயக்குநர் பா ரஞ்சித்




2019-ஆம் ஆண்டு பரத் நடிப்பில் வெளியாகி விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் வெற்றியைப் பெற்ற 'காளிதாஸ்' படத்தை தொடர்ந்து அதன் இயக்குநர் ஸ்ரீ செந்தில் இயக்கத்தில் உருவாகியுள்ளது 'காளிதாஸ் 2' திரைப்படம். இந்தப் படத்தில் பரத், அஜய் கார்த்திக், பிரகாஷ் ராஜ், 'ஆடுகளம்' கிஷோர், சுரேஷ் மேனன், ஆனந்த் நாக், பவானி ஸ்ரீ , அபர்னதி, ராஜா ரவீந்தர், டி.எம். கார்த்திக் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இவர்களுடன் 'பூவே உனக்காக' படத்தின் மூலம் ரசிகர்களிடம் பிரபலமான நடிகை சங்கீதா- இப்படத்தில் அழுத்தமான வேடத்தில் நடித்திருப்பதன் மூலம் தமிழ் சினிமாவிற்கு ரீ என்ட்ரி ஆகியிருக்கிறார்.

படத்திற்கு சாம் சி. எஸ். இசை அமைத்திருக்கிறார். கிரைம் திரில்லராக தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை பிரபல விநியோகஸ்தரும், தயாரிப்பாளருமான பைவ் ஸ்டார் செந்தில், அவரின் சொந்த பட தயாரிப்பு நிறுவனமான ஸ்கை பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் தயாரித்திருக்கிறார்.

இந்தப் படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய இயக்குநர் பா ரஞ்சித், "தமிழ் ரசிகர்கள் சிறிய படங்களுக்கு வரவேற்பு அளிப்பதும், சிறிய திரைப்படங்களுக்கு தியேட்டர்களும் கிடைக்கின்றன. இங்கு சிறிய திரைப்படங்களுக்கு தியேட்டர்கள் கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கத்தான் செய்கிறது.

நேற்று (மார்ச் 19) வெளியான சிறிய திரைப்படம் "யூத்" நல்ல வரவேற்பை பெற்றிருப்பது மகிழ்ச்சியை கொடுக்கிறது. நானும் தொடர்ந்து சிறிய படங்களை தயாரித்து வருகிறேன். மேலும் இந்த ஆண்டு என் தயாரிப்பில் உருவாகி இருக்கும் இரு திரைப்படங்களை திரைக்கு கொண்டுவரும் திட்டமும் இருக்கிறது. மக்களை நம்பி தான் படம் எடுக்கிறோம். ஓ.டி.டி. நிறுவனங்களை கடந்து தியேட்டர்கள் தான் எங்களது நம்பிக்கை.

காளிதாஸ் 2 படத்தை நான் பார்த்து விட்டேன். மூன்று பெண் கதாபாத்திரங்களும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சிறிய, சாதாரண கதையை வைத்து கொண்டு அர்ப்பணிப்புடன் உழைத்தால் மாபெரும் வெற்றி பெறலாம் என்பதற்கு உதாரணம் தான் "சிறை" திரைப்படம்," என்று தெரிவித்தார்.

## விஜய் சேதுபதியுடன் முதல்முறையாக இணையும் சாய் பல்லவி



பிரபல இயக்குநர் மணிரத்னம் 'தக்லைஃப்' படத்தை தொடர்ந்து, தனது அடுத்த படத்தை நடிகர் விஜய் சேதுபதியை வைத்து இயக்குகிறார். இப்படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக சாய் பல்லவி நடிக்கிறார். விஜய் சேதுபதியுடன் முதல் முறையாக சாய் பல்லவி இணையும் இப்படத்திற்கு 'புரொடக்ஷன் நம்பர் 23' என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது.

லைகா புரொடக்ஷன்ஸ் மற்றும் இந்தியா டாக்கீஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க உள்ளார். முன்னதாக இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருந்த நிலையில், இன்று படக்குழு போஸ்டர் வெளியிட்டு இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இப்படத்தின் படப்பிடிப்புகள் வருகிற ஜூலை மாதம் முதல் நடைபெறும் என்று கூறப்படும் நிலையில், படத்தின் கதைகளம், நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் குறித்த விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. இதனால் வரும் நாட்களில் இப்படத்தின் அப்டேட்கள் அடுத்தடுத்து வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.




**தந்தைதாய்ப்பேண்!**

எழுசீர் மண்டிலம்.
(மா விளம் காய் காய் மா
விளம் காய்)

தாயைத் தந்தையை
எக்காலும் கவனிப்போம்
தக்க விதத்திலே எல்லோரும்!
ஏய உணர்வுடன் எந்நாளும்
பெற்றோரை இனிய
முறையிலே பார்த்திடுவோம்!
காயும் சொற்களே
பேசாமல் பெற்றோரைக்
கனிவாய் அன்புடன்
கவனிப்போம்! நேய
முறையிலே நெஞ்சாரத்
தானவரை நெஞ்சு நிறைந்திட
நடத்திடுவோம்!

அறிவைக் கொடுப்பவர்
தந்தையெனில் நம்மண்ணில்
அன்பைக் கொடுப்பவர்
தாயன்றோ! செறிவாய்
வளர்த்தனர் இருவருமே
நம்மைத்தான் சேர்த்தே
அணைத்திடக்காத்திடுவோம்!
உறவில் சிறந்தது
உன்னதமாய்த் திகழ்வதுவே
உண்மை தந்தையும்
தாயும்தான்! மறந்தும்
அவரையே மாண்பின்றி
முதியோரில் மனிதா சேர்த்திட
முனையாதே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

**ஜோதிடம்...!?**

நேரிசை வெண்பா!

கோள்கள் நிலையினைக்
கூர்மையாய் வைத்தேதான்

ஆளுமையாய்க்கண்டிடும்
அன்பான... நாளிலே

வாழ்வைக்கணித்திடும்
வண்ணநல் சோதிடமாம்

சூழ்ந்திடும்
கோள்களைச்சொல்!

நம்புவோர்க்கு சோதிடம்
நம்பார்க்கே வாதிடும்

அம்புவியில் கோள்கள்
அழகாகத்..தெம்பாய்

உலாவரும் உன்னதமாய்
நல்மகிழ்வை

உன்னதமாய்க்காணும்
கலையாகும் சோதிடம் காண்!

**மகிழ்ச்சியைத்**
**தேடுவோம்!**


மகிழ்ச்சியைத் தேடுவோம்..
நாம் மகிழ்ச்சியைத்
தேடுவோம்! அகமகிழ்ச்சி
அன்பாகும்..ஆம்
புறமகிழ்ச்சி பண்பாகும்!

நல்வாழ்வை ஊக்குவிக்கும்..
மகிழ்ச்சி நல்வாழ்வைத்
தேக்கிநிற்கும் உள்ளத்தை
மகிழ்வாக்கும்..ஆம்
உன்னதமாய்த்
திகழ்ந்துநிற்கும்!

வாழ்க்கையை உயர்வாக்கும்...
நல் வாழ்க்கையை
உயர்வாக்கும் சூழ்ந்திருக்கும்
நட்புறவை..என்றும்
சோர்வின்றித்தொடர்பாக்கும்!

உறவோடு கலந்தாடு..
என்றும் உணர்வோடு
பண்பாடு!
நட்போடு சேர்ந்தாடு....
என்றும் நானிலமே
புகழ்ந்திடுமே! உள்ளத்தை
மகிழ்வாக்கு..என்றும்
உள்ளத்தில் மகிழ்வில்
கள்ளத்தனம் ஒழித்துவிடு
நானிலமே காலமுமே
உள்ளில்லை!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



1.வேர்வை சிந்தாத
மனிதனாலும் மை சிந்தாத
பேனாவாலும் அனைத்தையும்
சாதிக்க முடியாது

2.நம்முடைய இயலாமைக்கு
கடிகாரம் பழி சுமக்கிறது
நேரம் சரியில்லை என்று

3.என் கோபத்தில்
கைபேசியை தூக்கி
எறிந்தேன் கைபேசி என்ன
பார்த்து சிரித்தது நானும்
இல்லை என்றால் நீ
அனாதை தான் என்றது

4.ஒரு பெண்ணை திருமணம்
செய்வதும் குழந்தை
தருவதும் ஆண் மகனுக்கு
அழகல்ல அவளுக்கு நான்
ஏன் பிறந்தேன் என்ற
எண்ணம் கடைசி வரை
வராமல் பார்த்துக் கொள்வது
தான் உண்மையான ஆண்
மகனுக்கு அழகு

5.என்னை மதிக்காதவனை
நான் மதிக்க மாட்டேன் அது
திமிர் அல்ல என் தன்மானம்

6.கண்ணாடியில் இருக்கும்
அழுக்கு எப்படி நம்
முகத்திற்கு சொந்தம்
இல்லையோ அதேபோல
நம்மைப் பற்றி
மற்றவரின்
எண்ணமும்
சிந்தனையும்
நமக்கு
சொந்தமில்லை



**நடேஷ்**
**கன்னா**
கல்லிடைக்குறிச்சி

**கௌமாரம்**
**நெறி செல்..!**

(குறிஞ்சித் தலைவி
வள்ளிக்குறத்தி.. குமரனை
நினைத்துப் பாடியது..)

மாமரம் தன்னையே மயிலாய்
மாற்றிய.. செந்தூரை ஆளும்
கந்தா! என் சிந்தையிலே
அமரவே வந்தாய்.!.

காட்டுக் குறத்தியென்
திணைப் புறத்தே வந்து
காதலெனும் மான் தேடி
நின்றாய்.! என் காயாத
கானகத்தே கந்தா..!

வேடுவரின் வீட்டினிலே
வேலவனே வந்தமர்ந்து
விடிவிளக்கு எற்றி வைத்தக்
குமரா..!எம் வேதனையை
தீர்த்து வைத்தாய் முருகா.!

ஆதிசங்கரனார் அன்று
நடந்த வழி.. ஆறுவழி
தன்னில் ஆறுமுகம் என்ற
பெயர் கொண்டாய்.! என்
ஆசையெனும் மயிலாசனம்
கொண்டாய்!

தேனும் திணைமாவும்
குறிஞ்சி மலர் யாவும்
பழனிமலை விளையும் பக்தி..
இது பாடுவது வள்ளியெனும்
காதல் குறத்தி.!

காதலாகிக் கசிந்து
ஷண்முகனே சரணம் என..
நாளும் நான் வளர்த்தேன்
ஞானத் தீ.! நான் அல்ல
நீ தான் என்றாள் மலைக்
குறத்தி.!

**வே.கல்யாண்குமார்.**



**கூலிங் !**

கோடை காலத்தில்
கூலிங்கிளாஸ்சும்...
கூலாய் ஒரு கிளாஸ் பீரும்...
கிடைக்கப்பெற்றவன்
அதிபாக்கியசாலி !

**எம்.பி. தினேஷ்**
கோவை



**அல்லாஹு அக்பர்...**

அல்லாஹு அக்பர்...

தக்பீர் முழக்கம் காற்றில் வீச,
தக்வா மணம் வாழ்வில் வீச!
ஸதக்கா தர்மம் கைகளில்
வீச, சந்தோஷம் நம்
முகத்தில் வீச!
இறைவனின் நேசம்
எந்நாளும் – நம்
இல்லத்தின்
கதவை
தட்டட்டும்!
நோன்புப்
பெருநாள்
வாழ்த்துகள்!



**கவிஞர்**
**பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

நட்புகள் தொடரட்டும்.
நாம் வாழும், அல்லது
வாழ்ந்த உயரங்கள்
வெவ்வேறானாலும்,
நட்பை மதிப்போம்.
பக்கம் பக்கமாய் எழுதி
மெனக்கெட்டு
அனுப்ப வேண்டாம்
அஞ்சலில் கடிதங்களை!
அலை பேசியில்
பொத்தாம் பொதுவாக
குட் மார்னிங் என்;பதை
அன்றைய சாதனையாகப்
போட்டுவிட்டுப் போகாமல்
ஆட்காட்டி விரலால்
திரையில் காணும்
பெயர்களைத்
தள்ளிக்கொண்டே போகாமல்
அழைப்போம் இன்று,
ஏதோ ஒரு நண்பரை;
“நலமா?” என்று
விசாரிப்போம்
வரும் பதிலைக் கொண்டும்
உரையாடலைக் கொண்டும்
உள்ளம் சற்றேனும்
அசைகிறதா
இல்லையா எனப்
பரிசோதிப்போம்!

**K.M.D. முத்துக்குமார்,**
மைசூர்.



**தண்ணீர் தினம்**

(மார்ச் 22, சிறப்புக் கவிதை)
"துளியின் தெய்வம்”

தண்ணீர்... கண்ணுக்கு
தெரியும் கடவுள்!
கையில் பிடிக்க முடிந்த
உயிர்!

ஒரு துளி விழும் போது
பூமி சிரிக்கிறது ஒவ்வொரு
துளியாய்க் குறையும் போது
மானுடம் அழுகிறது!

நதியோரச் சலசலப்பு
இயற்கையின் இதயத் துடிப்பு!
மழை பொழியும் ஓசை
வானத்தின் பாசப் பிடிப்பு!

கிணற்றடியில் காலத்தின்
கதை! குழாயடியில்
நிகழ்கால வதை!
நீர் இல்லையேல்
நிலமொரு சாம்பல்!
நீர் ஊற்றெடுக்க
சாம்பலும் ஆகும் நந்தவனம்!


வீணாக்கும் ஒவ்வோர் துளியும்
நாளைய தாகத்தின்
கல்லறை வெடிப்பு!

சேமிக்கும் ஒவ்வோர் துளியும்
எதிர்கால வீணைத் துடிப்பு!



தண்ணீர்
சேமிப்பென்பது
பழக்கமல்ல
பொறுப்பு!

**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்




உலக சிட்டுக்குருவிகளின்
தினம்

**சிற்றுயிர் நேசிப்போம் .**

* விரல்களில் மனிதநேய
உணர்வின் இருப்பிடம்உள்ளது
வந்தமரும் சிட்டுக்குருவி
* கட்டுப்பாடுகளற்ற எங்களை
அறிவியல் சாதனங்கள்
அழிக்கின்றன
கவலையுறும் சிட்டுகள்
* புலம்பெயர முடியவில்லை
பிரபஞ்சம் முழுக்க
நிலைத்திருக்கும்
சுற்றுச் சூழல் கேடுகள்
* அடைகாத்தும் பலனில்லை
குஞ்சுகளில்லா
முட்டைகளுடன்
கைபேசி கோபுரக்கூடுகள்
* வீட்டின் ஜன்னல்களைத்
திறந்து வைத்துக்
காத்திருக்கிறேன்
எப்போது வரும் சிட்டுகள்
* கண்ணீர் கரைபுரண்டது
எங்களது விற்ற வீட்டின்
சிட்டுக் குருவிகளுக்காக

**கா.ந.கல்யாணசுந்தரம்.**



**இருள் விலகா புலர்**
**பொழுதிலென் விழிப்பு!**

முட்கள் மூன்றின் இணைவில்
நேரம் அறிவித்த காலன்!
சப்தித்துக்கூவுகிற
கோழி அதிகாலையை
தட்டியெழுப்பி!

படுக்கையிலிருந்து முகம்
துடைத்து கலைகையில்
முன்நீள்கிற தண்ணீர்
செம்பு!
அடுத்தான ஆசுவாசங்களின்
இடை வேளையினூடே ஆவி
மோதிய தேநீர் கோப்பை!

அடுத்தடுத்தான
பேச்சின் நெசவும்
இணையிழைவின் நூற்பும்!
கொஞ்சம் பேச்சு,
கொஞ்சம் ஆசுவாசம்
கொஞ்சம் மனப்பகிர்வு!
வெளியேறுகிறோம்
வீடு விட்டு வீதி மிதித்து!



சென்று
கொண்டிருக்கிறேன்
காலம்
ஆகிப்போனவளின்
நினைவு சுமந்து!

**விமலன்.**



**வளர்ச்சிப் பாதையில்**

போராடி இடம் சேர்ந்து
உயிராய் உருவாகி உடல்
எடுத்து உலகம் பார்க்க
உதித்தது வளர்ச்சிப்
பாதையில்...

விழி திறந்து மொழி புரிந்து
குணம் அறிந்து வாழ்வின்
சூட்சமம் புரிந்தது
வளர்ச்சிப் பாதையில்...

சிந்தையில் நினைந்து
சீரிய செயல் புரிந்து
வெற்றிக்கு வித்தானது
வளர்ச்சி பாதையில்...

எண்ணிய பாதையில்
எடுத்து வைத்த அடியில்
ஏராள தடைகள்

மனதில் கொண்ட
நம்பிக்கை செயலில்
கண்டன வழிகள்

வளர்ச்சிப் பாதையில்
வந்து போன இடர்கள்
வரலாறாய் மாறின
தளரா உறுதியால்
தரணியை ஆண்டன

முகமூடி மனிதர்களை
முழுவதுமாய்க் கண்டு
தகர்ப்பன தகர்த்து தடுப்பன
தடுத்து வளர்ச்சிப் பாதையில்
வசந்தம் வீச

வருங்காலம் வளமாக
நெஞ்சில் கொள்ளும் உறுதி
நினைவில் நிற்பது அறுதி

பகை களைவோம்
படை வெல்வோம்

சிதறும் எண்ணங்களைச்
சீர்படுத்தி சிகரம்
ஏற உறுதி ஏற்போம்
வளர்ச்சிப் பாதையில்
தடையாவும் விடையாகும்
தளர்வின்றிப்
பயணிப்போம்.



**தமிழ்நிலா**

# நூல் விமர்சனம்

அமிழ்தினும் இனிது!
நூல் ஆசிரியர் : கவிஞர் புலவர் இராம. வேதநாயகம்
வனிதா பதிப்பகம் : 11, நானா தெரு, பாண்டி பஜார், தியாகராய நகர், சென்னை 600 017.
பேச : 044 42070663
விலை : ரூ. 80
நூல் மதிப்புரை : கவிஞர் இரா. இரவி

நூலாசிரியர் கவிஞர் புலவர் இராம. வேதநாயகம் அவர்களின் அமிழ்தினும் இனிது நூல் பெயர் பொருத்தம் மிக நன்று. அமிழ்தினும் இனிய கவிதைகளை குழந்தைப் பாடல்களை வடித்துள்ளார். பாராட்டுக்கள். தமிழன்னைக்கு அணி செய்யும் விதமாக படைத்துள்ளார். தமிழே அறியாமல் இன்றைய குழந்தைகள் வளர்ந்து வருகின்றன. தமிழ்மொழி பற்றியும் பண்பாடு பற்றியும் நமது குழந்தைகளுக்கு கற்பிக்க உதவிடும் நூல். ஒவ்வொரு தமிழரின் இல்லத்திலும் இருக்க வேண்டிய நூல். மிக எளிமையாகவும், இனிமையாகவும் பாடல்களை செதுக்கி உள்ளார்கள். படித்ததும் குழந்தைகள் மனதில் பதியும்படியாக செதுக்க உள்ளார்கள்.

முதல் கவிதை புதிய ஆத்திசூடி படித்தால் போதும் வாழ்க்கையில் கடைபிடித்தால் வாழ்க்கை சிறக்கும். புதிய ஆத்திச்சூடி! அனுதினம் பள்ளி செல் ஆசு நீக்கு இனிக்கப் பேசு ஈதல் சிறப்பு உள்ளம் தூய்மை செய் ஊக்கம் கொடு எண்ணித் துணிக ஏணி போல உதவு ஐயம் போக்கு ஒற்றுமையே உயர்வு ஓதுதல் விலக்கேல் ஔவை வழி செல்.

குழந்தகளுக்கு அறிவு புகட்டும் விதமாகவும், சொற்களையும் அதற்குரியனவற்றையும் அறிமுகப்படுத்தும் விதமாகவும் பாடல் புனைந்து உள்ளார்கள். எறும்பைப் போல ... கரும்பைப் போல நீயும் / இனித்திட




வேணும் பாப்பா எறும்பைப் போல நீயும்/ உழைத்திட வேணும் பாப்பா மானைப் போல நீயும்/துள்ளிட வேணும் பாப்பா தேனைப் போல நீயும்/ சுவைத்திட வேணும் பாப்பா இன்றைய குழந்தைகள் பள்ளி செல்கின்றனர். பள்ளி முடிந்து வந்து விளையாடுவதற்கு நேரமே இல்லை. தனிப்பயிற்சி வகுப்பிற்கு அனுப்பி விடுகின்றனர். இரவாகி விடுகின்றது. உறங்கி விடுகின்றனர். வெளிஉலகமே தெரியாத கிணற்றுத் தவளையாகவே வளர்ந்து வருகின்றனர். அவர்களுக்கு விளையாடுக என்று அறிவுறுத்தும் விதமாக வடித்த பாடல் மிக நன்று.

முன்னின்று விளையாட்டை நடத்து! மாலையில் விளையாடு தம்பி நீ / மகிழ்வாக ஓடியாடு தம்பி! வேளையில் பள்ளி செல் தம்பி உனக்கு /வெறும் படிப்பு போதாது தம்பி காலையில் கடமைகள் தம்பி நீ/ கனிவாகச் செய்திடுவாய் தம்பி வாழைபோல நன்மைகள் தம்பி நீ/ வளமாக செய்திடுவாய் தம்பி.! மகாகவி பாரதியார் பற்றி குழந்தைகளுக்கு அறிவிக்கும் விதமாக வடித்த பாடல் ஒன்று மிக நன்று. பாரதியாரின் கதை கேளு!

எட்டையபுரத்தில் பிறந்தவர்/ எளிமை வாழ்வில் சிறந்தவர் எட்டாவளர்ச்சி கவிதையில் ஏழு வயதில் பாடினார். குழந்தைப்பாடல் இசைத்தவர் / குயிலின் பாட்டில் மகிழ்ந்தவர் பழகும் பொருளை எல்லாமே/ பாட்டில் கொண்டு வந்தவர். பாரதியாரின் இயல்பையும், பாடிய வரிகளையும் கண்முன் கொண்டு வந்து வெற்றி பெறுகின்றார் நூலாசிரியர் புலவர் இராம. வேத நாயகம். அறிவியல் அறிவும் குழந்தைகளுக்கு அவசியம் தேவை. எதையும் ஏன்? எதற்கு? எப்படி? எதனால் என்று யோசிக்க வைக்க உதவுவது அறிவியல். எனவே அறிவியல் குறித்தும் பாடியது சிறப்பு. அறிவியலைப் படி! அறிவியலைப் படி தம்பி நீ/ ஆற்றலையே பெறு தம்பி! கருவிகளைப் பயன்படுத்தி நீ / காரியங்கள் செய் தம்பி! ஏவுகணை பார் தம்பி நல் / ஏற்றம் தரும் தம்பி! பாய்ந்து வரும் அணுகுண்டு / நம் பாரதத்தில் உண்டு தம்பி! அறுவடைத் திருநாள் உழைப்பைப் போற்றும் திருநாள் இயற்கைக்கு நன்றி சொல்லும் தமிழர் திருநாள் பொங்கல் பற்றிய பாடல் நன்று. பொங்கல் நல்ல பொங்கலாம்! பொங்கல் நல்ல பொங்கலாம்/ புதுமையான பொங்கலாம்! எங்கும் உள்ள தமிழரும் / ஏற்றிப் போற்றும் பொங்கலாம்! புதிய பானை வைத்தே தான்/ புதிய அரிசி போடுவர்! விதமாய் மஞ்சள் சேர்த்தே தான்/ வெற்றி கீதம் பாடுவர்!

ஒரு நூலகம் திறக்கும் போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படும் என்று பொன்மொழி உண்டு. ஊடகங்களின் வருகையின் காரணமாக வாசிக்கும் பழக்கம் வழக்கொழிந்து நூலகத்திற்கு வருவோர் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. குழந்தைகளுக்கு நூலகம் செல்லும் பழக்கத்தை பெற்றோர்கள் பழக்கி விட வேண்டும். நூலகம் பற்றிய கவிதை நன்று. நூலகமே வழிகாட்டி! நூலகமே வழிகாட்டி நல்ல நூல்களே நூலகமே மதியூட்டி

மரபுக்கவிதையின் தனிச்சிறப்பு என்னவென்றால் எதுகை, மோனை, இயைபுடன் ஓசை நயத்துடன் படித்தால் மனதில் பதிந்து விடும். மரபுக் கவிதை விரும்பிகளுக்கு நல்விருந்தாக உள்ளது நூல். தமிழுக்கு அமுதென்று பேர் என்றார் புரட்சிக்கவிஞர் நூலாசிரியர் புலவர் இராம. வேதநாயகம் அவர்கள். அமிழ்தினும் இனிது எம் தமிழ் என்று பறைசாற்றி உள்ளார்.

நாளந்தா பல்கலைக்கழகம் என்பது ‘நாளும் தா’ என்ற தமிழ்சொல்லில் இருந்து வந்தது. காளி கோட்டம் என்ற தமிழ்ச்சொல்லே கல்கத்தா என்றாகி தற்போது கொல்கத்தா ஆனது. பட்டினம் என்ற தமிழ்ச் சொல்லே பாட்னா ஆனது. இப்படி பல தகவல் அடங்கிய ஆங்கில ஒளிக்காட்சி கண்டேன். தமிழன் என்று சொல்லுவோம், தலை நிமிர்ந்து நிற்போம் என்று சொல்லத் தோன்றியது. இந்த நூல் படித்து முடித்த போதும் அந்த உணர்வே தோன்றியது.

குழந்தைப்பாடல்கள் மூலம் குழந்தைகளுக்கு தமிழ்மொழி அறிவையும் பொது அறிவையும் வளர்த்து உள்ளார். மிதிவண்டி! மிதிவண்டி நல்ல மிதிவண்டி/ மிதமாய்ச் செல்லும் மிதிவண்டிபுதுவண்டி நல்ல புதுவண்டி /போகும் விரைந்தே புதுவண்டி சிறுவர்கள் எல்லாம் ஓட்டிடலாம் /சிறுமிகளும் நன்றாய் ஓட்டிடலாம் பெரியவர்கள் எல்லாம் ஓட்டிடலாம் / புதுமையான மிதி வண்டி.

இந்தப் பாடல் படிக்கும் குழந்தைகளுக்கு மிதிவண்டி பற்றிய அறிவு மனதில் பதிந்து விடும். மிதிவண்டியை மறக்க மாட்டார்கள். நூலாசிரியர் கவிஞர் புலவர் இராம. வேதநாயகம் அவர்களுக்கு பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.






## மேகக் கூட்டங்கள்

விண்வெளியில் மெதுவாய்
நடக்கும் அழகு வெண் மயில்
கூட்டங்கள் விழிகளுக்கு
விருந்தளிக்கும் அழகான
பஞ்சு மேகக் கூட்டங்கள்
காற்றுடன் கலக்கும் போது
கருமையாகி மழை பொழிய
காத்திருக்கும் மேகங்கள்
வரணன் என்ற நண்பனை
பூமிக்கு அனுப்பும் அழகிய
கரு மேகங்கள்ஆதவனை
அழகாக கைகளால் மறைத்து
விளையாடும் கருநிற
மேகங்கள்பூமிக்கு வந்தாலும்
வருவேன் என்று பயம்
காட்டும் மேகங்கள்
ஓவியனின் தூரிகையால்
அழகாக வரையப்பட்ட ஓவியம்
போல் காட்சியளிக்கும்
மிகக் கூட்டம்
விண்ணே எனக்கு மைதானம்
என்று விளையாடும் கரு நிற
மேகக் கூட்டங்கள்.
விண்ணில் தவழும்
குழந்தையாகிய மேகங்களை
ரசிப்போம் மழைக்காக
காத்திருப்போம்....

**உஷா முத்துராமன்**



## ஒருமையுடன் நினது திருமலரடி...!

அறுசீர் மண்டிலம்.

ஒருநெறிப் பட்டமனம்
வேண்டும்ஒண்மையாய்
வாழ்ந்திடவே வேண்டும்
திருவருள் பெற்றிடவே
வேண்டும் தேர்ந்தபா
படித்திடவே வேண்டும்!
அருட்பெருஞ் சோதியன்றோ
வேண்டும் அகமெலாம்
இன்புறவே வேண்டும்
விருப்புடன் வாழ்ந்திடவே
வேண்டும் வீறுடன்
சூழ்ந்திடவே வேண்டும்!
உத்தமர் தம்முறவு
வேண்டும் உன்னதம்
காணவேதான் வேண்டும்
இத்தரை இன்பமாக
வேண்டும் இகபரம் நலமாக
வேண்டும்! எத்திசை
போற்றிடவே வேண்டும்
ஏற்றநல் வள்ளலாரே
வேண்டும வித்தகம்
கொண்டிடவே
வேண்டும்
விளைநலம் பெற்றிடவே
வேண்டும்!



**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## அனுமதி கடிதம்

மரம் வளர்த்தேன்
இளைப்பார நிழல் தந்தது,
களைப்பார காயும், கனியும்,
தந்தது, கால்கள்
பலம் இழந்தப்போது
ஊன்றி நடக்க
கோல்கள் தந்தது,,,,

மகனை வளர்த்தேன்
எதுவுமே தராதவன்
கடைசியாய் வாங்கித்தந்தான்
அனாதைவிடுதியில்
அனுமதி கடிதம்,,, ?!

## நீதானே எல்லாம்

கடவுள் மீது சத்தியம்
செய்யென நண்பன்
சொல்லும்போதெல்லாம்
நான் உன்மீதுதான்
சத்தியம் செய்கிறேன்
உன்னைவிடவா~எனக்கு
உண்மையாக இருந்து
விடப்போகிறார் கடவுள்,,,!

நான் சிரித்தால் இரசிக்கவும்
அழுதால் துடிக்கவும்
உன்னையன்றி
வேறுயார் இருக்கிறார்
உண்மையாய் பழக,,,!

காலங்கள் கடந்தாலும்
காத்திருப்பேன்~உன்
கருவறையில் இடம்
வேண்டி,,,அதுவில்லை
யெனில்நீ காணலாம்
என் கல்லறைத்
தோண்டி,,



**நாகை ஆசைத்தம்பி**
கோவை



## இன்று வந்த இரமலான்!

இன்று வந்தது இந்த
இரமலான்.. இனியப்
பிறையைக் காணும்
இரமலான்.. ஒன்று
இறையோன் தந்த இரமலான்..
உலகம் வாழிய இன்ப
இரமலான்.!
ஈந்து உவக்கும் இந்த
இரமலான்.. ஏழை இல்லம்
வந்த இரமலான்..! ஈத்
முபாரக் என்ற இரமலான்..
எல்லோரும் கொண்டாட வந்த
இரமலான்..!
அல் குரானைத் தந்த
இரமலான்.. அருமைத்
தூதர் நபிகள் இரமலான்..
அன்று சென்ற பாதை
இரமலான்.. அல்லா
ஒருவனை தொழும்
இரமலான்..!



**வே.கல்யாண்குமார்.**



## குருவிச் சத்தம் கேட்கணும்.!

ஒரே ஒரு ஊரிலே..
ஒரே ஒரு குருவியாம்!
ஒரே ஒரு குருவிக்குத்தான்..
ஒரே ஒரு ஆசையாம்.!
ஒரே ஒரு குருவிக்கூடு..
ஆலமரத்தில் கட்டிச்சாம்.
ஒரே குடும்பமாக வாழ..
ஆசையது பட்டுச்சாம்..!

குருவியினம் அருகிவர
கவலையது கொண்டதாம்..
கூடி வானில் பறந்த நாளை
மனதில் நினைத்துப்
பார்த்ததாம்

கைப்பேசி கதிர் வீச்சில்
குருவியினம் குறைந்தது..
காலநிலை மாற்றத்திலே..
வெட்பம் மிகுந்து போனது!

குடிப்பதற்கு நீர் நிலைகள்..
வற்றியிங்கேப் போனது..
முடிவில்லாத சோகத்திலே..
குருவி வருந்திப் பாடுது.!
மனித இனம் மாற மாற
மரங்கள் இன்றிப் போனது..
காடு இங்கு அழியும் போது
குருவிகளோ அழுதது.!

தேன்சிட்டுத் தாங்காது..
தேம்பித் தேம்பி அழுதது!
வான் முழுதும் பறந்தயினம்..
வரட்சியிலே குறைந்தது!

ஒற்றைக்குருவி ஏக்கமிங்கு..
மனிதருக்கு கேட்கட்டும்..
ஒரு குருவி தவித்தாலும்
மனிதன் மனம் பதறட்டும்.!

குருவிக்கூடு இருக்கும் வீடு
கூடிவாழும் இல்லமே..!குருவி
இனம் காக்கும உள்ளம்
கடவுள் வாழும் உள்ளமே..!

குருவிகளே கவலையின்றி
பறக்கவேணும் வானிலே!
தெருவெங்கும்குருவிச்சத்தம்
கேட்கவேணும் காதிலே.!

**வே.கல்யாண்குமார்.**



மகிழ்ச்சிநாள் உலகச்சிட்டுக்குருவிதினம்

## சிட்டுக்குருவிகள் என்றாலே மகிழ்ச்சி தான்

கிராமங்களில் வீட்டு கூரையில் சிட்டுக்குருவிகளின் கூடுகளைக் காணலாம். காலையில் சத்தமிட்டு கொண்டே இருக்கும் பகலில் சில நேரங்களில் சத்தம் கேட்கலாம். ஆனால் மாலையில் திரும்பவும் சத்தங்கள். இரவு ஏழுமணிக்குமேல் நிசப்தம்.

சிட்டுக்குருவி இயல்பாகவே மனித இனத்துடன் ஒத்து வாழும் சிறிய பறவை.
காக்கை, குருவி எங்கள் ஜாதி என்று பாடியவன் பாரதி.

தற்போது அதன் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. அதனால் அதனைப் பாதுகாக்க சில ஆர்வலர்கள் முன்வந்துள்ளனர்.

சேவலுக்கு முன்னமே எழுபவை இந்தச் சிட்டுக்குருவிகள் இதத்திற்கும் புத்துணர்ச்சிக்கும் சுறுசுறுப்புக்கும் பெயர் போனது சிட்டுக்குருவி.

பழுப்பு, சாம்பல், மங்கலான வெள்ளை நிறங்களில் காணப்படும். பரன், ஒடு, மாடம் இவைகளில் கூடுகட்டும்.

தவிட்டுக் குருவி என அழைக்கப்படும் ஒரு வகை சிட்டுக்குருவியும் உண்டு. இதன் உணவுகள் பெரும்பாலும் தானியங்களே. அது தவிர, புழு, பூச்சிகளையும் உண்ணும்.

இனச்சேர்க்கைக்குப் பெண் சிட்டுக் குருவிகளைக் கவர்வது ஆண் சிட்டுக் குருவியின் பொறுப்புத் தானாம்.
அவைகளே கூடு கட்டிக் கொடுக்குமாம்.

சிட்டுக்குருவிகள் ஒரு மணி நேரத்தில் 38 கிலோமீட்டர் பறக்கும். ஆபத்து சமயங்களில் வேகமாக நீந்தி தன்னைக் காத்துக் கொள்ளும்.

சிட்டுக் குருவிகளின் வேறு பெயர்கள் அடைக்கலான், குருவி, ஊர்க்குருவி, வீட்டுக் குருவி, எனவும் சங்ககாலப் பாடல்களில் மனைவுறை குருவி, உள்ளுறை குருவி, உள்ளூர் குருவி எனக் குறிப்பிடப்படுகிறது.

சிட்டுக் குருவிகளின் சத்தம் காதுக்கு இனிமையானவை.

திரைப்படப் பாடல்களில் சிட்டுக்குருவி மிகப்பெரிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

பாடல்கள் சில

சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா?
சிட்டுக்குருவி முத்தம் கொடுத்து சேர்ந்திடக் கண்டேனே!
சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு!
சின்னஞ்சிறு சிட்டே எந்தன் சீனா கற்கண்டே!

தென்னங் கீற்று ஊஞ்சலிலே சிட்டுக்குருவி ஆடுது! தன்
பெட்டைத் துணையைத் தேடுது!

பட்டு வண்ணச் சிட்டு படகுத்துறையை விட்டு
சிட்டுக்குச் செல்ல சிட்டுக்கு ஒரு சிறகு முளைத்தது
சிட்டுக்குருவி வெட்கப்படுது

பூஞ்சிட்டுக் குருவிகளா புது மெட்டு தருவீர்களா
புல்வெளி புல்வெளி எங்கும் பனித்துளி பனித்துளி சிட் சிட்
சிட்டுக்குருவி சிட்டு போலே முல்லை மொட்டு போலே
ஏய் பறந்து செல்லும் சிட்டுக்குருவி ஏ குருவி சிட்டுக்குருவி...

**Bhanumati Nachiyar**

## பயம்

முன்பெல்லாம் அவளுக்கு
பேய் என்றால் பயம்...
நாய் என்றால் பயம்...
இருட்டு பயம்...
திகில் படங்கள் பயம் !
இப்போதெல்லாம்
அவளுக்கு
ஒரே பயம்
மனிதர்கள்
மீது மட்டுமே !



**எம்.பி. தினேஷ்:**
கோவை



பட்டினியைப் பற்றி
பட்டினியா இருக்கும்
நான் நாங்கள் எழுதுவதை
விட ஒரு கவிஞரோ,
ஒரு எழுத்தாளரோ
எழுதினாள் நன்றாக
யிருக்கும்.
அதுதான்
கவிதையாகவோ
கதையாகவோ
மதிக்கப்படு
கிறது.



**துங்கன்**

பெருவணிக அங்காடிகளின்
நெடுவரிசை காத்திருப்பில்
நின்று கொண்டிருந்த
பொழுதாவது
என் நினைவில்
இடறிவிட்டிருக்கலாம் ......

வியர்த்த பிசுக்குகள்
உலர்ந்துகொண்டிருக்கும்
பொழுதே வந்துவிட்டிருந்த
எனது முறைக்குச்
சற்றுமுன்னராவது என்னுள்
வந்துவிட்டிருக்கலாம்.....

பெரியதாய் உள்ளிழுத்த
சதவிகிதக் கழிவுகள்....
சுழியமாய் அச்சேறியிருந்த
சிட்டைகளோடு
சில்லறைக்குப் பகரமாய்
திணிக்கப்பட்டிருந்த
சுவாசப் புத்துணர்வி
வில்லையாவது எனக்குள்
கிளறிவிட்டிருக்கலாம்.....

அரைக்கிலோ வெல்லத்திற்கு
சில்லறை இல்லை...
அரநூறாப் போட்றவா...?

வேண்டாமெனில்...சரி.
அப்பறம் வாருங்க...
வெனச் சொல்லி.. சரியான
மீதங்களோடு.. கூடவே
கொறிக்கக் கொஞ்சம்
கடலையும் கொடுக்கும்
அண்ணாச்சிகள்...

இன்னும்கூட
பிடிவாதமாகவே
ஞாபகங்களில் வருவதற்கு
மறுத்துக்கொண்டிருந்தார்கள்...

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்



## கண்டாங்கி:

கண்டாங்கி:
கண்டாங்கி சேலை
கட்டி கவனமாக நடந்து
வந்து உண்டாளத் தூக்குச்
சட்டி உணவுமே எடுத்து
வந்து கண்ணான
கணவனுக் காகக்
கரைமேடு கடந்தே வந்த
பெண்டாட்டி
என்றே
உன்னைப்
பெருமையாய்ப்
புகழ்கின்றேனே!



**வைரமணி**
சென்னை



## மகிழ்வுறு நினைவு

கூடி வாழ்ந்தால் கோடி
நன்மை

பெற்றோர் சேர்ந்திருக்க
பெருமை கொள்வோம்

அனுபவமும் அறிவும்
கிடைக்க பெறுவோம்

ஒற்றுமையே உயர்வு என்பது
உணர்வோம்

வீடு நலம்பெற நாடு
நலம்பெறும்

குடும்பமாய் கோவிலுக்கும்
கடற்கரைக்கும் போவோம்

குழப்பம் இல்லாது
குதூகலித்து மகிழ்வோம்

தனிமை தவிர்ப்போம்
தன்னலம் பேணுவோம்

வாய்விட்டுச் சிரித்து நோயை
விரட்டுவோம்

மருத்துவம் இல்லா மனநலம்
வேண்டுவோம்

**வி.பிரபாவதி** மடிப்பாக்கம்



## "உலக சிட்டுக்குருவிகள் தினம்"

மாடிப் படியோரம்
மரக்குச்சிக் கூடு கட்டி...
மனிதருடன் வாழ்ந்த
நாட்கள் மலரும்
நினைவுகளில்மட்டும்!

அரிசி மணிகள் விருந்து
அன்புதான் அதன் உலகம்...
ஆனால் நாம் கொடுத்தது
அமைதியற்ற பூமி
சுவாசமற்ற வானம்

கம்பி கோபுரங்கள்
உயர்ந்த நாளன்றே
குருவிகளுக்கு கல்லறை
தோண்டப்பட்டு விட்டது!

செல்போன் டவர்க் கதிர்கள்
கண்ணுக்குத் தெரியாத
குத்துகள்! அது மனிதர்களை
இணைக்கும்
குருவிகளை அழிக்கும்!

“சிக்னல்” நாடி நாம்,
“சிறகு” நாடி அது!

மரங்கள் விழும்
ஒவ்வொரு நேரமும்
ஒரு கூடு சிதறும்!
ஒரு குடும்பம் பதறும்!

சிமெண்டு சுவர்களில்
குருவிக்கு இடமில்லை
கண்ணாடி ஜன்னல்களில்
பிரதிபலிப்பு கூட இல்லை!

ஒரு காலத்தில்
விருந்தாளியாய் இன்று
புகைப்படங்களில் வாழ்கிறாள்!

“நாங்க என்ன
தவறு செய்தோம்?”
எனக் கேட்காத அதன்
மௌனம் மனிதனின்
சுயநலத்தைச்சுடுகின்றது?

கதிர்வீச்சும், கொடூரமும்
சேர்ந்தால் சிறு
உயிர்கள் கரையும்!
இதை உணராத
விஞ்ஞானமும் முடமே!

“நான் எங்கே போவேன்?”
என்று கேட்ட குரல் கேட்கலை
ஏனென்றால் நம் காதில்
ஹெட்போன் இருந்தது...

ஒரு நாள் சிட்டுக்குருவிக்
கதைகள் புத்தகத்தில்
மட்டும் இருக்கும்... அப்போது
குழந்தைகள் கேட்கும்
“கொன்றது...யாரென்று?”

பதில் சொல்ல கூகுளைத்
தேடுவோம்!

மனிதா... ஒரு மரம் நடு...
ஒரு கூடு தொங்கவிடு...
ஒரு துளி தண்ணீர் வை...

நாளை சிட்டுக்குருவி
இனம்
திரும்பி வந்தால்
அது இயற்கையளித்த
மன்னிப்பே ஆகும்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

உரத்தை எதிர்நோக்கி
விளைநிலம்: மொட்டுகளாக
வெளிவரும் சமயம்– வானின்
தேன் எங்கும் சிதற–
விதைத்தவன்

தவறவில்லை– காண–
நாட்கள்–வாரங்களாக மாற–
மெய்யுடலோ வெற்று மேனிப்
போல்– படர உரியவன்
விதைகளை மட்டும்

இட்டு– தண்ணீர் பாத்திகட்ட
நானோ – நிற்கிறேன்–
ஓட்டடைக்கம்பமாக
பின், எனக்கும் பசிக்குமென
எண்ணாமல்– எங்கே
தொலைந்தாய்? தேட
எத்தனிக்கையில் நீயோ
எதுவும் கிடைக்கவில்லை–

என்கிறாய்!!!! என்னுடைய
தமையனின்– சாணமே

எனக்கு மிகப்பெரிய
உணவாகும்!!

சீக்கிரம் எடுத்து வா!! என்
பசியினை அமர்த்திவிடு!!!
உன் குடும்ப மக்களின்
பசியினை– வாழ்நாள்
முழுதும் நான் ஆற்றுவேன்!!!!

இப்படிக்கு,
உரத்தை
எதிர்நோக்கி
இருக்கும் உன்
விளைநிலம்!!!.
நன்றி



**பானு ஸ்ரீ**
பாண்டிச்சேரி

## உலக கவிஞர்கள் தினம்.!

நான் ஒரு கவிஞனுங்கோ.. என்னை உசுப்பேத்தி..
உசுப்பேத்தி.. நாலுபேரு சொன்னாங்கோ.!

இலக்கணமே இதுல இல்லே.. என்று சிலர் சொன்னாங்கோ..
ஏறாத மேடையெல்லாம் ஏற்றி வைத்துச் சொன்னாங்கோ..
தலைக்கணத்தில் மிதப்பதாக.. என்னைப் பார்த்துச்
சொன்னாங்கோ.. தமிழன் இல்லே.. என்று கூட மறைமுகமாச்
சொன்னாங்கோ.!

கைக் காசைப் போட்டு நானே புத்தகங்கள் போட்டேங்கோ..
கையைத்தட்டி ரசித்துவிட்டு வாங்காமலேப் போனாங்கோ..
கவிதை எமக்குத் தொழிலென்று நான்கூடச் சொன்னேங்கோ..
சோத்துக்கு என்ன செய்கிறாய்? என்று கேலியாகப்
பார்த்தாங்கோ..!

காசுள்ள கவிஞனெல்லாம் விருது வாங்கப் போனாங்கோ..
காசில்லை என்றதாலே மூன்றாம் பரிசுத் தந்தாங்கோ..
ஆசையுடன் கவிதை எழுத.. அடியேனும் வந்தேங்கோ..
ஆனாலும் கடைசியிலே பாடு என்று சொன்னாங்கோ..!

**வே.கல்யாண்குமார்.**

ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
• PREDICTION & SOLUTIONS
• MONEY • LOVE
• HEALTH • FAMILY
• BUSINESS • CAREER
• MARRIAGE

ARG CONSTRUCTIONS
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
● Residential Construction
● Commercial Construction
● Customer Satisfaction
Contact Us 9710348377

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
✓ Fast Developing Area
✓ Near Upcoming Airport
✓ Excellent Appreciation Value
✓ Suitable for Residential & Investment
✓ Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide
Targeted Leads
to grow your
buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


ந.சண்முகம்
முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி
படத்திறப்பு - புத்தக வெளியீடு - நலத்திட்ட உதவிகள் வழங்குதல் - அழைப்பிதழ்
தேதி : 22-03-2026
ப.அ.பழனிராஜன்
கு.பிச்சாண்டி
எ.வ.வே.கம்பன்


நினைவஞ்சலி செலுத்தும் அமைப்புகள் மற்றும் நிர்வாகிகள்


விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை
22.03.2026


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009



Happy Birthday
L.LOGATHAN




Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai




WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424




START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009




WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872




WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact:
8428872887




keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com




WANTED
TELECALLERS
• Work at Home
• Fulltime or Parttime
Salary Rs. 20000 to 50000/-
Call / Whatsapp:
7789941009
9337501889




Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
பேப்பர்பாய்
8122664699




தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE





அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/ மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009




அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




# தெய்வம் தந்த வீடு

நம் உடல் ரகசிங்களைப்பற்றி அறிவோம்...

பூரண ஆயுள் என்பது 120 ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்வது.

ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்.

மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.

மனித மூளையில் 6 கிராம் அளவிற்கு தாமிரம் உள்ளது.

ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீட்டர்.

நமது ரத்தம் ஒரு நாளில் 30 கோடி கி.மீ பயணம் செய்கிறது.

நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்துகிறது.

நமது இதயம் ஒரு நாளில் 1,03,689 முறை துடிக்கிறது.

மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை மூன்று ஆயிரம்.

உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு 25 வாட்.

ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் ரத்தத்தின் அளவு 5 லிட்டர்.


கைரேகையைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.

கண் தானத்தில் கறுப்பு விழிகள் மட்டுமே அடுத்தவருக்குப் பொருத்தப்படுகின்றன.

900 பென்சில்களைத் தயாரிக்கும் அளவிற்கு மனித உடலில் கார்பன் சத்து இருக்கிறது.

மனித உடலில் மிகவும் பலமான பகுதி விரல் நகங்களே. அதில் கெராடின் சத்து உள்ளது, இது காண்டா மிருகத்தின் கொம்புகளில் காணப்படுவதாகும். மரணத்திற்கு பிறகும் கூட மனிதனின் நகத்திற்கு ஒன்றுமே ஆகாது....



அதிசயங்கள் நிறைந்த மனித உடல்...

மனிதன் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவருடைய உயரம் 8 mm அதிகரிக்கும், தூங்கி எழுந்தப் பிறகு மீண்டும் பழைய உயரமே இருப்பார்.

இதற்கு காரணம் மனிதன் உட்காரும் போது அல்லது நிற்கும் போது புவி ஈர்ப்பு விசையின் காரணமாக எலும்புகளின் மீது ஏற்படும் அழுத்தமாகும்.

ரத்த நாளங்கள், செல்கள் :-

1 நமது உடல் எடையில் 14 சதவிகிதம் எலும்புகளால் ஆனது, 7 சதவிகிதம் ரத்தம் ஆகும்.

2. நுரையீரலில் 300,00 மில்லியன் ரத்த நாளங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டால் அதன் நீளம் 2400 கிலோமீட்டராக இருக்கும்.

3. ஒவ்வொரு சிறுநீரகமும் ஒரு மில்லியன் வடிகட்டிகளை (Filters) கொண்டுள்ளது. அவைகள் ஒரு நிமிடத்திற்கு 1.3 லிட்டர் ரத்தத்தை வடிகட்டுகிறது. மேலும் ஒரு நாளில் 1.4 லிட்டர் சிறுநீரை வெளியேற்றுகிறது.

4. மனிதனின் ஒரு தனித்த ரத்த அணு, உடல் முழுவதையும் சுற்றிவர 60 வினாடிகள் மட்டுமே எடுத்துக் கொள்ளும்.

5. மனித உடலின் மிகப் பெரிய செல் பெண்ணின் கருமுட்டையாகும், மிகச் சிறிய செல் ஆணின் விந்தாகும்.

6. நமது உடலில் உள்ள ரத்தக் குழாய்களின் நீளம் சுமார் 600,000 மைல்கள். அதாவது இந்த தொலைவில் நாம் இரண்டு முறை உலகத்தைச் சுற்றி வந்து விடலாம்.

தசை :-

1. கண்களின் தசையானது ஒருநாளில் 100,000 முறை அசைகிறது, அதற்கு சமமான வேலையை உங்கள் கால்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றால் தினமும் 80 கிலோமீட்டர் தூரம் நடக்க வேண்டும்.

2. மனிதன் ஒரு அடி எடுத்து வைக்க 200 தசைகள் பயன்படுத்தப்படுகின்றன.

கால்கள் :-

1. காலின் பெருவிரல் இரண்டு எலும்புகளைக் கொண்டிருக்கும், ஆனால் மற்ற விரல்கள் ஒவ்வொன்றும் மூன்று எலும்புகளைக் கொண்டிருக்கும்.

2. கட்டை விரலின் நீளமும், மூக்கின் நீளமும் சமமாகும்.

3. மனித கால்களில் ஒரு ட்ரில்லியன் வரையிலான பக்டீரியாக்கள் இருக்கும்.

கண்கள் :-

நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம், 500 விதமாக ஒளிகளைப் பிரித்தெரியும் சக்தியுண்டு.

மூளை :-

1. மனித மூளையில் சுமார் 100 பில்லியன் நரம்பு செல்கள் உள்ளன, 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்பு செல்கள் இறக்கின்றன.

2. நாம் சுவாசிக்கும் மொத்த ஆக்சிஜனில் 20 சதவிகிதம் மூளைக்குச் செல்கிறது.

3. நமது மூளை 80 சதவிகிதம் நீரால் ஆனது, மூளையின் செயல்திறன் பகலை விட இரவில் அதிகமாக இருக்கும்.

இறப்பு :-

மனிதன் உயிரிழந்தப் பின்பு உறுப்புகள் செயல் இழக்கும் நேரம்

கண்கள்- 31 நிமிடங்கள்
மூளை- 10 நிமிடங்கள்
கால்கள்- 4 மணிநேரம்
தசைகள்- 5 நாட்கள்
இதயம்- சில நிமிடங்கள்




1. தினமும் வெதுவெதுப்பான நீரில் சிறிது தேன் கலந்து பருகினால் தொப்பை குறையும்.

2. தேங்காய் எண்ணெய் உரையாமல் இருக்க அதில் சிறிது விளக்கெண்ணெய் சேர்க்க வேண்டும்

3. தாய்ப்பால் அதிகம் சுரக்க சிறிது வந்து அப்படியே வாயில் போட்டு தண்ணீர் அருந்த வேண்டும்

4. விளாம் பழத்தில் சிறிது தேன் விட்டுப் பிசைந்து சாப்பிட்டால் ஞாபக சக்தி அதிகரிக்கும்

5. காலில் முள் குத்தி விட்டால் அந்த இடத்தில் சிறிது வாஸ் லைன் தடவினால் முள் தெளிவாக தெரியும்

6. தேங்காயை நீளமாக பார்த்து வாங்கினால் அதன் உள்ளே பருப்பு நிறைய இருக்கும்

7. நைலான் துணியை வெட்டினால் கத்தரிக்கோல் மழுங்கிவிடும் இதனை தவிர்க்க கத்திரியை லேசாக சூடாக்கி கொண்டு பின்னர் வெட்டணும்



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

# மீம்ஸ்










| | |
|---|---|
| நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்? | மணிக்கூடு |
| மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன? | ஈசல் |
| நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்? | பென்சில் |
| விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன? | தும்பிக்கை |
| வெள்ளத்தில் போகாது, வெந்தணலில் வேகாது. கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தாலும் குறையாது. அது என்ன? | கல்வி |



# ஜோக்ஸ்

வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம்
பெண்: இலையை மடிக்க வேண்டாம்.

விருந்தினர்: ஏன் மடிக்க வேண்டான்னு சொல்றீங்க

பெண்: அடுத்து வர்றவங்க சாப்பிடத் தான்.

விருந்தினர்: ஐய்யோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா?

பெண்: இப்போ நீங்க கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன?

விருந்தினர்: ???

------------------------------

எதிர்பதம்
Subramaniyan "Saw"my-யின் எதிர்பதம் என்ன?

Subramaniyan "did not" see me


------------------------------

"இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க"
"எப்படி சொல்ற?"

"பாருங்க! குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?"

"நாசமா போச்சு, அவள முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிப்போ"

------------------------------



------------------------------

காதலன் : "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"
காதலி : "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"

காதலி : "ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?"
காதலன் : "நிச்சயமா நீதான், ஏன்னா நேத்திக்குதான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"

------------------------------

மனைவி : "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல 'ஐ லவ் யூ' சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"

கணவன் : "பின்ன ஞாபகம் இருக்காதா, அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"

------------------------------

ஆண் : "ஐ லவ் யூ டியர், உனக்காக என் உயிரக்கூட தயாராக இருக்கேன்"
பெண் : எப்ப? எப்ப? ? ? ?....

------------------------------

டேட்டிங்போது பேச்சை இப்படி ஆரம்பிக்கலாமே. . .
பையன் : "உனக்கு கீரைப் பிடிக்குமா?"

பெண் : "ஊஹும். . ."

பையன் : உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருக்காங்களா?

பெண் : ஊஹும். . .

பையன் : "சப்போஸ், உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருந்தா அவங்களுக்கு கீரை பிடிக்குமா?"

பெண் : ?!?!?!



# ஜோதிடம் அறிவோம்



## ஆயில்யம் நட்சத்திரம்



நவகிரக சாந்தி செய்ய ஏற்ற நாள்.
கிணறு, குளம் வெட்டுவதற்கு உகந்த நாள்.
மந்திர பிரயோகம் செய்ய நல்ல நாள்.
எதிர்ப்புகளை வெல்வதற்கு ஏற்ற நாள்.
மருந்து தயாரிக்க சிறந்த நாள்.
மூலிகைகள் சேகரிக்க உகந்த நாள்.
மந்திரங்களை ஜெபிக்க நல்ல நாள்.
யோகாசன பயிற்சி செய்ய ஏற்ற நாள்.
விவசாயம் மேற்கொள்ள சிறந்த நாள்.
ஆயுத பயிற்சி மேற்கொள்ள உகந்த நாள்.
வேட்டைகளுக்கு செல்ல ஏற்ற நாள்.
குஸ்தி மற்றும் மல்யுத்த போட்டிகளில் கலந்து கொள்ள நல்ல நாள்.

## மகம் நட்சத்திரம்



கதிறுக்க சிறந்த நாள்.
திருமணம் செய்ய உகந்த நாள்.
வாகனம் வாங்க ஏற்ற நாள்.
கிணறு வெட்டுவதற்கு சிறப்பான நாள்.
மருந்து உண்ணுவதற்கு சிறந்த நாள்.
விதை விதைக்க உகந்த நாள்.
தானியம் வாங்க ஏற்ற நாள்.
கால்நடைகளை பழக்க சிறப்பான நாள்.
மகான்களை தரிசிக்க நல்ல நாள்.
ஆபரணங்கள் செய்ய சிறந்த நாள்.
தற்காப்பு கலைகளை பயில உகந்த நாள்.
வேத விரதங்களை பூர்த்தி செய்ய ஏற்ற நாள்.
வீடு கட்ட ஆரம்பிக்க சிறப்பான நாள்.
தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க நல்ல நாள்.

## பூரம் நட்சத்திரம்



மருந்து உண்ணுவதற்கு சிறந்த நாள்.
நவகிரக சாந்தி செய்ய ஏற்ற நாள்.
தற்காப்பு கலைகள் கற்க உகந்த நாள்.
விஷமருந்து தயாரிக்க நல்ல நாள்.
கால்நடைகள் வாங்க சிறப்பான நாள்.
ஓவியம் வரைய அல்லது எழுத தொடங்க ஏற்ற நாள்.
நோயாளிகள் மருந்து உண்பதற்கும், குளிப்பதற்கும் நல்ல நாள்.
வழக்குகளை வாதிட உகந்த நாள்.

## உத்திர நட்சத்திரம்



புதிய வாகனங்கள் வாங்க ஏற்ற நாள்.
விதை விதைக்க சிறப்பான நாள்.
வியாபாரம் தொடங்க நல்ல நாள்.
ஆயுத பயிற்சி மேற்கொள்ள சிறந்த நாள்.
தெய்வ பிரதிஷ்டை செய்ய உகந்த நாள்.
ஆபரணங்கள் செய்ய ஏற்ற நாள்.
நீர்நிலைகள் தோண்டுவதற்கு சிறப்பான நாள்.
புதுமனை குடி போக நல்ல நாள்.
குழந்தைக்கு பெயர் வைக்க சிறந்த நாள்.
வளைகாப்பு (சீமந்தம்) நடத்த உகந்த நாள்.
ஆடை, அணிகலன்களை வாங்க ஏற்ற நாள்.
விவாகம் போன்ற சுபகாரியங்கள் செய்ய சிறப்பான நாள்.
குழந்தையை தொட்டிலில் இட நல்ல நாள்.
வியாதிக்கு மருந்து உட்கொள்ள சிறந்த நாள்.
புதிய வேலையில் சேர்வதற்கு உகந்த நாள்.

## அஸ்தம் நட்சத்திரம்



உபநயனம் செய்ய ஏற்ற நாள்.
ஆபரணங்கள் செய்ய சிறந்த நாள்.
சீமந்தம் செய்ய சிறப்பான நாள்.
காதுகுத்த நல்ல நாள்.
கல்வி கற்க தொடங்குவதற்கு ஏற்ற நாள்.
யாத்திரை செல்ல சிறந்த நாள்.
ஆடை, ஆபரணங்கள் வாங்க உகந்த நாள்.
வண்டி, வாகனங்கள் வாங்க சிறப்பான நாள்.
புதுமனை புகுவதற்கு நல்ல நாள்.
கடற்பயணம் மேற்கொள்ள ஏற்ற நாள்.
விதை விதைக்க சிறந்த நாள்.
தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்க உகந்த நாள்.
தானியங்கள் விற்க சிறப்பான நாள்.
மந்திரங்கள் கற்க நல்ல நாள்.
உயர் அதிகாரிகளை பார்க்க ஏற்ற நாள்.
மருந்துண்ணுவதற்கு சிறந்த நாள்.
புதிய வேலைக்கு விண்ணப்பிக்க உகந்த நாள்.
வியாபாரம் தொடங்குவதற்கு சிறப்பான நாள்.
கிணறு வெட்டுவதற்கு நல்ல நாள்.
சங்கீதம் கற்க ஏற்ற நாள்.

# பணம் கொட்ட வருகிறாரா சனி பகவான்

சனி பகவான் வரும் 2025 ஆம் ஆண்டு மீன ராசிக்கு செல்கிறார். சனி பகவானின் மீன ராசி பயணம் ஒரு சில ராசிகளுக்கு யோகத்தை கொடுக்கப் போகின்றது. அது எந்தெந்த ராசிகள் என்பது குறித்து இங்கு காணலாம்.

நவக்கிரகங்களில் கர்மநாயகனாக வழங்கக்கூடியவர் சனிபகவான். இவர் செய்யும் செயலுக்கு ஏற்ப பிரதிபலங்களை திருப்பிக் கொடுக்கக் கூடியவர். சனி பகவான் நன்மைகள் தீமைகள் என அனைத்தையும் தரம் பிரித்து இரட்டிப்பாக திருப்பி கொடுப்பார். அதனால் சனி பகவானை கண்டால் அனைவரும் அச்சப்படுவார்கள்.

நவக்கிரகங்களில் கர்மநாயகனாக வழங்கக்கூடியவர் சனிபகவான். இவர் செய்யும் செயலுக்கு ஏற்ப பிரதிபலங்களை திருப்பிக் கொடுக்கக் கூடியவர். சனி பகவான் நன்மைகள் தீமைகள் என அனைத்தையும் தரம் பிரித்து இரட்டிப்பாக திருப்பி கொடுப்பார். அதனால் சனி பகவானை கண்டால் அனைவரும் அச்சப்படுவார்கள்.

சனிபகவான் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு செல்ல 2 அரை ஆண்டு காலம் எடுத்துக் கொள்கிறார். இந்நிலையில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு தனது சொந்தமான ராசிக்கான



கும்ப ராசியில் பயணம் செய்து வருகின்றார். வருகின்ற 2025 ஆம் ஆண்டு சனி பகவான் தனது இடத்தை மாற்றுகிறார்.

சனிபகவான் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு செல்ல 2 அரை ஆண்டு காலம் எடுத்துக் கொள்கிறார். இந்நிலையில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு தனது சொந்தமான ராசிக்கான கும்ப ராசியில் பயணம் செய்து வருகின்றார். வருகின்ற 2025 ஆம் ஆண்டு சனி பகவான் தனது இடத்தை மாற்றுகிறார்.

சனி பகவானின் அனைத்து விதமான செயல்பாடுகளும் அனைத்து ராசிகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த வகையில் சனி பகவான் வரும் 2025 ஆம் ஆண்டு மீன ராசிக்கு செல்கிறார். சனி பகவானின் மீன ராசி பயணம் ஒரு சில ராசிகளுக்கு யோகத்தை கொடுக்கப் போகின்றது. அது எந்தெந்த ராசிகள் என்பது குறித்து இங்கு காணலாம்.

சனி பகவானின் அனைத்து விதமான செயல்பாடுகளும் அனைத்து ராசிகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த வகையில் சனி பகவான் வரும் 2025 ஆம் ஆண்டு மீன ராசிக்கு செல்கிறார். சனி பகவானின் மீன ராசி பயணம் ஒரு சில ராசிகளுக்கு யோகத்தை கொடுக்கப் போகின்றது. அது எந்தெந்த ராசிகள் என்பது குறித்து இங்கு காணலாம்.

**மகர ராசி:** சனி பகவானின் மீன ராசி பயணத்தால் உங்களுக்கு 2025 ஆம் ஆண்டு நல்ல யோகம் கிடைக்கப் போகின்றது. புதிய முயற்சிகள் உங்களுக்கு நல்ல முன்னேற்றத்தைப் பற்றி தரும். தொழிலில் உங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் உங்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கும். வணிகத்தில் இரட்டிப்பான லாபம் கிடைக்கக்கூடும். எதிரிகளால் ஏற்பட்ட வந்து சிக்கல்கள் அனைத்தும் குறையும்.

**மகர ராசி:** சனி பகவானின் மீன ராசி பயணத்தால் உங்களுக்கு 2025 ஆம் ஆண்டு நல்ல யோகம் கிடைக்கப் போகின்றது. புதிய முயற்சிகள் உங்களுக்கு நல்ல முன்னேற்றத்தைப் பற்றி தரும். தொழிலில் உங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் உங்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கும். வணிகத்தில் இரட்டிப்பான லாபம் கிடைக்கக்கூடும். எதிரிகளால் ஏற்பட்ட வந்து சிக்கல்கள் அனைத்தும் குறையும்.

**கன்னி ராசி:** சனிபகவானின் மிதுன ராசி பயணத்தால் உங்களுக்கு 2025 ஆம் ஆண்டு சிறப்பாக இருக்கப் போகின்றது. தொழிலில் உங்களுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைக்கப் போகின்றது. புதிய திட்டங்கள் நல்ல முன்னேற்றத்தைப் பற்றி தரும். பணவரவில் இந்த குறையும் இருக்காது. பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

**கன்னி ராசி:** சனிபகவானின் மிதுன ராசி பயணத்தால் உங்களுக்கு 2025 ஆம் ஆண்டு சிறப்பாக இருக்கப் போகின்றது. தொழிலில் உங்களுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைக்கப் போகின்றது. புதிய திட்டங்கள் நல்ல முன்னேற்றத்தைப் பற்றி தரும். பணவரவில் இந்த குறையும் இருக்காது. பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

**ரிஷப ராசி:** 2025 ஆம் ஆண்டு சனி பகவானின் மிதுன ராசி பயணம் உங்களுக்கு நல்ல யோகத்தை கொடுக்கப் போகின்றது. நிதி ஆதாயங்கள் அதிகரிக்கப்படும். புதிய முதலீடுகள் நல்ல லாபத்தை பெற்று தரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். தொழிலை விரிவுபடுத்தக்கூடிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**ரிஷப ராசி:** 2025 ஆம் ஆண்டு சனி பகவானின் மிதுன ராசி பயணம் உங்களுக்கு நல்ல யோகத்தை கொடுக்கப் போகின்றது. நிதி ஆதாயங்கள் அதிகரிக்கப்படும். புதிய முதலீடுகள் நல்ல லாபத்தை பெற்று தரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். தொழிலை விரிவுபடுத்தக்கூடிய வாய்ப்புகள் கிடைக்கும்.

# எந்த திசையில் துளசி செடி நடவேண்டும்

துளசி செடி இந்து மதத்தில் புனிதமானது மற்றும் போற்றப்படுகிறது. துளசி லட்சுமி தேவியின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது. வீட்டில் துளசி செடியை நடுவது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நிதி நல்வாழ்வைத் தரும் என்று நம்பப்படுகிறது.

வீட்டின் பிரதான வாசலில் துளசி செடியை நடலாமா?

வாஸ்து சாஸ்திரத்தின்படி, ஒரு வீட்டின் பிரதான வாசல் என்பது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் தெய்வங்கள் வீட்டிற்குள் நுழையும் இடமாகும். அத்தகைய சூழ்நிலையில், நேர்மறை ஆற்றலை கடத்தும் பொருட்களை நம் வீட்டின் பிரதான நுழைவாயிலில் வைக்க வேண்டும். துளசி செடி இந்து மதத்தில் புனிதமானது மற்றும் போற்றப்படுகிறது. துளசி லட்சுமி தேவியின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது. வீட்டில் துளசி செடியை நடுவது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நிதி நல்வாழ்வைத் தரும் என்று நம்பப்படுகிறது. வீட்டின் பிரதான நுழைவாயிலில் துளசி செடியை நடலாமா என்று மக்கள் அடிக்கடி யோசிப்பார்கள். வாஸ்து சாஸ்திரம் என்ன சொல்கிறது என்று தெரிந்து கொள்ளுங்கள்.

**துளசி தொடர்பான வாஸ்து வைத்தியம்**

பிரதான நுழைவாயிலில் ஒரு துளசி செடியையும் நடலாம். ஆனால் வீட்டின் பிரதான நுழைவாயிலில் காற்று, சூரிய ஒளி மற்றும் தண்ணீர் இல்லையென்றால், துளசி செடி கூட வாடிவிடும். எனவே, அத்தகைய வீடுகளின்



பால்கனிகளில் துளசி செடிகளை நட வேண்டும். வாஸ்து சாஸ்திரத்தின்படி, துளசியை வீட்டின் முற்றத்திலும் நடலாம்.

**லட்சுமி தேவி மகிழ்ச்சியடைகிறாள்**

வீட்டில் துளசி செடியை வைத்திருப்பது வாழ்க்கையில் மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்பைத் தரும் என்று நம்பப்படுகிறது. துளசி செடி வீட்டில் நல்ல அதிர்ஷ்டத்தை அதிகரிக்கிறது, அதனால்தான் இது ஸ்ரீ துளசி என்று அழைக்கப்படுகிறது. பிரதான நுழைவாயிலில் துளசி செடி இருந்தால், லட்சுமி தேவி மகிழ்ச்சி அடைவாள்.

**எந்த திசையில் துளசி செடி நடவேண்டும்**

இந்த திசையில் துளசியை நடுவது மங்களகரமானதாகக் கருதப்படுகிறது வாஸ்து சாஸ்திரத்தின்படி, துளசியை பால்கனியின் வடக்கு அல்லது கிழக்கு திசையில் நட வேண்டும். வடக்கு திசை குபேர பகவானின் வசிப்பிடமாகக் கருதப்படுகிறது. இந்த திசையில் துளசி செடியை நடுவது லட்சுமி தேவியைப் பிரியப்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, வீட்டின் தெற்கு திசையில் துளசி செடிகளை நடக்கூடாது. இந்த திசை முன்னோர்களின் வசிப்பிடமாகக் கருதப்படுகிறது. இந்த திசையில் துளசி செடியை நடுவதால் லட்சுமி தேவி கோபமடைவதாக நம்பப்படுகிறது.

**துளசி நடுவதற்கு உகந்த நாள் எது?**

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் துளசி செடிகளை நடுவது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. வியாழக்கிழமை விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, மேலும் வெள்ளிக்கிழமை லட்சுமி தேவியின் மிகவும் விருப்பமான நாளாகக் கருதப்படுகிறது.

**பொறுப்புத் துறப்பு:**

இந்தக் கட்டுரையில் உள்ள எந்தவொரு தகவல்/பொருள்/கணக்கீட்டின் துல்லியம் அல்லது நம்பகத்தன்மைக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை. இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் பல்வேறு ஊடகங்கள் / ஜோதிடர்கள் / பஞ்சாங்கங்கள் / சொற்பொழிவுகள் / நம்பிக்கைகள் / வேதங்களில் இருந்து சேகரித்து உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கள் நோக்கம் தகவல்களை வழங்குவது மட்டுமே. இதிலிருந்து வெறும் தகவல்களை மட்டுமே பயனாளர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றபடி இதிலிருந்து பயன்படுத்திக்கொள்வது பயனாளரின் பொறுப்பாகும்.

# திதி என்பது....





திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம். அமாவாசை அன்று சூரியனும் சந்திரனும் சேர்ந்திருப்பார்கள். அதன் பின் சந்திரன் சூரியனிடம் இருந்து விலகி செல்வார். திதி எனப்படுவது பஞ்சாங்கத்தின் ஒரு முக்கிய பகுதியாகும்.

இந்துக்களின் தமிழ் நாட்காட்டியின்படி ஒவ்வொரு மாதமும் 30 திதிகள் கடைபிடிக்கப்படுகின்றன. அதில் இரண்டு பட்சங்கள் உள்ளன. அவை கிருஷ்ண பட்சம் அல்லது தேய்பிறை மற்றும் சுக்கில பட்சம் அல்லது வளர்பிறை ஆகும்.

வளர்பிறைத் திதிகள்

அமாவாசை நாளன்று சூரியனும் சந்திரனும் 0° (0 பாகையில்) காணப்படுவார்கள். அதனால் பூமியில் இருப்போருக்கு சந்திரனைப் பார்க்கமுடியாது. அதற்குப்பின் சந்திரன் தினமும் ஏறத்தாழ 12° சூரியனின் பார்வையில் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும். 15 ஆம் நாளான பௌர்ணமி அன்று சூரியனில் இருந்து 180° தூரத்தில் இருக்கும். அப்போது சூரியனின் முழுப்பார்வையும் சந்திரனின் மேல் விழுகின்றது. அதாவது இராசிச் சக்கரத்தில் சூரியனில் இருந்து 7-வது ராசியில் இருக்கும்.

# ஆலமரமும் ஆதி சிவனும்





பொதுஆவுடையார் கோவில்/

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தில் இருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பரக் கலக்கோட்டையில் பிரசித்தி பெற்ற பொதுஆவுடையார் கோவில் உள்ளது. தவத்தில் சிறந்து விளங்கிய வான்கோபர் மற்றும் மகாகோபர் என்ற இரு முனிவர்களும், 'இறைவனைச் சென்றடைய சிறந்த வழி இல்லறமா? துறவறமா?' என்று வாதிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது இறைவன் இத்தலத்தில் உள்ள வெள்ளால மரத்தின் கீழ் எழுந்தருளினார்.

பின்னர் அந்த முனிவர்களிடம் 'இல்லறமோ, துறவறமோ எதுவாயினும் அதற்குரிய நெறிமுறைகளைப் பின்பற்றினால் ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்ததும் இல்லை, தாழ்ந்ததும் இல்லை' என பொதுவாகத் தீர்ப்பு கூறினார்.

அதன்காரணமாகவே இத்தல இறைவன், 'பொது ஆவுடையார்' என்றும், மத்தியஸ்தம் செய்தவர் என்பதால் 'மத்தியபுரீஸ்வரர்' என்றும் அழைக்கப்படுகிறார்.

இக்கோவிலில் கார்த்திகை சோமவாரம் விசேஷமானது. அன்று இரவு 12 மணியளவில் நடை திறக்கப்பட்டு பூஜைகள் செய்யப்படுகின்றன. மற்ற நாட்களில் நடை திறக்கப்படுவதில்லை.

இறைவன் சிதம்பரத்தில் நள்ளிரவு பூஜை முடித்த பிறகு, தனது பரிவாரங்களுடன் இத்தலத்து வெள்ளால மரத்தின் கீழ் எழுந்தருளி, அந்த மரத்திலேயே ஐக்கியமானார் என்கிறது தல வரலாறு. எனவே இத்தலத்தை குரு தலமாகவும் கருதலாம்.


இங்குள்ள தல மரத்தைச் சுற்றி சுவர் எழுப்பப்பட்டுள்ளது. சுவருக்கு உட்பட்ட பகுதியே கருவறையாகவும், ஆலமரமே சிவபெருமானாகவும் விளங்குகிறது. பக்தர்கள் ஆலமரத்தையே சிவபெருமானாக வழிபட்டு வருகின்றனர். மரமே மூர்த்தியாக விளங்குவது இக்கோவிலின் சிறப்பாகும்.

மேற்கு நோக்கி வீரசக்தி விநாயகர் சன்னிதியும், அருகில் திருக்குளமும் உள்ளன. அம்பாளுக்கென்று தனி சன்னிதி இல்லை. விநாயகர் சன்னிதிக்கு எதிரில் உள்ள புளிய மரத்தின் அடியில் அலங்கார உடையில் வான்கோபரும், துறவற உடையில் மகாகோபரும் வடக்கு நோக்கி தவக்கோலத்தில் வீற்றிருக்கும் சன்னிதிகள் உள்ளன.

இந்த ஆலமரத்தின் இலைகள் மருத்துவ குணம் கொண்டவை. எனவே பக்தர்களுக்கு இலையும், திருநீறும் பிரசாதமாக வழங்கப்படுகின்றன.


இக்கோவிலில் கடைசி சோமவாரத்தின் போது பட்டுக்கோட்டை மட்டுமின்றி, பல்வேறு மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வந்து இறைவனை வழிபட்டுச் செல்கின்றனர்.

அன்றைய தினம் கோவிலுக்கு வரும் பக்தர்கள் தங்கம், வெள்ளி, பித்தளை ஆகியவற்றால் ஆன பொருட்கள், பணம், நெல், துவரை, உளுந்து, பயறு, எள் முதலிய நவதானியங்களையும், தேங்காய், மாங்காய், புளி, மிளகாய், காய் கறிகள் போன்ற பல்வேறு பொருட்களையும், ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகளையும் காணிக்கையாகச் செலுத்தி வழிபட்டுச் செல்கின்றனர்.



பட்டுக்கோட்டையில் இருந்து 12 கி.மீ. தூரத்தில், முத்துப்பேட்டை செல்லும் பேருந்து வழித்தடத்தில் இருக்கும், பரக் கலக்கோட்டையில் உள்ளது, இந்த பொதுஆவுடையார் திருக்கோவில்.

## தெலுங்கு வருட பிறப்பை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு வழிபாடு



**இராமநாதபுரம் மார்ச் 22:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தெலுங்கு வருட பிறப்பு, யுகாதியை முன்னிட்டு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு சிறப்பு 36 வகையான அபிஷேகங்கள், ஹோமங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, பஜனைகள், பஞ்சாங்கம் ஸ்வரனம் வாசித்தல், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## செய்யாறு அருகே உக்கல் அருள்மிகு ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயில் அம்பாள் நெற்றியில் மூன்றாம் பிறை சந்திர தரிசனம்: ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு



**செய்யாறு மார்ச். 22:** செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் மூன்றாம் பிறை சந்திர தரிசன சிறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம்,செய்யாறு அடுத்த காஞ்சிபுரம்- வந்தவாசி நெடுஞ்சாலையில் உள்ள கூழமந்தல் அடுத்து உள்ளது உக்கல் கிராமம். இங்கு பிரசித்தி பெற்ற மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில் உள்ளது. இக்கோயிலில் நேற்று முன்தினம் யாக வேள்வி பூஜையை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார் .பின்னர் கலச புறப்பாடு நிகழ்வும், புனித நீரால் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனையும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து அமாவாசைக்குப் பிறகு மூன்றாம் நாளான நேற்று முன்தினம் அம்பாள் நெற்றியில் மூன்றாம் பிறை சந்திரன் தோன்றும் அரிய நிகழ்வினை பக்தர்கள் கண்டு வழிபட்டனர்.

பின்னர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

## சுக்கிர வார நன்னாளில் நம் வாசவி அம்மன் ஊஞ்சல் உற்சவத்தில்



**பொள்ளாச்சி மார்ச் 22:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஊஞ்சல் உற்சவம் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரங்கள்,தங்க ஆபரணங்களால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நிறைவேத்தியங்களுடன், மகா தீபாராதனையும், ஊஞ்சல் உற்சவமும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜைகள் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தேர்தல் நடத்தை விதிகள் குறித்து கலந்தாய்வு கூட்டம்




திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்களுடன் தேர்தல் நடத்தை விதிகள் குறித்து திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் உயர்திரு. இரா. இராம்பிரதீபன் அவர்கள் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வாடிப்பட்டி பகுதியில் வாக்குச்சாவடிகளில் தேர்தல் பார்வையாளர்கள் ஆய்வு



**வாடிப்பட்டி, மார்ச்.22:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பகுதியில் சட்டமன்ற தேர்தல் வாக்கு சாவடி மையங்கள் தாதம் பட்டி அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி, பொட்டுலுபட்டி காந்திஜி ஆரம்பப்பள்ளி, மேட்டு நீரேத்தான் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி,பெருமாள் பட்டி அரசு பள்ளிகளில் உள்ள பதட்டமான வாக்குச்சாவடி மற்றும் சிறப்பு வாக்குச்சாவடிகளை போலீஸ் தேர்தல் பார்வையாளர் அஸ்வதிதோர்தே நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சமயநல்லூர் போலீஸ் துணை சூப்பிரண்டு ஆனந்தராஜ், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் கிரேசி சோபியா பாய், கணேசன், வருவாய் ஆய்வாளர் கௌதம் குமார் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் வந்திருந்தனர்.

அதேபோல் தேர்தல் பொது பார்வையாளர் வேதபதி மிஸ்ரா தாதம்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவால வாயநல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் உள்ள வாக்கு பெட்டி வைப்பு அறைககளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அதிகாரி சண்முக வடிவேல், உதவி தேர்தல் அதிகாரி தாசில்தார் ராமச்சந்திரன்,மற்றும் மண்டல துணை தாசில்தார் செந்தில்குமார், தேர்தல் துணை தாசில்தார் கருப்பையா, வருவாய் ஆய்வாளர் கௌதம் குமார் ஆகியோர் இருந்தனர்.

## உச்சிப்புளி புது நகரம் மஸ்ஜிதுல் ஜன்னா பள்ளிவாசலில் ரம்ஜான் சிறப்புத் தொழுகை



**மண்டபம், மார்ச்.22:** ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி புது நகரம் மஸ்ஜிதுல் ஜன்னா பள்ளிவாசலில் ரம்ஜான் சிறப்புத் தொழுகை ஜமாத் தலைவர் ஹாஜி முகம்மது நஹிபு, செயலாளர் ஹாஜி அப்துல்காதர், துணைத் தலைவர் சீனி சிராஜுதீன், முன்னாள் தலைவர் அஜ்மல்கான் மற்றும் ஜமாத் நிர்வாகிகள், பெண்கள் மதராஸா மாணவிகள், வளர்பிறை இளைஞர் சங்கத்தினர் மற்றும் ஊர் பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்ற சிறப்பு ரம்ஜான் தொழுகை நடைபெற்றது. தலைமை இமாம் முகம்மது யூனுஸ் நமது நாட்டின் ஒற்றுமைக்கும், சமுதாய மத நல்லிணக்கத்திற்கும், ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்கும் மற்றும் மக்கள் அனைவரும் ஆரோக்கியத்துடன் வாழ சிறப்பு தொழுகை நடத்தப்பட்டு நிறைவு செய்தார்.

## கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பசுமை தொட்டிகள், மருத்துவம் குணம் கொண்ட செடிகள் வழங்கும் விழா




**திருவண்ணாமலை, மார்ச் 22:** திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு தொட்டியுடன் செடிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் தோட்டக்கலைத் துறை சார்பாக தொட்டி செடிகள் தலைமை ஆசிரியர் மு.பிரசன்னா அவர்களிடம் வழங்கப்பட்டது. தோட்டக்கலை உதவிய இயக்குனர் திரு.அமுல் பிரகாஷ் அவர்கள் மற்றும் தோட்டக்கலை உதவி அலுவலர் திரு. சுந்தரராஜன் அவர்கள் நமது பள்ளிக்கு அலங்கார செடிகள், மருத்துவ குணம் கொண்ட செடிகள் மற்றும் பல வகையான தொட்டி செடிகள் வழங்கினார்கள். உடன் உதவி தலைமை ஆசிரியர் ராமமூர்த்தி அவர்கள், ஆரிமுத்து, சீனிவாசன்,அச்சுதன் ஆசிரியர்கள் மற்றும் பசுமை பள்ளி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயக்குமார் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## குடியாத்தம் நெல்லூர்பேட்டையில் உள்ள ஈத்கா மைதானத்தில் ரம்ஜான் சிறப்பு தொழுகை!



**வேலூர், மார்ச் 22:** 21.03.2026 ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு குடியாத்தம்நெல்லூர்பேட்டையில் உள்ள ஈத்கா மைதானத்தில் சிறப்பு தொழுகை நடந்தது. இந்த சிறப்பு தொழுகையில் அதிமுக நகர செயலாளர் ஜே. கே. என். பழனி, மாவட்ட கழக துணைச் செயலாளர் கஸ்பா ஆர்.மூர்த்தி ஆகியோர் இஸ்லாமிய பெருமக்களுடன் தொழுகையில் கலந்து கொண்டு ஹபீப் டானிங் பேக்டரி, எஸ். பீடி குழுமத்தின் ஆலி ஜனாப் ஏ.முகம்மது ஆமின்சாஹிப்,, ஏ.முகம்மது அசரப், ஏ. முகம்மது ரகுமான் ஆகியோருக்கு சால்வை அணிவித்து ஒருவரையொருவர் ஆர கட்டித்தழுவி ரம்ஜான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் நகர மன்ற துணைத்தலைவர் எம்.பூங்கொடி மூர்த்தி, எஸ். ஐ. அன்வர் பாஷா, வி. இ. கருணா, ஆர். ரவிச்சந்திரன், எல். ஏ. அன்பழகன், ஏ.சிட்டிபாபு,கோல்ட் வி. குமரன், டிஷ் மோகன், பரமாத்மா, தீனதயாளன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கலசப்பாக்கம் தொகுதியில் தெருமுனை பிரச்சார கூட்டம்




**திருவண்ணாமலை, மார்ச் 22:** திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் மேற்கு ஒன்றியம் மேல் வில்வராயநல்லூர், மேலராணி, சேங்க புத்தேரி, சிறுவள்ளூர் கேட்டவரம் பாளையம், கிடாம்பாளையம், கெங்கலமகா தேவி ஆகிய ஊராட்சிகளில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி. எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொது தேர்தல் வாக்குறுதி பிரசுரங்களை பொதுமக்கள் வழங்கி தெருமுனை பிரச்சாரக் கூட்டமும் நடைபெற்றது. இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளையும் சேகரித்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 24 ஆவது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு



**செய்யாறு மார்ச். 22:** திருவண்ணாமலை மாவட்டம் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் தொடர்பான 24 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கி வரவேற்று பயிற்சியினை மேற்கொண்டார்.

பயிற்சியில் இரண்டு பயிற்சியாளர்கள் உள்ளிட்ட 30 பேர் நேற்றைய பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட னர். முடிவில் பயிற்சியாளர் புலவர் ந. கனக சபை நன்றி கூறினார்.

## ரவுசு மணி

பேசிப் பேசியே ஏமாற்றி விடுவார்கள் என்று சொல்வதெல்லாம் பொய்..... அவர்கள் பேச்சில் ஏமாந்து போவது நாம் தான்.

V.முத்து ராமகிருஷ்ணன்



## நம் வாசவி அம்மன் வசந்த நவராத்திரி விழா சிறப்பு வழிபாடு



**சென்னை, மார்ச் 22:** திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா மகேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பராபவ வருஷ வசந்த நவராத்திரியை முன்னிட்டு நவராத்திரி உற்சவம் மூன்றாம் நாள் மூலவருக்கு சந்தன காப்பு அலங்காரமும், உற்சவருக்கு பெனுகொண்ட மகாராணி சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதங்களுக்கான உணவு தானியங்கள் ஒரே தவணையில் வழங்கப்படும்



வருகிற ஏப்ரல் முதல், ரேஷன் அட்டைதாரர்களுக்கு ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதங்களுக்கான உணவு தானியங்கள் ஒரே தவணையில் வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. புதிய கோதுமை கொள்முதலுக்காக கிடங்குகளில் இடமளிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 99% அட்டைகள் ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ளதால், இந்த விநியோகம் தடையின்றியும் வெளிப்படையாகவும் நடைபெறும்; இதனால் மக்களின் அலைச்சலும் பெருமளவு குறையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திமுக கூட்டணியில் 3 தொகுதிகள்



திமுக கூட்டணியில் 3 தொகுதிகள் கேட்டுள்ளோம். நாங்களாகவே விரும்பி 'உதயசூரியன்' சின்னத்தில் போட்டியிடுகிறோம்; திமுக எந்த நிர்பந்தமும் செய்யவில்லை என எஸ்டிபிஐ தலைவர் நெல்லை முபாரக் தெரிவித்துள்ளார். மேலும், "டெல்லி தலைவர்களுக்காக அதிமுக காத்திருப்பது தமிழகத்திற்கு அவமானம். தன் 'ஜனநாயகன்' படப் பிரச்சினைக்கே குரல் கொடுக்காத விஜய்யால் மக்களுக்காக எப்படிக் குரல் கொடுக்க முடியும்? என விமர்சித்துள்ளார்.

## வசந்த நவராத்திரி சிறப்பு வழிபாடு



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் வசந்த நவராத்திரி உற்சவம் 2 -ஆம் நாள்( தன தானியம் செழிக்க ) ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு சிறப்பு பூஜை,அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வசந்த நவராத்திரி உற்சவத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ மீனாட்சி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: குமரியில் குளு குளுன்னு ஒரு சுற்றுலா!



இரண்டு மாதங்களுக்கு முன்பே இந்த வருடக் கோடை விடுமுறையில் நாகர்கோயில், கன்னியாகுமரி சென்று வரலாம் என முடிவெடுத்து, அப்போதே ரயிலில் முன்பதிவும் செய்தாகிவிட்டது. அக்னி நட்சத்திர காலம் ஆரம்பித்த ஒரே வாரத்தில் மாலையில் மழையும், பகலில் கூடுதல் வெப்பமும் வாட்டி எடுக்க, வேர்த்து சோர்ந்த உடலும், டூர் போகும் உற்சாகமும் கலந்துகட்டிய ஒரு கலவையான உணர்வில் பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்தோம்.

ஐந்து மணிக்கு நாகர்கோவிலை அடையவேண்டிய ரயில், இருபது நிமிடம் முன்னதாகவே சென்று விட, மழை தூறிக்கொண்டிருந்த அந்த இனிய காலை வேளையில், லேசாக நனைந்துகொண்டே ஆவினின் வெகு சுமாரான காபியைக் கூட ரசித்து சுவைத்தோம்.

குமரிக்கடற்கரை

அன்று மதியம் வரை கோவில்களுக்கு சென்று விட்டு, சிறிது நேர ஓய்விற்குப்பின், மாலையில் குமரிக் கடற்கரையை அடைந்தோம். கடல் மணலுக்குப் போட்டியாக ஏராளமான கூட்டம் அங்கே. விவேகானந்தர் பாறைக்குப் போகலாம் என நினைத்து, டிக்கெட் வாங்கச் சென்றபோது, அங்கே நின்றிருந்த நீண்.....ட வரிசையைப் பார்த்து மயக்கமே வந்தது. இன்னொரு முறை போய்க்கொள்ளலாம் என முடிவெடுத்து, விவேகானந்தர் பாறை, மற்றும் அய்யன் வள்ளுவர் சிலையை அலைபேசியில் சிறைபிடித்து, ஆக்ரோஷமாக கிளம்பி வந்த அலைகளின் ஓரத்தில் கால் நனைத்து விட்டு திருப்தியடைந்தோம்.

போவோமா ஒரு போட்டிங் தான்!

மறுநாள் காலையில் கிளம்பி திற்பரப்பு அருவிக்கு சென்றோம். முதலில் போட்டிங் போகலாம் என முடிவெடுத்து சென்றால் அங்கேயும் கூட்டத்திற்குக் குறைவில்லை. வரிசையில் காத்திருந்து, எங்கள் முறை வந்ததும், லைப் ஜாக்கெட்டுகளை அணிந்து கொண்டு படகில் பயணித்தோம். இருபது வயதிருக்கும் அந்தப் படகுக்காரருக்கு, உற்சாகமாக துடுப்புப் போட ஆரம்பித்தார். நாங்கள் தண்ணீரின் குளுமையை அனுபவித்தபடி, நீரில் கைகளை அளயவிட்டபடி, சுற்றிலும் இருந்த இயற்கையை ரசித்தபடி, பயணம் செய்தோம். கரையோரத்தில் வளர்ந்திருந்த மரங்கள் தன் தாழ்வான கிளைகளை ஏரித்தண்ணீரில் படரவிட்டிருந்த பாதையில் பயணித்தது அருமையான அனுபவம். அருவியில் குளிக்கவும் நீள வரிசை நின்றிருந்தது.

தெய்வமாக வழிபடப்படும் பொறியாளர்:

அடுத்து நாங்கள் சென்றது பேச்சிப்பாறை அணைக்கட்டிற்கு. கோதையாறு அமைதியாய் ஓடிக்கொண்டிருந்ததைப்பார்க்கையில் அவ்வளவு அழகாக இருந்தது. 48 அடி கொள்ளளவுகொண்ட பேச்சிப்பாறை அணையின்மூலம் குமரி மாவட்டத்தில் இரு போக சாகுபடிகள் நடக்கின்றன. இந்த அணை, 1897-1906-ம் காலகட்டத்தில் ஐரோப்பிய பொறியாளர் அலெக்ஸ்சாண்டர் மிஞ்சின்அவர்களால், அப்போதைய திருவிதாங்கூர் மகாராஜா மூலம் கட்டப்பட்டது. அலெக்ஸ்சாண்டர் மிஞ்சின், மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, 1913-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் தேதி இறந்தார். அவர்மீது மிகுந்த மரியாதையும் மதிப்பும் வைத்திருந்த திருவிதாங்கூர் மன்னர், அவர் உடலை பேச்சிப்பாறை அணைப் பகுதியிலேயே அரசு மரியாதையுடன் அடக்கம்செய்து, அந்தப் பகுதியில் கல்லறை கட்டவும் உத்தரவிட்டார். அதன்பேரில், அங்கு கல்லறை கட்டப்பட்டு இன்று நினைவுச் சின்னமாகக் காட்சியளிக்கிறது. குமரி மாவட்ட மக்கள் அவரை வெள்ளைக்கார சாமி, மூக்கன் துரை சாமி என்று அன்போடு அழைத்தது மட்டுமன்றி, ஏற்கெனவே தாங்கள் வணங்கிவந்த பேச்சியம்மன் சுடலை மாடசாமி கோயிலில் கூடுதல் பீடம் ஒன்று போட்டு, மூக்கன் துரை மிஞ்சினையும் வழிபடத் தொடங்கினர். கொடை விழாவும் எடுத்தனர். ஹம்ப்ரே அலெக்ஸ்சாண்டர் மிஞ்சினின் 150-வது பிறந்தநாள் விழா, 2017ல் குமரியில் விவசாயிகளால் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது என்பதை அறிந்த போது ஆச்சரியமளித்தது.

அந்தப் பலாவைத் தான் நான் கையில பிடிச்சேன் மொமென்ட்:

நாகர்கோவிலில் இருந்து திற்பரப்பு செல்லும் வழியில் இருந்த நிறைய பலாமரங்களை என் மகள் பாவனா வியப்புடன் பார்த்தாள். மாத்தூர் தொட்டிப்பாலத்தை நெருங்கிய போது, அரை கிலோமீட்டர் தூரத்திற்கு, எக்கச்சக்கமான வாகனங்கள் வரிசையில் நின்றிருந்தன. போக்குவரத்து கிளியர் ஆக எப்படியும் பதினைந்து நிமிடங்கள் ஆகும் எனத் தெரிந்தது. அப்போது கார் ஜன்னல் வழியே பார்த்த போது ஒரு வீட்டின் காம்பவுண்டு சுவற்றின் மேல் இரண்டு பலாப்பழங்கள் காய்த்து தொங்குவதைப் பார்த்த பாவனாவிற்கு, அவற்றை தொட்டுப் பார்க்கும் ஆசை வந்தது. அந்த வீட்டின் வெளிப்புறம் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி நின்று ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார். தயக்கத்துடனே அவரை அணுகி, என் மகளின் ஆசையை சொல்லி, ஒரு போட்டோ எடுத்துக்கொள்ள அனுமதி கேட்டேன்." அதுக்கென்ன, தாராளமா எடுங்க. உள்ள வந்து, தொட்டுப் பாருங்க" என கேட்டைத் திறந்து விட்டார். ஆசைதீர தொட்டுப்பார்த்து படமும் எடுத்துக்கொண்டோம். மரத்தின் வேர்ப்பகுதியை ஒட்டியவாறு பலாப்பழம் காயத்திருந்ததை ஆச்சர்யத்துடன் பார்த்தாள் பாவனா.

மாத்தூர் தொட்டிப்பாலம்

திருவட்டார் என்னும் வைணவத் தலத்துக்கு மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது மாத்தூர் தொட்டிப்பாலம். 1966 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மாத்தூர் தொட்டிப் பாலமானது ஆசியாவின் மிக உயரமானதும் மிக நீளமானதும் ஆகும். இந்தப் பாலம் 115 அடி உயரமும், ஒரு கிலோ மீட்டர் நீளமும் கொண்டது. இந்தப் பாலத்தின் நீளம் 1204 அடிகள், உயரம் 104 அடிகள். 28 தூண்கள் இந்தத் தொட்டிப் பாலத்தைத் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு தூணும் 32 அடி சுற்றளவு கொண்டது. இப்பாலம் கணியான் பாறை, கூட்டுவாயுப்பாறை எனும் இரு பாறைகளையும் இணைக்கிறது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## வானிலை மையத்தில் வாய்ப்பு

இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு மையத்தில் (ஐ.ஐ.டி.எம்.,) தற்காலிக பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

'ரிசர்ச் பெல்லோ' பிரிவில் மொத்தம் 15 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: எம்.எஸ்சி., + யு.ஜி.சி., நெட் / GATE / JEST தேர்வு தேர்ச்சி.

வயது: 18-28 (27.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கடைசிநாள்: 27.4.2026

விவரங்களுக்கு: tropmet.res.in

## சி.ஏ., முடித்தவருக்கு நிலக்கரி நிறுவனத்தில் பணி



நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் (என்.எல்.சி., ) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'இன்டஸ்ட்ரியல் டிரைனி' பிரிவில் நெய்வேலி 26, தலபிரா 8, கான்பூர் 6, தூத்துக்குடி 4, சென்னை 4, பார்சிங்சர் 4 உட்பட மொத்தம் 56 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: சி.ஏ., / சி.எம்.ஏ.,

வயது: 18-28 (1.3.2026ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு

ஸ்டைபண்டு: மாதம் ரூ. 22 ஆயிரம்

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கடைசிநாள்: 9.4.2026 விவரங்களுக்கு: nlcindia.in

# மார்ச் மாதம் (2026) வார ராசிபலன்

## 22.3.2026 முதல் 28.3.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் உடல் ஆரோக்கியம் உண்டாகும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தங்கள் நீங்கும். கோபம், படபடப்பு குறையும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்படும். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சலும், பண விரயமும் நீங்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது துரிதமாகும்.

மனதில் வியாபாரம் பற்றிய கவலை அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மனதிற்கு இனிமையான செய்திகள் வந்து சேரும். வேலையை மனதிற்கு பிடித்து செய்வீர்கள். குடும்பத்தில் நிம்மதி அதிகரிக்கும் படியான சூழ்நிலை உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே வீண் வாக்குவாதங்கள் மறையும். பெண்கள் எந்த காரியத்தில் ஈடுபடும் போதும் யோசித்து செயல்படுவது நல்லது..

### ரிஷபம்

இந்த வாரம் திடீர் கோபம் உண்டானாலும் சமாளித்து விடுவீர்கள். எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். எதிர்பாராத வீண் செலவு ஏற்படலாம்.

வீண் பழி வர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக முடியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுரியத்துடன் நடந்து கொண்டு நன்மை அடைவார்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கக் கூடும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும்.

புதிய வீடு கட்டுவது, பழைய வீட்டை புதுப்பிப்பது போன்ற பணிகளை தொடங்க முற்படுவீர்கள். கணவன் மனைவிக்கு இடையே மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு லாபம் அதிகரிக்கும்.

கலைத் துறையினருக்கு புதிய வாய்ப்புகள் ஏற்படும்.

### மிதுனம்

இந்த வாரம் வரவுக்கு ஏற்ற செலவு இருக்கும். விரும்பியது கிடைக்கும். அதே நேரத்தில் அதற்கான கூடுதலாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

மனதில் இருந்த கவலை அகலும். வாய்க்கு ருசியான உணவு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சுபச் செலவு ஏற்படும். கூட்டு தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் பார்ட்னர்களுடன் சுமூகமான முறையில் அனுசரித்து செல்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீர் நெருக்கடிகள் ஏற்படலாம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பயணங்கள் உண்டாகலாம்.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் கவனமாக பேசுவது நல்லது. கணவன், மனைவிக்கு இடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் கல்வி தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துவது நல்லது.

வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது..

### கடகம்

இந்த வாரம் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேரலாம். நல்ல பலன்களையே தரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும் சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். உடல் நலக் கோளாறு அகலும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கடன் பிரச்சனைகள் தீரும். போட்டிகள் குறையும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்தவை நல்ல படியாக முடியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விஷயங்களை தவறாக புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும். வாக்கு வன்மையால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். கணவன், மனைவிக்கு இடையில் இருந்த இடைவெளி குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும்.

பெண்களுக்கு பண வரத்து திருப்தி தரும். கலைத் துறையினர் வெளியூர் பயணம் செல்ல நேரலாம்.

சக தோழர்களுடன் சுமுகமாக பேசி பழகுவது நல்லது மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் உண்டாகும்.

### சிம்மம்

இந்த வாரம் தேவையற்ற குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். மன வருத்தம் நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பண தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் நெருக்கடி ஏற்பட்டு நீங்கும். வழக்கம் போல் வியாபாரம் இருந்தாலும் லாபம் அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த வேலையை செய்யும் முன்பும் அதுபற்றி அதிகம் யோசிப்பார்கள். சிலருக்கு புதிய வேலையும் கிடைக்கலாம். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும்.

கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும். பெண்கள் மற்றவர்களுக்கு உதவி செய்வதால் வீண் அலைச்சல் உண்டாகலாம். கலைத் துறையினருக்கு காரிய வெற்றி பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். மிகப் பெரிய மாற்றம் ஏற்படும். மாணவர்கள் புத்தி சாதுரியத்துடன் நடந்து கொண்டு மற்றவர்களின் பாராட்டை பெறுவீர்கள். கல்வியில் மேன்மை உண்டாகும்..

### கன்னி

இந்த வாரம் எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். புத்தி தெளிவு ஏற்படும். உடல் ஆரோக்கியம் பெறும். மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். மனகுழப்பம் நீங்கும். பண வரத்தை அதிகப்படுத்தும். தொழிலதிபர்கள் அதிக பொருளாதார வரவுகளை பெறுவார்கள்.

உத்தியோகஸ்தர்கள் அரசு தனியார் துறைகளில் உள்ளவர்களும் இதுவரை இருந்த ஆடம்பர செலவினங்களை தவிர்த்து தங்களின் குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும். குடும்பத்தில் கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் உங்கள் நற்செயல்கள் இருக்கும்.

தந்தை வழி சார்ந்த உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தை கண்டு தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டு பெற வருவார்கள். .

பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வேகம் காணப்படும். சக மாணவர்களிடம் சுமுகமாக அனுசரித்து போவது நல்லது.

### துலாம்

இந்த வாரம் பொருளாதார முன்னேற்றம் பண வரவில் திருப்தி ஆகியவை இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழிலுக்கு புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் பணியாளர்களிடம் நீங்கள் காட்டி வந்த கடுமையான போக்கு மாறி உங்கள் செயலில் கனிவான தன்மை நிறைந்து இருக்கும். குடும்பத்தில் திருமணம் ஆனவர்களுக்கு புத்திரப்பேறு கிடைக்கும். வயது வந்த புத்திரர்கள் உள்ளவர்களுக்கு நல் உதவிகளும் கிடைக்க பெறும். தம்பதிகள் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். ஆயுள் அபிவிருத்தி அடைவதற்கான வகையில் கிரகங்கள் செயல்பட உள்ளதால் அதற்கேற்றவாறு பழக்க வழக்கங்களை அமைத்துக்கொள்ளுங்கள். பெண்கள் பணியில் ஈடுபட்டுள்ள தொழில் மேன்மை பெறுவார்கள். கலைத்துறையினர் நிறைவான பொருளாதாரம் பெறுவார்கள். சுமூகமான உறவு ஏற்படும். மாணவர்களுக்கு சாமர்த்தியமான செயல்களால் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள்.

### விருச்சிகம்

இந்த வாரம் எதிர்ப்புகள் விலகும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். பண வரத்து அதிகரிக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்களின் நட்பும் அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். தொழிலதிபர்கள் புதிய வாடிக்கையாளர்களை நிரம்ப பெறுவார்கள். நன்மதிப்பும் பொருளாதார உயர்வும் பெறுவார்கள்.

உத்தியோகஸ்தர்கள்: அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிபவர்களின் செயலில் இருந்த மந்த நிலைகள் நீங்கி சுறுசுறுப்பான செயல்பாடுகள் உருவாகும். குடும்பத்தில் கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் அனுகூல பயன்கள் உண்டாகும். உறவினர்கள் உங்கள் வளர்ச்சி கண்டு சிறிது பொறாமைப்படுவார்கள்.

பெண்களுக்கு சீரான வாய்ப்புகள் வரும். குழப்பமான மனநிலை அகலும். கலைத்துறையினர் முன்யோசனையுடன் திட்டமிடல் அவசியம். புதிய உற்சாகமும் நம்பிக்கையும் கிடைக்கும். மாணவர்களுக்கு தொழிற் கல்வி கற்பதில் ஆர்வம் உண்டாகும். திட்டமிட்டு படிப்பது எதிர்காலத்திற்கு உதவும். திறமையுடன் காரியங்களை செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றினாலும் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் செயல்படும் ஆற்றலைப் பெறுவீர்கள்..

### தனுசு

இந்த வாரம் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த தடங்கல் நீங்கும். தேவையற்ற மனக் கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் வேகமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் மந்தமான போக்கு நீங்கும். கிடப்பில் இருந்த கடன்கள் வசூலாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மன வருத்தத்தை தருவதாக இருக்கலாம். பிள்ளைகளுடன் அனுசரித்து செல்வது நன்மையை தரும். கணவன், மனைவிக்கு இடையே திடீர் மன வருத்தம் அடையும்படியான சூழ்நிலை வரலாம் கவனம் தேவை.

பெண்கள் பணிபுரிபவர்கள் மேல் அதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெறுவார்கள். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் வந்து கொட்டும். தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். மாணவர்கள் தேவையான பொருளாதார வசதிகள் தன்னிறைவாய் கிடைக்கும்.

### மகரம்

இந்த வாரம் புதனின் சஞ்சாரம் பண வரத்தைத் தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நீண்டதூர பயணங்கள் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தடங்கல்கள் அகலும் . புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள்.

சிலருக்கு புதிய பதவி அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவார்கள். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகை இருக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். பிள்ளைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள். பெண்களுக்கு உங்களது பொருள்களை கவனமாக பாதுகாத்துக்கொள்வது நல்லது.

அரசியல் துறையினர் வீண் பிரச்சனைகளில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவது நன்மை தரும். கலைத் துறையினருக்கு நீண்ட நாள் கோரிக்கைகள் நிறைவேறும். மாணவர்கள் முதல்தர மாணவனாக தேர்ச்சி பெறுவார்கள். படிப்பினில் ஆர்வம் காட்டி பெற்றோருக்கு நற்பெயர் வாங்கித்தருவர்.

### கும்பம்

இந்த வாரம் தந்தையின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தானதர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்டதூர பயணங்கள் செல்ல நேரலாம். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைபளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம்.

குடும்பத்தில் இருப்பவர்கள் அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்கள், அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு அடுத்தவர்களின் வேலைக்காக வீணாக அலைய நேரிடும்.

கலைத் துறையினருக்கு மனோ தைரியம் அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற முழு மூச்சாக பாடுபடு வீர்கள். புதிய நட்பு கிடைப்பதுடன் அவர்களது ஆலோசனையும் வெற்றிக்கு உதவும்.

### மீனம்

இந்த வாரம் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல் திறன் அதிகரிக்கும். மேல் அதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே ஒற்றுமை உண்டாகும்.

சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும்.

திருமணம் தொடர்பான பேச்சுகள் சாதகமாக முடியும். வீடு, வாகனம் வாங்குவது அல்லது புதுப்பிப்பதில் நாட்டம் அதிகரிக்கும்.

பெண்களுக்கு எடுத்த காரியம் நல்லபடியாக நடந்து முடியும். கலைத்துறையினர் மனதில் எதை பற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பீர்கள்.

மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெறும். மாணவர்களுக்கு கல்வியில் சீரான போக்கு காணப்படும். கூடுதல் மதிப்பெண் பெற கூடுதலாக படிக்க வேண்டி இருக்கும்.

# சட்டமன்ற தேர்தல்: சென்னையில் உள்ள 16 தொகுதிகளிலும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு



**சென்னை, மார்ச் 22:**
சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் உள்ள 16 தொகுதிகளிலும் வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர்கள் வாக்களிப்பதை உறுதி செய்திடும் வகையில், வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் மூலம் பல்வகையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலமாக வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி நேற்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாடசாலை தெருவில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் தேசிய மாணவர் படை, நாட்டு நலத்திட்டப் பணி மாணவர்கள் மனித சங்கிலி மூலம் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கினர்.

ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மஞ்சக்கொல்லை தெருவில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தேர்தல் நாள் குறித்த ரங்கோலி கோலமிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பொதுமக்கள் மனித சங்கிலி மூலம் தேர்தல் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, வாக்காளர்களுக்கு 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டனர்.

இதைப் போன்று அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் பல்வகையான தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### ஓய்வு பெற்ற தலைமைச் செயலக அதிகாரி வீட்டில் திருடிய 2 இளைஞர்கள் கைது

**சென்னை, மார்ச் 22:**
ஓய்வு பெற்ற தலைமைச் செயலக அதிகாரி வீட்டில் திருடிய இருவர் கைது செய்யப்பட்டனர். சென்னை பெரவள்ளூரில் உள்ள பெரியார் நகர் 1-வது தெருவில் வசிப்பவர் அசோக்குமார் (72). தலைமைச் செயலகத்தில் இணைச் செயலாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

இவர் கடந்த 17-ம் தேதி வீட்டைப் பூட்டிவிட்டு மனைவியுடன் வேளச்சேரியிலுள்ள அண்ணன் வீட்டுக்குச் சென்றார். மறுநாள் காலை வீடு திரும்பியபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, பீரோவில் வைத்திருந்த 22 பவுன் தங்க நகைகள், 2 கைக்கடிகாரங்கள், ரூ.20 ஆயிரம் மற்றும் பட்டுப் புடவைகள் திருடுபோயிருப்பது தெரியவந்தது.

அதிர்ச்சி அடைந்த அவர் இது தொடர்பாக பெரவள்ளூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல்கட்டமாக சிசிடிவி கேமரா காட்சிகள் அடிப்படையில் ஆராயப்பட்டது.

இதில் அசோக்குமார் வீட்டில் திருட்டில் ஈடுபட்டது திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தைச் சேர்ந்த முருகன் என்ற தீனா (28), ஜெகதீஷ் (28) என்பது தெரியவந்தது.

தலைமறைவாக இருந்த இருவரையும் போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் முருகன் பெரியபாளையம் காவல் நிலைய சரித்திரப் பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கெனவே 15 திருட்டு வழக்குகளும், ஜெகதீஷ் மீது 3 திருட்டு வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. இதையடுத்து, இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

### ரூ.77 லட்சம் முதலீடு வசூலித்து மோசடி: நிதி நிறுவன நிர்வாகிகளுக்கு சிறை தண்டனை



**சென்னை, மார்ச் 22:**
அதிக லாபம் தருவதாகக் கூறி ரூ. 77 லட்சம் வரை முதலீடுகளை வசூலித்து மோசடியில் ஈடுபட்ட நிதி நிறுவன நிர்வாகிகளுக்கு 4 ஆண்டு கள் சிறை தண்டனை விதித்து சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் ரயில் நிலையம் அருகே கிரீன் வேர்ல்டு பவுண்டேஷன் டிரஸ்ட் என்ற நிதி நிறுவனத்தை அப்பகுதியை சேர்ந்த பிரசன்னா, கோவையை சேர்ந்த சரவணன், கூடுவாஞ்சேரி நந்திவரத்தைச் சேர்ந்த நீலகண்டன் ஆகியோர் கூட்டாக நடத்தி வந்தனர்.

அதிக லாபம் தருவதாகக் கூறி ரூ.77 லட்சம் வரை முதலீடுகளை வசூலித்த இவர்கள், உறுதியளித்த தொகையை தராமல், குறைந்த தொகையை திருப்பிக் கொடுத்துள்ளனர்.

இதையடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின் பேரில் நிதி நிறுவன நிர்வாகிகள் 3 பேர் மீதும் செங்கல்பட்டு பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கு சென்னை நிதி நிறுவன மோசடி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.முருகானந்தம் முன்பாக விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் டி.பாபு ஆஜராகி வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, குற்றம்சாட்டப்பட்ட பிரசன்னா, சரவணன், நீலகண்டன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.13.96 லட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இந்த அபராதத் தொகையில் முதலீட்டாளர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், இழப்பீடு போக மீதித்தொகை இருந்தால் அதை அரசின் கணக்கில் சேர்க்க வேண்டும், என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

### ஐபிஎல் தொடரில் இந்திய வீரர்களின் செயல் திறனை கண்காணிக்க திட்டம்

**புதுடெல்லி, மார்ச் 22:**
ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடர் வரும் 2027-ம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் மாதங்களில் தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே, நமீபியா நாடுகளில் நடைபெற உள்ளது. இன்னும் ஒரு வருடம் உள்ள நிலையில், இந்த தொடருக்கான அணியை கட்டமைக்கும் முயற்சியில் இந்திய அணியின் தேர்வுக்குழுவினர் களமிறங்கி உள்ளனர். இந்த வகையில், 2027-ம் ஆண்டு உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணியின் 20 சாத்தியமான வீரர்கள் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களின் செயல் திறன்களை வரும் 28-ம் தேதி தொடங்க உள்ள ஐபிஎல் தொடரின் போது, அஜித் அகர்கர் தலைமையிலான தேர்வுக்குழுவினர் கூர்ந்து கவனிப்பார்கள் என்று பிசிசிஐ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேர்வுக்குழுவில் எஸ்.எஸ்.தாஸ், ஆர்.பி.சிங், அஜய் ராத்ரா, பிரக்யான் ஓஜா ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். ஐபிஎல் தொடரின் போது தேர்வுக் குழு உறுப்பினர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மைதானங்களுக்கு நேரில் சென்று போட்டிகளைக் கண்காணிப்பார்கள் என்றும், மற்ற போட்டிகளைத் தொலைக்காட்சியின் வாயிலாகக் கவனிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான ஐபிஎல் தொடர் வரும் 28-ம் தேதி பெங்களூருவில் தொடங்குகிறது. அன்றைய தினம் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியுடன் பலப்பரீட்சை நடத்துகிறது. அஜித் அகர்கர் மும்பையில் வசித்து வருகிறார். இதனால் அவர், அங்கு நடைபெறும் போட்டிகளை நேரில் பார்வையிடுவார்.

எஸ்.எஸ்.தாஸ் கொல்கத்தாவில் நடைபெறும் போட்டிகளையும், ஆர்.பி.சிங், விஜய் ராத்ரா ஆகியோர் டெல்லியில் நடைபெறும் போட்டிகளையும் பார்வையிடக்கூடும். பிரக்யான் ஓஜா பெங்களூரு மற்றும் ஹைதராபாத்தில் நடைபெறும் போட்டிகளை பார்வையிட உள்ளனர்.

### அரை இறுதியில் தன்வி சர்மா




**ஆர்லியன்ஸ், மார்ச் 22:**
பிரான்ஸ் நாட்டில் ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் உலகத் தரவரிசையில் 38-வது இடத்தில் உள்ள இந்தியாவின் தன்வி சர்மா, 23-வது இடத்தில் உள்ள ஜப்பானின் நட்சுகி நிடைராவுடன் மோதினார். 43 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தன்வி சர்மா 21-14, 21-14 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதி சுற்றுக்கு முன்னேறினார். ஆடவர் இரட்டையர் பிரிவு கால் இறுதி சுற்றில் இந்தியாவின் ஹரிகரன் அம்சகருணன், அர்ஜுன் ஜோடி 12-21, 20-22 என்ற செட் கணக்கில் கனடாவின் லியோ ரோலி கார்னாண்டோ, பகாஸ் மவுலானா ஜோடியிடம் தோல்வி அடைந்தது.

# சென்னையில் முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு தபால் வாக்கு விண்ணப்பப் படிவம் விநியோகம்



**சென்னை, மார்ச் 22:**
தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 அட்டவணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் 85 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் 40 % மேற்பட்ட வரையறுக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட மாற்றுத்திறனாளிகள் தங்களது வீட்டிலிருந்தபடியே வாக்களிக்கும் வசதியை வழங்கியுள்ளது.

இந்த வசதியை பயன்படுத்த விரும்பும் தகுதியுள்ள வாக்காளர்கள், படிவம் 12D (FORM 12D)-ஐ சமர்ப்பித்து வீட்டிலிருந்து வாக்களிக்கும் விருப்பத்தை தெரிவிப்பவர்களுக்கு படிவம் 12D வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தகுதி பெற்ற 85 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட வரையறுக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் வீட்டிற்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) நேரடியாகச் சென்று படிவம் 12D-ஐ வழங்குவார்கள். அதேபோல், நிரப்பப்பட்ட படிவத்தையும் அவர்களிடமிருந்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் நேரடியாக பெற்றுக் கொள்வார்கள்.

இந்த 12D படிவம் தேர்தல் அறிவிப்பு வெளியான நாளிலிருந்து தொடங்கி அந்த தேர்தலுக்கான அரசிதழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளுக்கு அடுத்த 5 நாட்களுக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் கிடைக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதாவது பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 12D ஐ ஏப்ரல் மாதம் 4-ம் தேதிக்குள் திரும்ப வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை தொடர்பு கொள்ள இயலாதவர்கள் 1913 (அ) மாவட்ட தேர்தல் அலுவலரின் கட்டுப்பாட்டு அறை கட்டணமில்லா தொலைபேசி எண், 1800 425 7012 ஐ தொடர்பு கொள்ளலாம், கட்டுப்பாட்டு அறை அலுவலர்கள் இந்த தகவலை தொடர்புடைய வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு தெரிவித்து 12D படிவம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்,

எனவே, மேற்கண்ட பிரிவில் தகுதி பெற்றுள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வீட்டிலிருந்து வாக்களிக்கும் வசதியைப் பயன்படுத்த விரும்பினால் படிவம் 12D மூலம் தங்கள் விருப்பத்தை தெரிவிக்கலாம்.

மேலும், இந்த வசதி முழுமையாக விருப்பத்தேர்வாகும். வாக்குச்சாவடியில் நேரில் சென்று வாக்களிக்க விரும்பும் தகுதி பெற்ற வாக்காளர்கள் படிவம் 12D சமர்ப்பிக்க தேவையில்லை, அவர்கள் வழக்கம்போல் தங்களுக்குரிய வாக்குச்சாவடியில் நேரில் சென்று வாக்களிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தெரிவித்தார்.

# கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு: திருவண்ணாமலையில் பக்தர்களுக்கு லட்டு பிரசாரம் நிறுத்தம்



**திருவண்ணாமலை, மார்ச் 22:**
திருவண்ணாமலையில் பிரசித்தி பெற்ற அருணாச்சலேசுவரர் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளாக லட்டு பிரசாதம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த லட்டுகள் அனைத்தும் கோவில் நிர்வாகம் சார்பில் தயாரிக்கப்படுவதுடன், முறுக்கு, அதிரசம், எல்லடை ஆகிய பிரசாதங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த நிலையில், தற்போது ஈரான் - இஸ்ரேல் போர் பதற்றத்தால், வணிக கியாஸ் சிலிண்டர்கள் விநியோகத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், திருவண்ணாமலை கோவிலில் இலவச லட்டு தயாரிக்கும் பணியில் சிக்கல் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, கோவில் நிர்வாகம், பக்தர்களுக்கு இலவசமாக லட்டு தயாரித்து வழங்குவதை நிறுத்தியுள்ளது.

மேலும், விற்பனைக்காக தயார் செய்யப்படும் முறுக்கு, அதிரசம், எல்லடை ஆகியவையும் நிறுத்தப்பட்டுள்ளன. அடுத்து, விறகு அடுப்பு மூலம் லட்டு தயாரிக்க அரசின் அனுமதியை கோவில் நிர்வாகம் கேட்டுள்ளதாக தெரிகிறது. அனுமதி கிடைத்தவுடன் விறகு அடுப்பு மூலம் லட்டு தயாரிக்கும் பணி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலை மீண்டும் அதிரடி வீழ்ச்சி - பவுனுக்கு ரூ.2,640 குறைவு!

**சென்னை, மார்ச் 22:**
22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (மார்ச் 21) பவுனுக்கு ரூ.2,640 குறைந்துள்ளது. வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.10,000 என குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் இடையிலான போர் காரணமாக தங்கத்தின் விலையில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் தங்கம் விலை சரிந்தது. சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.333 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,620-க்கும், பவுனுக்கு ரூ.2,640 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,08,960-க்கும் விற்பனை ஆகிறது. 24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.2,880 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,18,864-க்கு விற்பனை ஆகிறது.

இதேபோல் வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து, ஒரு கிராம் ரூ.250-க்கு விற்பனை ஆகிறது. ஒரு கிலோ கட்டி விலை கிலோவுக்கு ரூ.10,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,50,000-க்கு விற்பனை ஆகிறது.

# அரசு பள்ளிகளில் 44 ஆயிரம் மாணவர்கள் முதல் வகுப்பில் சேர்க்கை



**சென்னை, மார்ச் 22:**
தமிழக அரசு பள்ளிகளில் கடந்த 2025-26 கல்வியாண்டில் 3 லட்சம் மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டனர்.

இந்த கல்வியாண்டில் (2026-27) மாணவர் சேர்க்கையை 5 லட்சமாக உயர்த்த தொடக்க கல்வித் துறை சார்பில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக, அரசு பள்ளிகளில் ஏப்ரல் மாதத்தில்தான் மாணவர் சேர்க்கை தொடங்கும். தற்போது, தனியார் பள்ளிகளுக்கு போட்டியாக அரசு பள்ளிகளிலும் மார்ச் மாதமே மாணவர் சேர்க்கை தொடங்குகிறது.

அந்த வகையில், கடந்த 2-ந் தேதி தமிழக அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை தொடங்கியது.

5 வயது பூர்த்தியான குழந்தைகள் பற்றிய விவரங்களை தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அங்கன்வாடிகளில் சேகரித்து, வரும் கல்வியாண்டில் முதல் வகுப்பில் சேர்த்துள்ளனர்.

இதன்படி, அரசு தொடக்கப் பள்ளிகளில் கடந்த 20 நாட்களில் 44,396 மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

# புதிய வருமான வரிச் சட்டம் ஏப்ரல் 1 முதல் அமல்: விதிகளை அறிவிக்கை செய்தது சிபிடிடி

புதுடெல்லி, மார்ச் 22:




எளிமைப்படுத்தப்பட்ட புதிய வருமான வரிச் சட்டம் 2025-க்கான விதிகளை மத்திய நேரடி வரிகள் வாரியம் (சிபிடிடி) வெள்ளிக்கிழமை அறிவிக்கை செய்தது.

'வருமான வரி விதிகள் 2026' என்ற பெயரிலான இந்த விதிகள், வரும் ஏப்ரல் 1-ஆம் தேதிமுதல் அமலுக்கு வரும்' என்று அரசிதழ் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில், ஊதியதாரர்களுக்கு வீட்டு வாடகைப் படிக்கான வரிச் சலுகைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், வீட்டு உரிமையாளர் - வாடகைதாரர் இடையேயான உறவு குறித்த விவரங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

60 ஆண்டுகள் பழைமையான 'வருமான வரிச் சட்டம் 1961'-ஐ மாற்றும் வகையில், புதிய வருமான வரிச் சட்ட மசோதாவுக்கு நாடாளுமன்றம் கடந்த 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12-ஆம் தேதி ஒப்புதல் அளித்தது. இந்தப் புதிய சட்ட மசோதாவில் புதிய வரி விகிதங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை; மாறாக, கடினமான வருமான வரிச் சட்டங்களை வரி செலுத்துவோர் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் சட்டத்தின் மொழி நடை மட்டும் எளிமைப்படுத்தப்பட்டது.

குடியரசுத் தலைவரின் ஒப்புதலைத் தொடர்ந்து இந்த மசோதா சட்டமாக நிறைவேறியது. சட்டப் பிரிவுகளின் எண்ணிக்கை 819-லிருந்து 536-ஆகவும், சட்டத் தொகுதிகளின் எண்ணிக்கை 47-லிருந்து 23-ஆகவும் புதிய சட்டத்தில் குறைக்கப்பட்டது.

வார்த்தைகளின்எண்ணிக்கை 5.12 லட்சத்திலிருந்து 2.6 லட்சமாக குறைக்கப்பட்டது. வரி விகித கணக்கு விவரத்தை வரி செலுத்துவோர் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் 39 புதிய வரி கணக்கீடு அட்டவணைகளும், 40 புதிய கணக்கீட்டு விதிமுறைகளும் புதிய சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

# இந்திய பல் மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக தேசிய பல் மருத்துவ ஆணையம்: மத்திய அரசு அமைப்பு

புதுடெல்லி, மார்ச் 22:

இந்தியபல்மருத்துவகவுன்சிலுக்குமாற்றாகதேசியபல் மருத்துவ ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்திய பல் மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக 3 தன்னாட்சி வாரியங்களுடன் தேசிய பல் மருத்துவ ஆணையத்தை மத்திய அரசு அமைத்துள்ளது. பல் மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும், அந்தக் கல்வி உலகளாவிய தரநிலைக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்ற நோக்கில், இந்த முக்கிய சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆணையத்தின் பணி என்ன?: தேசிய பல் மருத்துவ ஆணைய சட்டப் பிரிவுகளை அமல்படுத்துவதற்கான விதிமுறைகளை வகுத்தல், பல் மருத்துக் கல்வி நிறுவனங்களின் தரமதிப்பீட்டை மேற்கொள்ளுதல், பல் மருத்துவ ஆராய்ச்சியை ஊக்குவித்தல், தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில் கட்டண விதிமுறைகளுக்கு வழிகாட்டுதல்களை வகுத்தல், பொது சுகாதாரப் பல் மருத்துவம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில் தர்மம் ஆகியவற்றுக்கு தரநிலைகளை உருவாக்குதல் ஆகிய பணிகளைத் தேசிய பல் மருத்துவ ஆணையம் மேற்கொள்ளும். இந்த ஆணையத்தின் தலைவராக மருத்துவர்சஞ்சய்திவாரி,பகுதிநேரஉறுப்பினராகமருத்துவர் மௌசுமி கோஸ்வாமி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# 25 % கட்டணத்தில் தற்காலிக தடையில்லாச் சான்றிதழ்: ஜல் போர்டு அனுமதி

புதுடெல்லி, மார்ச் 22:

கட்டுமான தொழில் நிறுவனங்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் நிதிச் சுமையைக் குறைக்கும் வகையில், 25 சதவீதத் தொகையைச் செலுத்தி தற்காலிக தடையில்லாச் சான்றிதழ் (என்ஓசி) பெற தில்லி ஜல் போர்டு (டிஜேபி) வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பாக தில்லி நீர்வளத் துறை அமைச்சர் பர்வேஷ் சாஹிப் சிங் கூறியதாவது: என்ஓசி சான்றிதழ்களுக்கு அதிகப்படியான கட்டணம் முன்பணமாக வசூலிக்கப்படுவதால் பல்வேறு கட்டுமான திட்டங்கள் நிதி நெருக்கடியால் தடைபடுகின்றன மற்றும் தாமதமாகின்றன. 25 சதவீத கட்டணம் மூலம் தற்காலிக சான்றிதழ்களைப் பெறுவது இத்தகைய திட்டங்களுக்கு நிவாரணம் அளிக்கும். மீதமுள்ள தொகையை பின்னர் கட்டணச் செயல்முறையின்போது செலுத்தலாம். அதிகப்படியான கட்டணம் வீடுகள் கட்டுமானத்தில் தடையாக உள்ளதாக பல்வேறு புகார்கள் வந்துள்ளன. இது குடிமக்களுக்கும் அமைப்புக்கும் உகந்ததாக இல்லை. எனவே இதை மாற்ற தில்லி ஜல் போர்டு திட்டமிட்டு இந்த சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என தெரிவித்தார்.

# விபத்தில் பாதிக்கப்பட்டவர் குடும்பத்துக்கு ரூ.61 லட்சம் இழப்பீடு: தீர்ப்பாயம் உத்தரவு

புதுடெல்லி, மார்ச் 22:

உத்தர பிரதேசத்தின் காஜியாபாத்தில் 2013-இல் நடைபெற்ற விபத்தின்போது கடுமையான பாதிப்புக்கு உள்ளான சத்யா வீர் சிங் குடும்பத்திற்கு 12 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.61 லட்சம் இழப்பீடு வழங்க தில்லி மோட்டார் விபத்து இழப்பீடு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

காஜியாபாத்தின் ராஜ் நகர் விரிவாக்கச் சாலையில் 2013, செப்.25-இல் இந்த விபத்து நிகழ்ந்தது. இருசக்கர வாகனத்தில் சென்ற சத்யா வீர் சிங் மீது வேகமாக வந்த கார் மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு 90 சதவீதம் மூளை செயலிழந்தது. ஆனால், அவர் முற்றிலும் செயல்பாடற்று போனதால் இதை 100 சதவீத குறைபாடாக தீர்ப்பாயம் ஏற்றுக்கொண்டது.

இது தொடர்பாக இழப்பீடு கோரி 2014-இல் மனு தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அது தள்ளுபடி செய்யப்பட்டு தில்லி உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் மீண்டும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையின்போது பாதிக்கப்பட்ட வீர் சிங் உயிரிழந்ததைத் தொடர்ந்து அவரது வாரிசுகள் இந்த வழக்கைத் தொடர்ந்தனர்.

கடந்தாண்டு பிப்.11-இல் சத்யா வீர் சிங் உயிரிழந்தார். இருப்பினும், இதை விபத்துடன் தொடர்புபடுத்த தீர்ப்பாயம் மறுத்துவிட்டது.

கார் ஓட்டுநரின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் தெரிவித்தன. இதைத்தொடர்ந்து, இந்த மனுவை விசாரித்த அதிகாரி விஜய் குமார் ஜா, பாதிக்கப்பட்டவரின் மருத்துவ செலவுக்கு ரூ.9.38 லட்சம், எதிர்கால வருமான இழப்புக்காக ரூ.21.93 லட்சம் மற்றும் உதவியாளர் கட்டணங்களுக்காக ரூ.16.62 லட்சம் உள்பட மொத்தம் ரூ.61 லட்சத்துக்கு இழப்பீடு வழங்க உத்தரவிட்டார். மேலும், 30 நாள்களுக்குள் இந்தத் தொகையை பாதிக்கப்பட்டவரின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

# பண மோசடி வழக்கு: பேர்ல்ஸ் குழுமத்தின் ரூ.5,000 கோடி சொத்துகளை முடக்கிய அமலாக்கத் துறை

புதுடெல்லி, மார்ச் 22:



பண முறைகேடு தடுப்புச் சட்ட வழக்கில், சத்தீஸ்கரைச் சேர்ந்த பேர்ல்ஸ் குழுமத்துக்கு (பிஏசிஎல்) சொந்தமான மேலும் ரூ.5,000 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது.

இது தொடர்பாக அமலாக்கத் துறை வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின் (பிஎம்எல்ஏ) கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பேர்ல்ஸ் குழுமத்துக்குச் சொந்தமாக தில்லி, பஞ்சாப் உள்ளிட்டப் பகுதிகளில் அமைந்திருந்த 126 அசையா சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு ரூ. 5,046.91 கோடி ஆகும். இதன்மூலம், இந்தக் குழுமத்துக்குச் சொந்தமாக இந்தியா மற்றும் வெளிநாடுகளில் அமைந்திருந்த ரூ. 22,656.91 கோடி சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2024-ஆம் ஆண்டு மறைந்த நிர்மல் சிங் பாங்கூ என்பவருக்குச் சொந்தமான இந்த ரியல் எஸ்டேட் நிறுவனம், விவசாய நிலங்கள் தருவதாகக் கூறி லட்சக்கணக்கானோரிடம் ரூ. 48,000 கோடி வரை வசூலித்து மோசடி செய்தது.

இதுதொடர்பாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் அந்த நிறுவனத்தின் மீது சிபிஐ கடந்த 2014-இல் வழக்குப் பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியது. சிபிஐ வழக்கின் அடிப்படையில், அமலாக்கத் துறையும் கடந்த 2016-இல் பண முறைகேடு வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டது. இதுவரை, இந்த வழக்கில் 5 குற்றப்பத்திரிகைகளை அமலாக்கத் துறை தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்குகளை விசாரித்த உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்பேரில், முதலீட்டாளர்களுக்குப் பணத்தைத் திருப்பித் தர குழுமத்தின் சொத்துகள் விற்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், இந்தக் குழுமத்துக்குச் சொந்தமான சொத்துகளை அமலாக்கத் துறை அடையாளம் கண்டு தொடர்ந்து முடக்கி வருகிறது.

# படங்களின் ஆபாச சித்தரிப்பு: எலான் மஸ்க்கின் ஏ.ஐ. நிறுவனம் மீது அமெரிக்க மாணவிகள் வழக்கு

புதுடெல்லி, மார்ச் 22:




அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க்கிற்குச் சொந்தமான 'எக்ஸ்ஏஐ' நிறுவனத்தின் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தங்களின் புகைப்படங்களை ஆபாசமாகச் சித்தரித்ததாகக் கூறி, அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தைச் சேர்ந்த 3 பள்ளி மாணவிகள் வழக்குத் தொடுத்துள்ளனர்.

பள்ளி ஆண்டுமலர் மற்றும் விழாக்களில் எடுக்கப்பட்ட இவர்களின் சாதாரணப் புகைப்படங்களை, அடையாளம் தெரியாத நபர்கள் 'க்ராக்' ஏ.ஐ. கருவி மூலம் ஆபாசப் படங்களாகவும், விடியோக்களாகவும் மாற்றியுள்ளனர்.

பிற ஏ.ஐ. நிறுவனங்கள் ஆபாச உள்ளடக்கங்களைத் தடை செய்துள்ள நிலையில், மஸ்க்கின் நிறுவனம் மட்டும் 'கட்டுப்பாடற்ற' உள்ளடக்கங்களை உருவாக்குவதை ஒரு வணிக உத்தியாக முன்னெடுப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்விவகாரத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறார்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், இந்த வழக்கை ஒரு கூட்டு வழக்காக அங்கீகரிக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

இக்குற்றச்சாட்டுகள் குறித்து எக்ஸ்ஏஐ நிறுவனம் பதிலளிக்காத நிலையில், ஒருவரின் அனுமதியின்றி ஆபாசமாகச் சித்தரிக்கும் உள்ளடக்கங்களுக்குத் தங்கள் தளத்தில் இடமில்லை என 'எக்ஸ்' சமூக ஊடகம் மட்டும் விளக்கம் அளித்துள்ளது.

# அரிய வகை புவி காந்த உற்பத்தி ஆலைகள் அமைப்பதற்கான ஏலம் தொடக்கம்: மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, மார்ச் 22:

ஆண்டுக்கு 6,000 மெட்ரிக் டன் (எம்டிபிஏ) அரிய வகை புவி காந்தத்தை உற்பத்தி செய்யும் ஆலைகளை அமைப்பதற்கான ஏல நடைமுறைகளை மத்திய அரசு வெள்ளிக்கிழமை தொடங்கியது.

ரூ.7,280 கோடியில் சின்டர்ட் அரிய வகை நிரந்தர புவி காந்த உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் இதற்கான ஆலைகளை அமைக்க மத்திய அரசு ஏல அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மின்னணு வாகனங்கள், காற்று விசையாழிகள், நவீன மின்னணு பொருள்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த செயல்பாடுகளுக்கு நியோடைமியம்-இரும்பு-போரான் உள்பட அரிய வகை புவி காந்தங்கள் தேவைப்படுகின்றன. இவை தற்போது சீனாவில் இருந்து அதிகப்படியாக இறக்குமதி செய்யப்படும் நிலையில், அதைக் குறைத்து இந்தியாவை உலகளவில் அரிய வகை புவி காந்த மையமாக மாற்ற மத்திய அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

ஆண்டுக்கு 6,000 மெட்ரிக் டன் (எம்டிபிஏ) அரிய வகை புவி காந்த உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்கான ஏலம் வெள்ளிக்கிழமை தொடங்கியது. ஏல விண்ணப்பத்தை சமர்ப்பிக்க மே 28-ஆம் தேதி வரை காலஅவசாம் வழங்கப்பட்டுள்ளது. ஏலத்துக்கு முந்தைய மாநாடு ஏப்ரல் 7-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தொழில்நுட்ப ஏலம் மே 29-ஆம் தேதி தொடங்குகிறது. மத்திய பொது கொள்முதல் (சிபிபி) வலைதளத்தில் வெளிப்படையான குறைந்த செலவு முறையில் (எல்சிஎஸ்) இணைய வழியில் தொழில்நுட்ப மற்றும் நிதி என இரண்டு கட்டங்களாக ஏலம் நடைபெறுகிறது.

# 'ஏஐ' நுட்பத்தில் தலைவர்களை தவறாக சித்திரிக்கத் தடை: தேர்தல் ஆணையம் எச்சரிக்கை




புதுடெல்லி, மார்ச் 22:

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) நுட்பத்தில் தனி நபர்களின் அடையாளத்தையோ, தோற்றத்தையோ தவறாக சித்திரிக்கும் விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு விளம்பரங்கள் மேற்கொண்டால் அவை 3 மணி நேரத்துக்குள் நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மின்னணு ஊடகங்கள், சமூக ஊடகங்களில் அரசியல் விளம்பரங்களை வெளியிட விரும்பும் அனைத்து அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் மாநில அல்லது மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் முன் அனுமதி பெறுவது கட்டாயம்.

அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் அந்த விளம்பரங்களை ஒளிபரப்புவதற்கு குறைந்தது 3 நாள்களுக்கு முன்னதாகவும், மற்றவர்கள் ஒரு வாரம் முன்னதாகவும் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற 48 மணி நேரத்துக்குள் அவை பரிசீலிக்கப்படும். தேவைப்பட்டால் மேல்முறையீட்டுக்காக இந்திய தேர்தல் ஆணையத்துக்கும் அவை அனுப்பப்படும். டீப் ஃபேக் எனப்படும் துல்லியமான போலி உருவாக்கங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்படும் பதிவுகளால் ஏற்படும் சவால்களைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையம் தீவிர வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. அதன்படி, செயற்கை நுண்ணறிவு அல்லது டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்ட அனைத்து பதிவுகளிலும் குறைந்தது 10 சதவீத அளவுக்கு ஏஐ மூலம் உருவாக்கப்பட்டது என்ற தகவல் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஒருவரின் அனுமதியின்றி அவரது அடையாளம், குரல் அல்லது தோற்றத்தை தவறாகச் சித்திரிக்கும் பதிவுகள் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளன. சமூக வலைதளங்களில் அத்தகைய பதிவுகள் கண்டறியப்பட்டால் 3 மணி நேரத்துக்குள் அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க சர்வதேச எரிசக்தி ஆணையம் யோசனை

புதுடெல்லி, மார்ச் 22:




மேற்காசியப் போரால் கச்சா எண்ணெய், எரிவாயு விலை உயர்ந்து வரும் நிலையில் எரிபொருளை குறைவாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டும் என்று சர்வதேச எரிசக்தி ஆணையம் யோசனை தெரிவித்துள்ளது. இதனைப் பின்பற்றுவதன் மூலம் தனிநபர்கள் பயனடைவதுடன் தேசத்தையும் பொருளாதார பாதிப்புகளில் இருந்து காக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரீஸை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இந்த ஆணையம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

அலுவலகம் உள்ளிட்ட இடங்களுக்கு ஒவ்வொருவரும் தனித்தனி கார்களில் பயணிக்காமல், குழுவாக ஒரே காரில் செல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்தியாவசியத் தேவை ஏற்பட்டால் மட்டுமே விமானப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் அதிகபட்ச வேகத்துக்கான வரம்பை குறைக்க வேண்டும். வீட்டில் இருந்து அலுவலகப் பணிகளை மேற்கொள்வதை அதிகரிக்க வேண்டும். மின்வாகனங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும். எரிவாயுத் தட்டுப்பாட்டை சமாளிக்க உயிரி எரிபொருள் பயன்பாட்டை அதிகரிப்பது, மின்சார அடுப்புகளைப் பயன்படுத்துவது, சூரிய மின் உற்பத்தியை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச கச்சா எண்ணெய் போக்குவரத்தில் சுமார் 20 சதவீதம் ஹோர்முஸ் நீரிணை வழியாகவே நடைபெறுகிறது. இப்போது ஏற்பட்டுள்ள போரால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு, பல நாடுகளுக்கு எரிபொருள் விநியோகம் குறைந்துவிட்டது. விலையும் அதிகரித்துள்ளது.

இதனைச் சமாளிக்க சர்வதேச எரிசக்தி ஆணையத்தில் உறுப்பினராக உள்ள நாடுகள் தங்கள் அவசரகால இருப்பில் உள்ள 400 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய்யை விடுவிக்க கடந்த 11-ஆம் தேதி ஒப்புக் கொண்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையத்தின் செயல் இயக்குநர் ஃபாதிக் பிரோல் இது தொடர்பாக கூறுகையில், 'இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளித்து விநியோகத்தை சீராக்கத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் ஆணையம் வழங்கி வருகிறது. எரிபொருள் விநியோகச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இதில் தொடர்புடைய அனைத்து நாட்டு அரசுகளுடனும் பேச்சு நடத்தப்படுகிறது. முக்கியமாக, அதிக உற்பத்தி செய்யும் நாடுகள், அதிகம் பயன்படுத்தும் நாடுகளுடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளோம்.

# உலகில் எந்த இடத்திலும் எதிரிகளுக்கு பாதுகாப்பு இருக்காது-ஈரான் எச்சரிக்கை

**தெஹ்ரான், மார்ச் 22:**

ஈரான் மீது அமெரிக்க, இஸ்ரேல் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதல் 21 நாளாக நீடித்து வருகிறது. இந்நிலையில், போரை நிறுத்தும் தந்திரமாக மத்திய கிழக்கை தாண்டியும் பயங்கரவாத தாக்குதல் நடத்தப் போவதை ஈரான் சூசகமாக தெரிவித்துள்ளது. ஈரான் ராணுவ மூத்த செய்தித்தொடர்பாளர் ஜெனரல் அபோல்பாஸ்ல் ஷெகார்ச்சி, இதுதொடர்பாக பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:- ஈரான் எதிரிகளை பற்றி எங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. அதன்படி, பூங்காக்கள், பொழுதுபோக்கு பகுதிகள், சுற்றுலா தலங்கள் என உலகத்தில் எந்த இடமும் இப்போது இருந்து அவர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்காது.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஈராக்கில் இருந்து நேட்டோ ஆலோசனை குழு வெளியேறியது

**ஈரான், மார்ச் 22:**

ஈரான் போர் காரணமாக, ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் பிடியில் இருந்து விடுவிக்க தங்களது கூட்டமைப்பான நேட்டோ நாடுகளிடம் அமெரிக்கா ஆதரவு கேட்டது. ஆனால் எந்த நாடும் முழு ஆதரவு அளிக்கவில்லை. இந்த நிலையில் ஈராக்கில் உள்ள பிரிட்டிஷ், பிரெஞ்ச், இத்தாலிய ராணுவ தளங்களில் இருந்த துருப்புகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி உள்ளது.

ஈரானின் தொடர் தாக்குதலைத் தொடர்ந்து இங்கு இயங்கி வந்த நேட்டோ அமைப்பின் ஆலோசனை குழு அங்கிருந்து வெளியேறுவதாக அறிவித்தது. அதன் கடைசித் துருப்பு நேற்று வெளியேறிவிட்டதாக நேட்டோ உயர்மட்ட தளபதி அறிவித்தார். அவர்கள் பாதுகாப்பாக ஐரோப்பாவுக்கு இடம் மாற்றியதாக கூறப்பட்டு உள்ளது.

இந்த ஆலோசனைக் குழுவானது போர் சாரா அமைப்பாகும். இது ஈராக் அதிகாரிகளுக்கு கட்டமைப்பை உருவாக்குவது, படைகளை மேம்படுத்துவது உள்ளிட்ட ஆலோசனை வழங்குவதற்காக செயல்பட்டு வந்தது. இனி இந்த ஆலோசனைக்குழு இத்தாலியின் நோபிள் நகரில் உள்ள நேட்டோவின் தலைமையகத்தில் இருந்து செயல்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

# "ஈரானுக்கு ரஷ்யா இப்போதும் விசுவாசமான நண்பன், நம்பகமான கூட்டாளி!" - புதின்



**மாஸ்கோ, மார்ச் 22:**

ஈரான் - இஸ்ரேல் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், ஈரானுக்கு ரஷ்யா விசுவாசமான நண்பராகவும், நம்பகமான கூட்டாளியாகவும் தொடர்கிறது என்று விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார். ஈரானின் புத்தாண்டை முன்னிட்டு அந்த நாட்டின் உச்ச தலைவர் அயதுல்லா மொஜ்தபா காமேனி, அதிபர் மசூத் பெஷெஷ்கியான் ஆகியோருக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகரஷ்ய அதிபர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஈரானியமக்கள் கடுமையான சோதனைகளை கண்ணியத்துடன் கடந்துவர வேண்டும் என விளாடிமிர் புதின் வாழ்த்தினார். மேலும், இந்த இக்கட்டான நேரத்தில் ஈரானின் விசுவாசமான நண்பனாகவும், நம்பகமான கூட்டாளியாகவும் ரஷ்யா தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஈரானுக்கான ரஷ்ய உதவிகள் குறித்து அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

முன்னதாக, ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேலிய தாக்குதல்கள், ஒட்டுமொத்த மத்திய கிழக்கையும் படுகுழியில் தள்ளி, ஒரு பெரிய உலகளாவிய எரிசக்தி நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளதாக புதின் குற்றம்சாட்டி இருந்தார். ஈரானின் உச்சத் தலைவர் வஞ்சகமான முறையில் படுகொலை செய்யப்பட்டதாகவும் அவர் கண்டனம் தெரிவித்திருந்தார்.

# 4 ஆயிரம் கி.மீ. தொலைவை தாக்கும் ஏவுகணை: அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளை மிரள விட்ட ஈரான்

**தெஹ்ரான், மார்ச் 22:**

அமெரிக்கா-இஸ்ரேல் நாடுகள் நடத்தி வரும் தாக்குதலுக்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இந்திய பெருங்கடலில் உள்ள அமெரிக்க - பிரிட்டன் கூட்டு ராணுவ தளம் மீது கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் இரண்டு ஏவுகணைகளை ஈரான் இன்று ஏவியது. அவற்றில் ஒரு முயற்சி தோல்வியடைந்தது. மற்றொரு ஏவுகணை இடைமறிக்கப்பட்டது.



ஈரானில் இருந்து 4 ஆயிரம் கி.மீ. தொலைவில் உள்ள இந்த இலக்கை குறிவைத்து ஈரான் தாக்க முயன்றது அமெரிக்கா மற்றும் ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளுக்கு அச்சம் ஏற்படுத்தி உள்ளது. இதுவரை 2 ஆயிரம் கி.மீ. சென்று தாக்கும் ஏவுகணைகள் மட்டுமே ஈரானிடம் உள்ளன என நினைத்த மேற்கு உலக நாடுகளை ஈரான் மிரள விட்டுள்ளது. ஈரான் வெளியுலகிற்கு கூறும்போது, தன்னிடம் 2 ஆயிரம் கி.மீ. தொலைவை சென்று தாக்கும் ஏவுகணைகள் மட்டுமே உள்ளன என தொடர்ந்து கூறி வந்தது.

ஆனால் இந்த தாக்குதல் உலக நாடுகளிடையே அச்சம் ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில், சமீபத்தில், அமெரிக்காவின் ரேடார்களில் சிக்காத திறன் வாய்ந்த, அதிநவீன எப்-35 ரக போர் விமானம் ஒன்றை ஈரான் தாக்கியிருந்தது. இது உலக நாடுகளை திகைக்க வைத்தது. இந்த சூழலில், ஈரான் மற்றொரு தாக்குதலை நடத்தி அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளை மிரள விட்டுள்ளது. ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. அது முதற்கொண்டு நடந்த தாக்குதலில் ஈரானில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரான், ஈரானின் தீவு உள்பட லெபனான், சிரியா நாடுகளும் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றன.

ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள், தளபதிகள், அதிகாரிகள் என பலர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மனைவி, மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது. இதற்கு பதிலடியாக ஈரானும், அமெரிக்காவையும், இஸ்ரேலையும் மற்றும் பிற நாடுகளில் அமைந்த அந்நாடுகளின் படை தளங்களை தாக்கி வருகிறது.

# கச்சா எண்ணெய் மீதான தடை நீக்கம்.. அமெரிக்காவின் சலுகையை நிராகரித்த ஈரான்..

**கொழும்பு, மார்ச் 22:**

ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல்போரினால் உயர்ந்துள்ள எண்ணெய் விலைகளைக் குறைக்கும் முயற்சியாக, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான நிர்வாகம், கடல் வழியாக ஈரானின் கச்சா எண்ணெயை கொள்முதல் செய்வதற்கான தடைகளை 30 நாட்களுக்கு தளர்த்தி உள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க கருவூல செயலாளர் பெசென்ட் வெளியிட்டிருந்த பதிவில், "உலகளாவிய பயங்கரவாதத்தின் தலையாக ஈரான் விளங்குகிறது. ஜனாதிபதி டிரம்பின் 'ஆபரேஷன் எபிக் பியூரி' நடவடிக்கை மூலம், நாம் எதிர்பார்த்ததை விடவும் மிக வேகமாக இந்த முக்கியமான போராட்டத்தில் வெற்றி பெற்று வருகிறோம். உலகளாவிய எரிசக்தி உள்கட்டமைப்புக்கு எதிரான ஈரானின் பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பதிலளிக்கும் விதமாக, உலகிற்கான எரிசக்தி விநியோகத்தை அதிகரிக்கவும், உலகளாவிய விநியோகத்தை வலுப்படுத்தவும், சந்தை நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும் டிரம்ப் நிர்வாகம் அமெரிக்காவின் பொருளாதார மற்றும் ராணுவ வலிமையை தொடர்ந்து பயன்படுத்தும்.

தற்போது கடலில் தேங்கியுள்ள ஈரானின் எண்ணெயை விற்பனை செய்ய அனுமதிப்பது மற்றும் குறுகிய கால அங்கீகாரத்தை வழங்கி உள்ளது. உலகிற்கான இந்த தற்போதைய விநியோகத்தால், 14 கோடி பீப்பாய் கச்சாய் எண்ணெயை உலகசந்தைகளுக்கு விரைவாக கொண்டு வரப்படும். இதுவரை, 440 மில்லியன் கூடுதல் பீப்பாய் எண்ணெயை உலக சந்தைக்குக் கொண்டுவர டிரம்ப் நிர்வாகம் பணியாற்றி வருகிறது. டிரம்பின் எரிசக்தி ஆதரவுத் திட்டம், அமெரிக்க எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை உயர்த்தியுள்ளது. இது எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தி, எரிபொருள் செலவுகளையும் குறைத்துள்ளது. இப்போது ஏற்படும் எந்தவொரு குறுகிய கால இடையூறும் இறுதியில் அமெரிக்கர்களுக்கு நீண்ட காலப் பொருளாதார ஆதாயங்களாக மாறும்"என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அமெரிக்காவின் இந்த அனுமதியால் கப்பல்களில் உள்ள 14 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய்சந்தைக்கு வரும் என தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் அமெரிக்காவின் இந்த சலுகையை ஈரான் நிராகரித்துள்ளது. இதன்படி சர்வதேச சந்தைக்கு கூடுதல் கச்சா எண்ணெயை வழங்குவதற்கு தங்களிடம்கையிருப்புஏதுமில்லை என ஈரான் அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

# தென் கொரிய தொழிற்சாலையில் பெரும் தீ விபத்து: 10 பேர் உயிரிழப்பு, 59 பேர் காயம்

**டேஜியோன், மார்ச் 22:**

தென்கொரியாவின் மத்திய நகரமான டேஜியோனில் ஒரு வாகன உதிரிபாகத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். இந்த தீவிபத்தில் 59 பேர் காயமடைந்தனர் என்றும், நான்கு பேரைக் காணவில்லை என்றும் தென் கொரிய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடந்தது என்ன? - தென் கொரியாவின் மத்தியப் பகுதியில் உள்ளது டேஜியோன் நகரம். இங்குள்ள வாகன உதிரிபாகத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று மதியம் தீ விபத்து ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, தீயைக் கட்டுப்படுத்தவும், மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் 500-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள், காவல்துறை, விமானங்கள் மற்றும் அவசரகாலப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட காணொளிகளில், அந்த வளாகத்திலிருந்து அடர்த்தியான சாம்பல் நிறப் புகை வெளியேறுவதும், சில தொழிலாளர்கள் ஒரு கட்டிடத்திலிருந்து குதிக்கும் காட்சிகளும் வெளியாகி அதிர்ச்சியைக் கடத்தின.


இந்த தீவிபத்து குறித்து பேசிய தீயணைப்புத் தலைவர் நாம் டியூக் வூ, "தீ விபத்தில் ஒரு தொழிற்சாலை கட்டிடம் முற்றிலுமாக அழிந்துவிட்டது. அது இடிந்து விழக்கூடும் என்ற அச்சத்தில் தீயணைப்பு வீரர்கள் ஆரம்பத்தில் உள்ளே நுழைய முடியவில்லை. கட்டிடத்தைக் குளிர்விப்பதற்காக ஆளில்லா தீயணைப்பு ரோபோக்களை அதிகாரிகள் பயன்படுத்தி பாதுகாப்பு ஆய்வு நடத்திய பின்னர்தான், காணாமல் போன தொழிலாளர்களைத் தேடும் பணிகள் நேற்றிரவு தொடங்கின.

உள்ளூர் நேரப்படி வெள்ளிக்கிழமை மதியம் சுமார் 1:18 மணியளவில் தீ விபத்து குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை, ஆனால் ஒரு வெடிப்பு ஏற்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

தீயணைப்பு வீரர்கள், தீ அருகிலுள்ள கட்டிடத்திற்குப் பரவாமல் தடுப்பதிலும், அந்த இடத்திலிருந்து ரசாயனங்களை அகற்றுவதிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். இந்த தீ விபத்தில் இதுவரை 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 59 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர், நான்கு பேரைக் காணவில்லை" என்றார்.

# வாட்ஸ் அப்பில் வரும் வேற லெவல் அப்டேட்: இனி ஆடியோ கால்கள் தெளிவாக பேசலாம்

**நியூயார்க், மார்ச் 22:**



வாட்ஸ் அப் செயலி பயனர்களை கவரும் வகையில் பல்வேறு புதுபுது அப்டேட்களை வெளியிட்டு வருகிறது. மெட்டா நிறுவனத்திற்கு சொந்தமான இந்த வாட்ஸ் அப் செயலி இல்லாத ஸ்மார்ட்போன்களே இல்லை என்ற நிலைதான் தற்போது உள்ளது. அதிலும் இந்தியாவில் 50 கோடிக்கும் மேற்பட்ட பயனர்களை வாட்ஸ் அப் நிறுவனம் கொண்டுள்ளது.

வாட்ஸ் அப் செயலி வழியாக மெசேஜ் மட்டும் இன்றி, ஆடியோ, வீடியோ கால்களும் பேச முடியும். இந்த ஆடியோ, வீடியோ கால்கள் பேசும் போது இருந்த ஒரு பிரச்சினைக்கு தீர்வு காணும் விதமாக வாட்ஸ் அப் புதிய அப்டேட் வெளியிட்டுள்ளது.

அதாவது, பயனர்களுக்கு சிறந்த தகவல் தொடர்பு அனுபவத்தை வழங்கும் நோக்கில், வாட்ஸ்அப் செயலியில் நாய்ஸ் கேன்சலேஷன் "noise cancellation" என்ற புதிய வசதியை மெட்டா நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது. வாட்ஸ்அப் மூலம் செய்யப்படும் வாய்ஸ் மற்றும் வீடியோ அழைப்புகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில் இந்த தொழில்நுட்பம் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பொது இடங்களிலும் எவ்வித பின்னணி இரைச்சலும் இன்றி மிகத் தெளிவாக பயனர்களால் பேச முடியும்.

# இந்தியப் பெருங்கடலில் அமெரிக்க - பிரிட்டன் கூட்டு தளத்தின் மீது ஈரான் தாக்குதல்!



**தெஹ்ரான், மார்ச் 22:**

இந்தியப் பெருங்கடலில் உள்ள டியாகோ கார்சியாவில் அமைந்துள்ள அமெரிக்க-பிரிட்டன் கூட்டு ராணுவத் தளத்தின் மீது ஈரான் இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசியதாக 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், "இந்திய பெருங்கடலில் உள்ள டியாகோ கார்சியாவில் அமைந்துள்ள அமெரிக்க - பிரிட்டன் கூட்டு ராணுவத் தளத்தின் மீது ஈரான் இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஈரானில் இருந்து 4,000 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த இலக்கை, இரண்டு ஏவுகணைகளுமே தாக்கவில்லை. அதேநேரத்தில், முன்பு நினைத்ததைவிட அதிக தூரம் செல்லக்கூடிய ஏவுகணைகள் ஈரானிடம் உள்ளன என்பதை இந்த ஏவுகணைச் சோதனை உணர்த்துகிறது. எனினும், இது குறித்து பென்டகன் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது. ஏவுகணைகளில் ஒன்று பறக்கும்போதே செயலிழந்தது. மற்றொன்று அமெரிக்கப் போர்க்கப்பலில் இருந்து ஏவப்பட்ட இடைமறிப்பு ஏவுகணையால் குறிவைக்கப்பட்டது. எனினும், அந்த ஏவுகணை தாக்கப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டிரம்புக்கு ஆச்சரியம் காத்திருக்கிறது: ஈரான் எச்சரிக்கை

**தெஹ்ரான், மார்ச் 22:**

ஈரானை வான் வழியாக தாக்கி வந்த அமெரிக்கா, இனி தரை வழியாகவும் தாக்குதல் நடத்த கூடும் என தகவல் வெளியானது. அதற்கான சாத்தியம் உள்ளது என்றும் அந்நாடு தெரிவித்தது. ஏற்கனவே மோதல், பதற்றம் அதிகரித்து காணப்படும் சூழலில், தரை வழி தாக்குதலுக்கான சாத்தியம் பற்றி அமெரிக்கா பரிசீலித்து வருவது பற்றி, ஈரான் ராணுவ வட்டாரம் தஸ்னிம் என்ற செய்தி நிறுவனத்திற்கு பதிலளித்து உள்ளது. அதில், அமெரிக்காவுக்கு எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளது.



ஈரான் மீது நடத்தப்படும் தரை வழி தாக்குதல் என்பது எங்களுடைய எச்சரிக்கை கோடுகளில் ஒன்றாகும். ஒவ்வோர் எதிரியின் தாக்குதலுக்கும் நாங்கள் ஆச்சரியம் கொடுத்து வருகிறோம். இந்த விசயத்திலும் அதனை நாங்கள் காட்டுவோம் என தெரிவித்து உள்ளது.

எங்களுடைய எரிசக்தி உள்கட்டமைப்பை தாக்கினால், இந்த பகுதியிலுள்ள அனைத்து எரிசக்தி உள்கட்டமைப்புகளும் செயலிழந்து போகும். இந்த முறை நாங்கள் தயாராக உள்ளோம். பயங்கரவாதி டிரம்ப், இந்த விசயத்தில் ஏதேனும் தவறு செய்கிறார்கள் என்றால், அவருக்கு ஆச்சரியம் ஒன்றை நாங்கள் தருவோம்.

எங்களுடைய பூமியில் இருந்து அமெரிக்க ராணுவத்தினரின் சவப்பெட்டிகளை கூட அவரால் அகற்ற முடியாது என ஈரான் ராணுவத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது. ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. அது முதற்கொண்டு நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள், தளபதிகள், அதிகாரிகள் என பலர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மனைவி, மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது. இதற்கு பதிலடியாக ஈரானும், அமெரிக்காவையும், இஸ்ரேலையும் மற்றும் பிற நாடுகளில் அமைந்த அந்நாடுகளின் படை தளங்களை தாக்கி வருகிறது.



# நடன்ஸ் அணுசக்தி நிலையத்தை அமெரிக்க, இஸ்ரேல் படைகள் தாக்கியதாக ஈரான் தகவல்

# போர் அச்சுறுத்தல்! பேச்சுவார்த்தை ஒன்றே வழி





# தமிழ்நாட்டின் வளர்ச்சி முழுமையடைய திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும்

# திருவண்ணாமலையில் பக்தர்களுக்கு லட்டு பிரசாரம் நிறுத்தம்

# தமிழக சட்டமன்ற தேர்தலை நிறுத்தி வைக்க கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு

# வார ராசிபலன்கள்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை இலவச இ-பேப்பர்